வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

வார மலர் ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 31.07.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 237 | பக்கங்கள் : 20




07 சீன – இந்திய மோதல் களமாக இலங்கை?



08 ‘அறகலய’ மக்கள் கிளர்ச்சியும் ஜனாதிபதி ரணிலும்!



10 ரணிலின் தந்திரோபாய நகர்வலையில் சுமந்திரனின் கூட்டமைப்பும் சிக்கியது



11 இம்முறை களைகட்டும் நல்லூர்!


# அரசியல் கைதிகளின் விடுதலைக்கு நீங்கள் முதலிடம் வழங்கவேண்டும்!

## காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் மனோ கணேசன் எம்.பி. நேற்று கோரிக்கை

கொழும்பு, ஜூலை 31

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் என்ற முறையில் சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளீர்கள். ஆட்கடத்தல், முறைதவறிய கைது, அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம், அரசியல் கைதிகள் விடுதலை, மனித உரிமை பேணல், மக்களுக்கு நிவாரணம் ஆகியவற்றை நாம் ஏற்கிறோம். இவை எங்களதும் நீண்டகால கோரிக்கைகள்தான். பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி அரசியல் கைதிகளை விடுவிப்பதில் 10, 15, 20 வருடங்களாக சிறையில் இருந்து, தம் வாழ்வையே இழந்து நிற்கும் தமிழ் அரசியல் கைதிகள் முதலிடம் பெறவேண்டும் என்பதை உறுதி செய்யுங்கள். இல்லாவிட்டால் எமது கட்சி உங்களுடன் ஒத்துழைக்க முடியாது என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். 19



# எரிபொருள் பெற தேவையான 150 மில்லியன் டொலர் இல்லை

## அமைச்சரின் கோரிக்கையை நிராகரித்தது மத்திய வங்கி

கொழும்பு, ஜூலை. 31

அடுத்த மாதத்துக்குத் தேவையான எரிபொருள் கப்பல்களை பெறுவதற்குத் தேவையான 150 மில்லியன் டொலரை தருமாறு, எரிபொருள் அமைச்சர் காஞ்சன விஜேசேகர விடுத்த கோரிக்கையை 19

# ரஞ்சனுக்கு விரைவில் விடுதலை கிடைக்கும்

## சஜித் பிரேமதாஸ நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 31

“மனிதாபிமானம் கொண்ட, மக்கள் மனதை வென்ற அரசியல்வாதியான ரஞ்சன் ராமநாயக்கவுக்கு விரைவில் விடுதலை கிடைக்கும் என நானும் 19

# சர்வகட்சி அரசு இப்போது நகைச்சுவையாகியுள்ளது

## சரத் பொன்சேகா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை. 31

சர்வகட்சி அரசாங்கம் என்ற பேச்சுக்கள் தற்போது நகைச்சுவையாக மாறியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் 19

# நீதி, சமத்துவத்தை காக்கவே நாட்டில் அவசரகாலச் சட்டம்!

## பிரதமர் தினேஷ் குனவர்தன கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 31

பொதுமக்களின் அன்றாட செயற்பாடுகளை வழமைபோல முன்னெடுத்துச் செல்லும் நோக்கிலேயே அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டதாக பிரதமர் தினேஷ் குனவர்தன தெரிவித்துள்ளார்.

கொஸ்கம பொரலுகொட 19

# பயிற்சிக்காக அமெரிக்கா சென்ற கப்பலிலிருந்து தப்பியோடிய இலங்கைக் கடற்படை மாலுமிகள்!

கொழும்பு, ஜூலை 31

அமெரிக்காவில் ரிம் ஒப் தி பசுபிக் பயிற்சியில் இணைவதற்காக அங்கு சென்ற இலங்கை கடற்படையின் ஒன்பது மாலுமிகள் அந்த நாட்டில் தங்கும் நோக்கில் கப்பலில் இருந்து குதித்து தப்பிச் சென்றுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

உலகில் மிகப் பெரிய சர்வதேச கடற்படை பயிற்சியான றிம்பக் 2022 பயிற்சிக்காக கடந்த ஜூன் மாதம் இலங்கையில் இருந்து 50 பேரைக் கொண்ட கடற்படை மாலுமிகள் குழு அமெரிக்கா புறப்பட்டுச் சென்றுள்ளது.

பயிற்சிகளின் பின்னர், இலங்கை கடற்படையின் புதிய கப்பலின் பணியாளர்கள் குழுவுக்கு உதவுவதற்காக இவர்கள் அங்கு தங்க வைக்கப்பட்டி 19

# நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்க ஒரே வழி சர்வகட்சி அமைப்பதே!

## கண்டியில் கூறினார் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, ஜூலை 31

இந்த நாட்டின் பிரச்னைகளை தீர்ப்பதற்கான ஒரே வழி சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதே என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டிக்கு நேற்று விஜயமொன்றை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கண்டி ஜனாதிபதி 19

## தமிழ் முற்போக்கு கூட்டணியின்

# தலைமைப் பதவியில் இருந்து விலகுகிறார் மனோ கணேசன்!

கொழும்பு, ஜூலை 31

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமைப் பதவியில் இருந்து விலகவுள்ளதாக கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் நேற்று அறிவித்தார்.

தனியார் வானொலி ஒன்றில் நேற்று ஒலிபரப்பான அரசியல் நிகழ்வில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: -

மலையகத் தமிழர்களை தேசிய இனமாக அங்கீகரிக்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றோம். அதற்காக மலையக அபிலாஷை ஆவணத்தை முன்னெ 19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# தென்னாசியாவை சூழும் அச்சம்!

1978ல் ஏற்பட்ட ஜே.ஆர் - இந்திரா முரண் மருமகன் ரணிலின் காலத்திலும் தொடருமா? தென் ஆசியாவும், ஆசியாவும், இலங்கை, இந்திய, சீன, அமெரிக்க அரசியல் நகர்வுகளும், ரணிலின் திரிசங்கு நிலையும்.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் சீன கப்பல் தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் தொடர்கின்றன.

சீனாவின் ஆய்வுக் கப்பலான Yuan Wang 5 எனும் கப்பல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை அண்மிக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

சீனாவின் சியாங் துறைமுகத்திலிருந்து கடந்த 13 ஆம் திகதி பயணத்தை ஆரம்பித்த கப்பல், சீனாவின் கிழக்கு கடலில் தற்போது பயணித்துக்கொண்டிருக்கிறது.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு சென்று, அங்கு தனக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொண்டதன் பின்னர் இந்த சீனக் கப்பல் இந்திய பெருங்கடலில் ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதனால், இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தும் சகல விடயங்கள் தொடர்பிலும் மிகுந்த அவதானத்துடன் செயற்படுவதாகவும், கண்காணித்து வருவதாகவும், பாதுகாப்பை உறுதிப்படுத்த எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதற்கு தயாராக இருப்பதாகவும், இந்திய வெளிவிகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி தெரிவித்துள்ளார்.

எனினும் இதற்கு உடனடியாகவே எதிர்வினை ஆற்றியுள்ள சீனா, தமது சட்டபூர்வமான கடல்சார் நடவடிக்கைகளில் "சம்பந்தப்பட்ட தரப்பினர்" தலையிடமாட்டார்கள் என தாம் கருதுவதாக எச்சரித்துள்ளது.

இதேவேளை இலங்கையின் உட்கட்டமைப்பிற்கு வெளிப்படைத்தன்மையற்ற கடனுதவியை வழங்கியமையே இலங்கையின் தற்போதைய நெருக்கடிக்கான முக்கிய காரணி என சமந்தா பவர் (Samantha Power - Administrator of the United States Agency for International Development) அண்மையில் டெல்லியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கும் உடனடியாக பதிலளித்துள்ள சீனா, தமது முதலீடுகளினால் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி வேகமான, மேம்பட்ட நிலையை எட்டியுள்ளதாக கூறியுள்ளது.

குறிப்பாக சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நடைமுறைரீதியிலான ஒத்துழைப்பு, அனைத்து சந்தர்ப்பங்களிலும் விஞ்ஞான ரீதியாகவும் திட்டமிட்ட வகையிலும் முன்னெடுக்கப்படுவதாகவும், இந்த முதலீடுகளில் அரசியல் தலையீடு இல்லை எனவும் சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சாஓ லிஜியேன் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச மூலதன சந்தை மற்றும் பல்வேறு அபிவிருத்தி வங்கிகள் வழங்கிய கடனுதவியை விட சீனாவின் வெளிநாட்டுக் கடன்கள் மிகக் குறைவானது.

இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் குறைந்த வட்டியிலும் நீண்ட கால அடிப்படையிலும் குறித்த கடன் வழங்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்ட வட்டி வீத அதிகரிப்பினால், இலங்கை போன்ற பல வளர்ச்சியடையும் நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் . சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சாஓ லிஜியேன் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு தென்னாசிய - ஆசிய பிராந்திய வல்லாதிக்க போட்டியில் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிக்கியுள்ளாரா என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

அண்மையில் இலங்கை நாடாளுமன்றில் இடம்பெற்ற ஜனாதிபதி தெரிவில் இந்தியாவின் செல்வாக்கு நிலவியதாகவும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸா ஜனாதிபதியாவதனை இந்தியா விரும்பியதாகவும் செய்திகள் வெளியாகி இருந்தன.

இது குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரிடம் இருந்து வெளிவந்த சர்ச்சைக்குரிய கருத்துகள் குறித்தும் இந்தியா தனது மறுப்பை தெரிவித்திருந்தது.

இவை குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடும் அதிருப்தி அடைந்திருந்ததாகவும், இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெயசங்கருடன் இது குறித்து பேசியதாகவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகி இருந்தன. இவ்வாறான ஒரு சூழலில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சீனாவுடனான அண்மைய நெருக்கம், இந்தியாவுக்கான ஒரு எச்சரிக்கையாக இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

ரணிலின் மாமனாரான ஜே. ஆர் ஜெயவர்த்தன 1978ல் தென்னாசிய பிராந்திய சார்க் கட்டமைப்பில் இருந்து தென்கிழக்காசிய கட்டமைப்பான ஆசியானுடன் ஏற்படுத்திக் கொண்ட நெருக்கமும், மேலைத்தேய சார்பும், ஜே.ஆரின் தடியூன்றிப் பாய்தல் நடவடிக்கை என அன்று விமர்சனங்கள் எழுந்திருந்தன.

அந்த நிலை ஜே.ஆருக்கும் அப்போதைய பிரதமர் மறைந்த இந்திராகாந்திக்கும் இடையிலான நேரடி மோதலுக்கு வழிவகுத்தது. அதுமட்டுமல்லாது ஈழ விடுதலை இயக்கங்கள் இந்தியாவில் காலூன்றுவதற்கும் ஜே.ஆர் - இந்திரா முரண்பாடு வழியமைத்தது.

மீண்டும் 2022ல் அவ்வாறானதொரு முரண் நிலை இலங்கை இந்தியாவுக்கிடையில் ஏற்படுமா என்ற அச்சம் தென்னாசியாவை சூழ்ந்துள்ளது.

**- நடராஜா குருபரன்.**

# கடன் செலுத்தாமையால் இலங்கைக்கான அனைத்துத் திட்டங்களும் இடைநிறுத்தம்!

## இலங்கை வர்த்தக சம்மேளனம் கூறுகிறது

கொழும்பு, ஜூலை. 31

கடன்களை செலுத்தாததன் காரணமாக ஜப்பான், இலங்கையில் தனது அனைத்துத் திட்டங்களையும் இடைநிறுத்தியுள்ளதாக இலங்கை வர்த்தக சம்மேளனம் உபதலைவர் துமிந்த ஹூலங்கமுவ தெரிவித்துள்ளார்.

அதே நேரத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வழங்கும் ஒப்புதல் கிடைத்தால் மாத்திரமே, நிதி உதவியையும் வழங்குவதற்கு ஏனைய நாடுகள் முன்வரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள ஜப்பான், அமெரிக்கா மற்றும் இந்தியாவின் பிரதிநிதிகளை தமது சம்மேளனம் சந்தித்த போது சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் இல்லாமல் கணிசமான அளவு உதவிகளை தாம் வழங்க முடியாது என்று அவர்கள் சுட்டிக்காட்டியதாக துமிந்த ஹூலங்கமுவ கூறினார்.

இலங்கை மத்திய வங்கியின் தரவின்படி, 2021 டிசெம்பர் இறுதியில் இலங்கை நிலுவையில் உள்ள ஜப்பான் கடன் தொகை 621 பில்லியன் ரூபாவாகும். மேலும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் டெர்மினல் 2 திட்டத்திற்கான ஒப்பந்ததாரரான ஜப்பானை தளமாகக் கொண்ட தாய்சேய் கூட்டுத்தாபனம் இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கையை விட்டு வெளியேறத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

டெர்மினல் 2 திட்டத்தின் நான்கில் ஒரு பங்கே முடிவடைந்துள்ள நிலையில் ஒப்பந்தக்காரரை வெளியேறாமல் வைத்திருக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற போதும் அந்த கூட்டுத்தாபனத்தினர் நாட்டில் இருந்து வெளியேற திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வெளிநாட்டு அஞ்சல் கட்டணங்கள் திருத்தம்

கொழும்பு, ஜூலை. 31

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளிநாட்டு அஞ்சல் கட்டணங்களை திருத்துவதற்கு அஞ்சல் திணைக்களம் தீர்மானித்துள்ளது. திருத்தப்பட்ட அஞ்சல் கட்டணங்கள் ஜூலை 19ஆம் திகதி முதல் அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளதாக அஞ்சல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட புதிய வெளிநாட்டு அஞ்சல் கட்டணங்களின் கீழ், ஓகஸ்ட் 1 முதல் கருமபீடத்தினால் பெறப்படும் ஒவ்வொரு வெளிநாட்டு அஞ்சல் பொருட்களுக்காக வசூலிக்க கருமபீட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், புதிய வெளிநாட்டு அஞ்சல் கட்டணங்கள் குறித்து அலுவலகம் அல்லது கருமபீடம் வரும் வாடிக்கையாளர்களுக்கு தெரிவிக்க அனைத்து அஞ்சல் நிலையங்களினதும் அதிபர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என திணைக் களத்தின் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அஞ்சல் திணைக்களத்தின் இணையத் தளத்தில் இது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வான் மற்றும் கடல் அஞ்சல் இயக்கப்படும் நாடுகளின் விபரங்கள், பிரதி அஞ்சல்மா அதிபர் (செயல்பாடுகள்) மூலம் மாதந்தோறும் பகிரங்கப்படுத்தப்படும்.

இது https//:epay.slpost.lk என்ற இணையத் தளத்தில் வெளியிடப்படும். சாதாரண விமான அஞ்சலுக்கான சேவைக் கட்டணங்கள், U-Packet சேவையின் செயல்பாடு, ஈ.எம்.எஸ். சேவைக்கான கட்டணக் கணக்கீடு, வெளிநாட்டு பொதி சேவைக்கான எடை வரம்புகளுக்கு ஏற்ப இந்த விலைகளும் திருத்தப்பட்டுள்ளதாக பிரதி அஞ்சல்மா அதிபர் ராஜித ரணசிங்க அறிவித்துள்ளார்.

(அ)

# யாழில் 3 மாதங்களாக அலைபேசிகளை திருடிய கும்பலைச் சேர்ந்த மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாணத்தில் 3 மாதங்களாக அலைபேசிகளைத் திருடிய கும்பலைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து சுமார் 15 லட்சம் ரூபாய் பெறுமதியான 43 அலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

நாவற்குழி மற்றும் அரியாலையைச் சேர்ந்த 23, 24 மற்றும் 27 வயதுடைய சந்தேகநபர்களே யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 3 லட்சம் ரூபாய் பெறுமதியான ஐபோன் உட்பட 45 அலைபேசிகள் சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

போதைப்பொருளுக்கு அடிமையாகியதால் பஸ்களில் ஏறிப் பயணிகளிடம் அலைபேசியைத் திருடித் தப்பிப்பதாக சந்தேக நபர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இடம்பெற்ற அலைபேசித் திருட்டுகளிலும் இவர்களுக்கு தொடர்புண்டு என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அலைபேசி திருட்டு போயிருந்தால் உரியவர்கள் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் வந்து அடையாளம் காட்ட முடியும் எனறும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

(அ)



# அஞ்சல் பரிவர்த்தனையூடாக இலங்கைக்கு அனுப்பிய போதைக் குளிசைகள் சிக்கின!

கொழும்பு, ஜூலை. 31

அஞ்சல் பரிவர்த்தனையூடாக இலங்கைக்கு அனுப்பப்பட்டிருந்த பெருமளவான போதைக் குளிசைகள் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்துக்கு அனுப்பப்பட்ட 2,973 போதைக் குளிசைகள் சுங்கப்பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த போதை குளிசைகளின் மொத்த பெறுமதி சுமார் 29.7 மில்லியன் ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த போதை குளிசைகள் நெதர்லாந்தில் இருந்து அனுப்பப்பட்டுள்ளதாகவும் சுங்க திணைக்கள பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# மனோ அல்ல, நான் விலகினாலும் கூட்டணி பலமாகவே பயணிக்கும்

## பழனி திகாம்பரம் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜூலை. 31

"தமிழ் முற்போக்குக் கூட்டணியில் சிறந்த இளம் தலைவர்கள் உள்ளனர். மனோ கணேசன் அல்ல, நான் விலகினால்கூட கூட்டணி பலமாக பயணிக்கும்."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி. தெரிவித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமைப் பதவியில் இருந்து தான் விலகவுள்ளார் என்று கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் நேற்று அறிவித்தார்.

அரசியல் நிகழ்வு ஒன்றில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறியிருந்தார்.

இது தொடர்பில் கூட்டணியின் பிரதித் தலைவர் பழனி திகாம்பரத்திடம் ஊடகங்கள் வினவியபோது,

"தலைவர் பதவியில் இருந்து விலகுவது குறித்து கூட்டணி மட்டத்தில் மனோ கணேசன் கலந்துரையாடவில்லை. சில வேளை, வயதாகிவிட்டதால் அவர் அந்த முடிவை எடுத்திருக்கக்கூடும்.

யார் விலகினாலும் தமிழ் முற்போக்குக் கூட்டணி பலமாக பயணிக்கும். இந்தக் கூட்டணியில் சிறந்த இளம் தலைவர்கள் உள்ளனர்" - என்று பதிலளித்தார். (அ)

# கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்டு 19 வயது இளைஞர் படுகொலை!

## மற்றொருவர் படுகாயம்!!

கொழும்பு, ஜூலை. 31

கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்டு ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அத்துடன் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் உடபுஸ்ஸல்லாவ - ரப்பானொக் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் ரப்பானொக் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞராவார். படுகாயமடைந்தவர் 21 வயதுடைய இளைஞராவார்.

மேற்படி பிரதேசத்தில் 5 இளைஞர்கள் மதுபான விருந்து நடத்தியிருந்த நிலையில், அவர்களுக்குள் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் உடபுஸல்லாவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# வடமராட்சியில் உயிரிழந்த முதியவருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஜூலை. 31

யாழ்ப்பாணம் வடமராட்சி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்த முதியவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடி கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த 94 வயதுடைய முதியவர் ஒருவர் கடந்த 21ஆம் திகதி உடல் நிலை பாதிப்புக்கு உள்ளான நிலையில் நெல்லியடியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

உடல் நிலைப்பாதிப்புத் தீவிரம் காரணமாக அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அங்கு சிகிச்சை பெற்றுவந்த அவர் நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த அவரின் சடலம் வீட்டாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனிடையே அவர் உடல்நிலைப் பாதிப்புக்கு உள்ளாக முன்பாக வெளிநாடு ஒன்றிலிருந்து வந்த பிள்ளைகள் உடல்நிலை பாதிப்புக்கு உள்ளாகிய நிலையில் அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் அவர்களுக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து உயிரிழந்த முதியவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் அவருக்கும் கொரோனாத் தொற்று காணப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (அ-2)

# கோட்டா நாடு திரும்பியவுடன் அவருக்கு எதிரான சகல வழக்குகளும் விசாரிக்கப்படுதல் அவசியம்

## வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை. 31

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியவுடன் அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து வழக்குகளும் மீண்டும் விசாரணை செய்யப்படவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

நாட்டை விட்டுச் சென்ற கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கையின் குடிமகன் என்ற அடிப்படையில், நாட்டுக்கு திரும்பி வர உரிமையுள்ளது.

எனினும், அவர் ஜனாதிபதிப் பதவிக் காலத்தில் அனுபவித்து வந்த தண்டனையின்மை வாய்ப்பைப் பயன்படுத்த முடியாது. அவருக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் - என்றார். (அ)

# பதுக்கி வைக்கப்பட்ட 550 லீற்றர் டீசல் மீட்பு!

## வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா, ஜூலை. 31

வவுனியா கொந்தக்காரன் குளத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 550 லீற்றர் ஒமந்தை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

புளியங்குளம் விசேட அதிரடிப் படையினரினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது பதுக்கி வைக்கப்பட்டிருந்த 550 லீற்றர் டீசல் மீட்கப்பட்டதுடன், ஒருவரையும் கைது செய்து ஒமந்தை பொலிஸில் கையளிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை ஒமந்தை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நீதி அமைச்சரின் கருத்தை வரவேற்கிறோம்

## ஜனநாயகப் போராளிகள் கட்சி கூறுகிறது

கொழும்பு, ஜூலை. 31

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாமல் மிக நீண்டகாலமாக விசாரணைகள் ஏதும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில்

இலங்கையின் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவின் கருத்துக்களை நாங்கள் வரவேற்கின்றோம் என ஜனநாயகப் போராளிகள் கட்சி தெரிவித்துள்ளது.

அந்த கட்சி விடுத்துள்ள அறிக்கையில்-

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தமிழர் பரப்பில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடும் அனைத்து தரப்பினரும் ஒருமித்து அவர்களின் விடுதலைக்காக காத்திரமாகச் செயலாற்ற வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

12 ஆயிரத்திற்கும் அதிகமான போராளிகளை போராளிகளின் மீது மட்டும் நம்பிக்கை வைத்து விடுவித்ததைப்போல மிக நீண்ட காலமாக பல்வேறு சிறைகளில் வதைபட்டுக் கொண்டு இருக்கும் அரசியல் கைதிகள் விடயத்திலும் , தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் அதே முன்மாதிரிகளை கருத்தில்கொண்டு செயலாற்ற வேண்டுமென்பதே தமிழர்களின் அபிலாஷைகளாகும்.

யுத்தம் முடிவுற்றதின் பின்னரான கடந்த 13 வருடங்களாக தமிழர்கள் தமது இன்னல்களினின்று விடுபடக் காத்திரமான நீதிப் பொறிமுறை ஒன்றை வேண்டிவந்திருக்கின்றோம்.

இலங்கை தொடர்பான அதன் எல்லா நடவடிக்கைகள் மற்றும் செயலமர்வுகளிலும் ஐ.நாவின் மனித உரிமை ஆணையகமும் குறிப்பிட்ட நீதிப்பொறிமுறைகளை உருவாக்குவது பற்றி தனது பரிந்துரைகளைச் செய்துள்ளது.

இலங்கையில் புரையோடிப் போயிருக்கும் பிரச்னைகள் சம்பந்தமாகவும் தமிழ்மக்களின் அபிலாஷைகள் குறித்ததுமான 4 தசாப்த காலமான அனுபவமும் பார்வையும் இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே உண்டு.

ஜனநாயகம் மற்றும் நீதிப் பொறிமுறைகள் தொடர்பான சர்வதேச நியமங்கள் குறித்த தான ஓர் கரிசனையும் அவருக்கு உள்ளது என நாம் நம்புகின்றோம் - என்றுள்ளது. (அ)

# தொடரும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு; மன்னார் மாவட்டத்தில் மீனவர்கள் பாதிப்பு!

மன்னார், ஜூலை. 31

மன்னார் மாவட்டத்தில் சுமார் 40 நாட்களுக்கு மேலாக மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெறாத நிலையில் மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாத காரணத்தினால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனினும் கடற்றொழில் அமைச்சரோ, கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளோ, குறித்த விடயத்தில் கரிசனை காட்டுவதாக தெரியவில்லை என பள்ளிமுனை மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நாட்டில் தொடர்ச்சியாக பொருளாதார நெருக்கடி நிலவி வரும் நிலையில் எரிபொருள் பிரச்னை காரணமாக மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட முடியாத நிலையில் தாங்களும் தங்கள் குடும் பங்களும் வறுமையில் வாடுவதாக அவர்கள் கவலை தெரிவித்தனர்.

1000 ரூபாய் கொடுத்து எரிபொருள் பெற்று மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டாலும் உரிய லாபம் கிடைப்பதில்லை என அவர்கள் கூறினர்.

இந்த நிலையில் அண்மைய நாட்களாக வாகனங்களுக்கு டீசல் மற்றும் பெற்றோல் விநியோகம் இடம் பெறுகின்றது.

ஆனால் மண்ணெண்ணெய் விநியோகம் தொடர்பில் எரிபொருள் அமைச்சரோ கடற்றொழில் அமைச்சரோ ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே மீனவர்களுக்கு உரிய எரிபொருள் விநியோகம் சீராக இடம் பெறாத பட்சத்தில் கற்பிட்டி தொடக்கம் கொழும்பு வரை உள்ள மீனவர்கள் படகுகளை வாகனங்களில் ஏற்றி கொழும்பில் உள்ள அமைச்சின் அலுவலகத்தை முற்றுகையிடவேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என்றும் ஏனைய மீனவர் வீதிகளில் இறங்கி போராட வேண்டி வரும் எனவும் மன்னார் மீனவ சமாச செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார். (அ)

# தொற்றாளர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிக்கிறது

கொழும்பு, ஜூலை. 31



நாட்டில் தற்போது நாளாந்தம் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை 131 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, நாளாந்த கொரோனா தொற்றாளர்களுடன் ஒப்பிடும்போது தற்போது கொரோனா தொற்றாளர்களின் வேகம் அதிகரித்து வருவதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

மேலும் கொரோனா தொற்றினை கட்டுப்படுத்த அனைவரும் இணைந்து செயற்படவில்லையாயின் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் அவர் எச்சரித்தார். (அ)

# மீண்டும் ஒரு ஜூலை 9 வேண்டவே வேண்டாம்

## ரணிலிடம் மகிந்த, பசில் வலியுறுத்துவர்

கொழும்பு, ஜூலை 31.

ஒகஸ்ட் 9 ஆம் திகதி நாட்டில் மீண்டும் ஒரு வன்முறைச் சூழல் ஏற்படாமல் தடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் மூத்த உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடவுள்ளதாக பொதுஜன பெரமுனவின் பேச்சாளர் ஒருவர் சிங்கள வார ஏடொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வாரத்தில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளதாக தெரிவித்த பேச்சாளர், அதற்கான திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கி தருமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த கலந்துரையாடலில் பொதுஜன பெரமுனவின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் கூறினார்.

நாட்டில் மீண்டும் ஒரு போராட்ட நிலை ஏற்படுவது குறித்து சமூக விவாதம் நடைபெற்று வருவதாகவும், அப்படியான ஒரு நிலை ஏதேனும் ஏற்பட்டால் தற்போது அமைதியாக இருக்கும் நாடு மீண்டும் உறுதியற்ற நிலைக்கு வரலாம் என்றும், எனவே அந்த நிலையை தவிர்க்குமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அப்படி ஒரு போராட்டம் நடந்தால் யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் அதை ஒடுக்க எடுக்கவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் உத்திகள் குறித்து இங்கு விவாதிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதற்கு மேலதிகமாக, நாட்டின் தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல், அத்தியாவசிய உணவு, உரம், எரிவாயு மற்றும் எரிபொருள் மற்றும் மருந்து வழங்குதல் ஆகியவற்றில் முதன்மை கவனம் செலுத்தப்படும் என்று அந்த பேச்சாளர் தெரிவித்ததாக சிங்கள வார இதழ் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# பாராளுமன்றத்தில் அகற்றப்படும் ஜனாதிபதியின் ஆசன இலச்சினை

கொழும்பு, ஜூலை. 31

இலங்கை பாராளுமன்றத்தில் அரச தலைவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஆசனத்தில் இருந்து அரச தலைவரின் இலச்சினை முதன் முறையாக அகற்றப்படவுள்ளதாக சிங்கள நாளேடு ஒன்றின் இணையத் தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அதற்கு பதிலாக அரச சின்னத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவான பின்னர் அதிமேதகு பட்டம், ஜனாதிபதியின் கொடி மற்றும் ஜனாதிபதியின் இலச்சினை ஆகிய வற்றை பயன்படுத்துவதில்லை என்று கொள்கை தீர்மானம் எடுத்தார்.

இதன்படியே பாராளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் இருந்து ஜனாதிபதியின் இலச்சினையை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்ட ஆசனம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்காக தயாரிக்கப்பட்ட இலச்சினையாகும். அந்த பேட்ஜும்

அண்மையில் அகற்றப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது என்று சிங்கள நாளேடு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு தொடர்ந்தும் மனோவே தலைவர்!

## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை. 31

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமைப் பதவியில் இருந்து மனோ கணேசன் விலகமாட்டார் எனத் தான் நம்புவதாக கூட்டணியின் பிரதித் தலைவரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே. இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

தமிழ் முற்போக் குக் கூட்டணியின் தலைமைப் பதவியிலிருந்து விலகவுள்ளார் என்று மனோ கணேசன் அறிவித்துள்ள நிலையில், கூட்டணிக்குள் இந்த விவகாரம் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து இராதாகிருஷ்ணன் எம்.பியிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, "தலைவர் மனோ, எதற்காக இப்படியொரு முடிவு எடுத்தார் என்பது குழம்பமாக இருக்கின்றது.

இது கூட்டணிக் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடு அல்ல. செயலாளருக்கும், தலைவருக்கும் இடையிலான எழுத்து முரண்பாடே ஆகும்.

இதனைவிட, அனைத்து அரசியல் கட்சிகளுக்குள்ளும் முரண்பாடுகள் இருப்பதும், அவற்றைத் தீர்த்துக் கொள்வதும் வழமையானது.

எதிர்வரும் 3ஆம் திகதி தமிழ் முற்போக்குக் கூட்டணி கூடி, இது குறித்து ஆராயும். சர்வ கட்சி அரசை ஸ்தாபிப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் அனைவருக்கும்,

ஜனாதிபதி அனுப்பியுள்ள கடிதம் எனக்கும் கிடைத்துள்ளது. கூட்டணியாக இது குறித்தும் எதிர்வரும் 3ஆம் திகதி ஆராய்ந்து முடிவெடுப்போம்" - என்று பதிலளித்தார். (அ)

# வெளிநாட்டு கடனால் கப்பல் கட்டும் ஒப்பந்தத்தையும் இழந்தது இலங்கை

கொழும்பு, ஜூலை. 31

இலங்கை அரசாங்கம் தனது வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதை அடுத்து, கப்பல் கட்டும் ஒப்பந்தத்தை இழந்ததாக கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் அறிவித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பு கப்பல்துறை ஜப்பானில் உள்ள ஒனோமிச்சி கப்பல்துறையின் ஓர் அலகாக செயற்படுகின்றது.

எவ்வாறாயினும், வெளிநாட்டுக் கடனை செலுத்தத் தவறிய நிலையில் நோர்வே அரசாங்கம் வழங்கிய இரண்டு கப்பல்களை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை இரத்து செய்ய இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த இரண்டு செயற்பாட்டு ஆதரவு கப்பல்களை உருவாக்குவதற்கான ஒப்பந்தம் நோர்வேயின் எடா விண்ட் ஏஎஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

நாட்டில் நிலவும் உறுதியற்ற பொருளாதார மற்றும் நிதி நிலைமை காரணமாகவே இந்தத் தீர்மானத்தை எட்ட வேண்டியிருந்தது என்று கொழும்பு கப்பல்துறை சுட்டிக் காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், நோர்வே ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டாலும், ஐரோப்பிய மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளுக்கான ஏழு கப்பல் கட்டும் திட்டங்கள் தடையின்றி மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுவதாக கொழும்பு செய்திகள் மேலும் கூறின. (அ)

# திட்டமிட்டபடி வருவோம்!

## இந்தியாவுக்கு சீனா எச்சரிக்கை

பீஜிங், ஜூலை. 31

தனது சட்டபூர்வமான கடல்சார் நடவடிக்கைகளில் வெளித்தரப்பினர் தலையிடமாட்டார்கள் என எதிர்பார்ப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரவிருக்கும் சீனக் கப்பல் தொடர்பில் இந்தியாவின் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் சீன வெளிவிவகார அமைச்சு இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி, சீனாவின் கடல்சார் ஆய்வு நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் துல்லியமாக கண்காணித்து அறிக்கை தருவார்கள் என சீனா நம்புகின்றது.

மேலும், கடலின் சுதந்திரத்தை சீனா எப்போதும் சட்டபூர்வமாக பயன்படுத்தி வருவதாகவும் சீன வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய சீனக் கப்பல் எதிர்வரும் 11 ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கப்பலின் வருகையை உன்னிப்பாக கவனித்து வருவதாக இந்தியா தெரிவித்திருந்தது.

சர்ச்சைக்குரிய கப்பல் சீனாவுக்கு சொந்தமான "யுவான் வாங் 5" ஆகும். சீனாவின் ஜியானிங் துறைமுகத்தில் இருந்து கடந்த 13 ஆம் திகதி புறப்பட்டு

தற்போது தாய்வானைக் கடந்து கிழக்கு சீனக் கடலில் பயணித்து வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# விற்பனைக்கு வரும் லேக் ஹவுஸ் காணி

கொழும்பு, ஜூலை. 31

"லேக் ஹவுஸ்" நிறுவனம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டடத்தை ஹோட்டல் வளாகம் ஒன்றிற்காக முதலீட்டாளர் ஒருவருக்கு விற்பனை செய்வதற்கான பிரேரணை வெகுஜன ஊடக அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த யோசனையை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

'லேக் ஹவுஸ்' நிறுவனத்தின் சம்பளம் மற்றும் கடனைச் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கலைத் தீர்க்க இந்த நடவடிக்கை திட்டமிடப்பட்டுள்ளது.

'லேக் ஹவுஸ்' நிறுவனத்தை கொழும்பில் உள்ள வேறொரு இடத்தில் தொடங்கவும் அல்லது பெறப்படும் பணத்தில் அந்த நிறுவனத்தை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. ப

பழமையான கட்டடங்கள் சுற்றுலாவை மேம்படுத்த உதவுவதால், இங்கு ஹோட்டல் வளாகத்தை அமைப்பதே நோக்கம் என்று வெகுஜன ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.

'லேக் ஹவுஸ்' நிறுவனம் அமைந்துள்ள காணி 90 வருட குத்தகையின் கீழ் வழங்கப்பட்டுள்ளதுடன், குத்தகைக் காலமும் அடுத்த வருடத்துடன் நிறைவடையவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தாத்தாவான டி.ஆர். விஜயவர்தன லேக் ஹவுஸ் நிறுவன ஊடகக் குழுமத்தை நிறுவியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார நெருக்கடியினால் சிறப்பு மருத்துவ பயிற்சி நிறுத்தம்

கொழும்பு, ஜூலை. 31

சிறிலங்காவை பாதித்துள்ள அந்நிய செலாவணி பற்றாக்குறையால், சிறப்பு மருத்துவப் பயிற்சிக்காக மருத்துவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன முதுகலைப் பட்டதாரி



மருத்துவ நிறுவனத்துக்கு அறிவித்துள்ளார்.

ஆனால், சம்பளத்துடன் வெளிநாட்டுப் பயிற்சிக்காக வெளியேறும் மருத்துவர்களுக்கு எந்தத் தடையும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் மருத்துவப் பயிற்சிக்காகச் செல்வதற்காக வானூர்தி சீட்டுகளை எடுத்துச் சென்ற மருத்துவர்களுக்கான பணத்தை மீள வழங்கவும் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக கொழும்பு செய்திகள் மேலும் கூறின. (அ)

Eelanadu
31.07.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 15

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கூட்டமைப்பு என்ன செய்யப்போகின்றது?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். இந்த பின்புலத்தில், அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது. தேசிய அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்கவேண்டிய கட்டாயமும் இருக்கின்றது. இந்த நிலையில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் விடயத்தை சாதகமாக பரிசீலித்து வருகின்றனர். எதிர்த்தரப்பில் இயங்கிவரும் பலர் தேசிய அரசாங்கத்தை பரிசிலிப்பதற்கு தயாராகி வருகின்றனர். இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்யப் போகின்றது - விடயங்களை எவ்வாறு கையாளப் போகின்றது?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில், எதிர்ப்பு அரசியலை ஒரேயடியாக கைவிடமுடியாத நிலையிலிருக்கும் ஒரு கட்சி. ஏனெனில் தமிழ் மக்களுக்கான கௌரவமானதொரு அரசியல் தீர்வை பெறாத வரையில், அரசாங்கத்தில் அங்கம் வகிப்பது சிக்கலானது. ஏனெனில் இதனை ஒரு காரணமாகக் கொண்டு, கூட்டமைப்புக்கு எதிரான தரப்புக்கள் தங்களை பலப்படுத்திக்கொள்ள முயற்சிக்கலாம்.

ஆனால் நிலைமைகளைச் சமாளிப்பதற்கான அரசியல் தந்திரோபாயமொன்று கூட்டமைப்புக்கு கட்டாயம் தேவை. சில அடிப்படையான விடயங்களில் விட்டுக் கொடுப்பற்றிருக்கும் அதேவேளை, ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அதிகம் எதிர்நிலைக்கு செல்லாத வகையிலான மிதவாத அணுகுமுறையொன்று கூட்டமைப்புக்கு தேவை. இது கூட்டமைப்புக்கு மட்டுமல்ல ஏனைய தமிழ் தேசியத் தரப்புக்களுக்கும் பொருந்தும். ஏனெனில் பொருளாதார நிலைமையை சரி செய்வதே குறித்த தேசிய அரசாங்கத்தின் பிரதான நோக்கமாக இருக்கப் போகின்றது. அதேவேளை, சில அடிப்படையான பிரச்னைகளை தீர்ப்பதற்கும் இந்தக் காலத்தை பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தேசிய அரசாங்கம் எவ்வாறு நகரப் போகின்றது என்பதையும் கூட்டமைப்பு உற்று நோக்கவேண்டும். எடுத்த எடுப்பிலேயே எதிர்ப்பது அல்லது ஆதரிப்பது என்பதற்கப்பால், நிலைமைகளை அவதானித்து படிப்படியாக நகரும் தந்திரோபாயம் ஒன்றையே தமிழ் தரப்புக்கள் கைக்கொள்ளவேண்டும்.

ஏனெனில் இந்தியா மற்றும் மேற்குலகம் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை எவ்வாறு நோக்குகின்றது - எவ்வாறு கையாள முற்படுகின்றது என்பதை அறிந்து கொள்வதற்கு சிறிது காலம் தேவை. கடந்த பாராளுமன்ற தேர்தலில், ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி மோசமான பின்னடைவை சந்தித்திருந்தது. இதனை பிறிதொரு வகையில் நோக்கினால், முற்றிலும் மேற்குசார்பான பாரம்பரிய கட்சியொன்றின் வீழ்ச்சியடைந்தது. அதாவது, இலங்கையின் வலதுசாரி அரசியலில் ஏற்பட்ட மோசமானதொரு பின்னடைவாகவே இதனை நாம் நோக்கவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் வீழ்ச்சியுடன், பாரம்பரிய மேற்குசார்பான இலங்கை அரசியல் வீழ்ச்சியடைந்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான், ஓர் ஆசனத்தை வைத்திருந்த ரணில் விக்கிரமசிங்க, எவரும் எதிர்பாராத வகையில், மீளவும் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக வந்திருக்கின்றார். இது ஒரு நன்கு திட்டமிடப்பட்ட விடயமாகக் கூட இருக்கலாம். எனவே அவரது நகர்வுகளையும், அவருக்கான ஆதரவையும் ஆழமாக நோக்கவேண்டும். அவ்வாறில்லாது எதிர்ப்பு வாதங்களுக்குள் சிக்குப் பட்டால், நிலைமைகள் தமிழர்களுக்கு பாதமாகிவிடலாம்.

இவை அனைத்தையும் ஆராய்ந்தே கூட்டமைப்பு அதன் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். மீண்டும் ஒரு விடயத்தை அழுத்திக் குறிப்பிடுகின்றோம். இன்றைய அரசியல் சூழலை கூட்டமைப்பிலுள்ளவர்கள், தங்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் நோக்கினால், அது மோசமான தவறுகளுக்கே வழிவகுக்கும். தமிழ் சமூகம் மேலும் பின்னடைவுகளை சந்திக்கும். எனவே கூட்டமைப்பு தீர்மானங்களை கூட்டுப் பொறுப்புடன் மேற்கொள்ளவேண்டும். அதற்கு மாறாக செயற்படுவர்களை மக்களுக்கு அம்பலப்படுத்தி, அவர்களை விலக்கிவைக்க வேண்டும். ஏனெனில் கூட்டமைப்பு மக்களுக்கானது.



# பாலைவனத்தில் வெள்ளம்! பனிப் பிரதேசத்தில் அனல்!!

பனிக் குளிர் மிகுந்த ஐரோப்பாவை அனல் வெப்பம் வாட்டுகிறது. எப்போதும் சூடு பறக்கின்ற பாலைவனப் பகுதியில் அடை மழை வெள்ளம் பாய்கிறது. பூமியின் பருவ நிலை புதிராக நீடிக்கிறது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களைக் கடந்த இரு தினங்கள் தாக்கிய அடை மழையினால் பலத்த சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆசிய நாடுகளைப் பூர்வீகமாகக் கொண்ட ஏழு பேர் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்படு கிறது. அவர்களில் இலங்கையர் எவரும் உள்ளனரா என்பது உடனடியாக உறுதிப் படுத்தப்படவில்லை.



பெருமெடுப்பிலான மீட்புப் பணிகள் அங்கு நடைபெற்று வருகின்றன. மீட்புப் பணிகளை மேற்பார்வை செய்கின்ற உள்துறை அமைச்சின் தலைமைப் பணிப்பாளர் பிரிகேடியர் ஜெனரல் அலி சலேம் அல் துனைஜி வெளியிட்டிருக்கின்ற காணொலி ஒன்றில், ஆசிய நாட்டுப் பிரஜைகள் ஏழு பேர் உயிரிழந்த தகவலை வருத்தத்துடன் அறியத் தருவதாகத் தெரிவித்திருக்கிறார்.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் சிக்கிக் காணாமற் போயிருந்தவர்களில் ஏழு பேரே உயிரிழந்துள்ளனர் என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. ஏழு பேரும் எந்தெந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது உடனடியாக தெரிவிக்கப்படவில்லை. அவர்கள் அனைவரும் பெரும் வெள்ளத்துக்குத் தாக்குப் பிடிக்காத தற்காலிக வதிவிடங்களில் தங்கியிருந்த வெளிநாட்டுத் தொழிலாளர்களாக இருக்கலாம் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

இலங்கை, இந்தியா பிரஜைகள் உட்படப் பெரும் எண்ணிக்கையான வெளிநாட்டுத் தொழிலாளர்கள் ஐக்கிய அரபு அமீரகத்தில் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமீரகத்தின் ராஸ் அல் ஹைமா, ஷார்ஜா மற்றும் ஃபுஜைரா பகுதிகளையே மிக மோசமான வெள்ளம் பாதித்துள்ளது. நகரங்களின் கட்டுமானங்கள் சிதைவடைந்துள்ளன. கார்கள் நீரில் மூழ்கி மிதக்கின்ற காட்சிகள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

கடும் வெப்பம் நிலவுகின்ற பாலைவனப் பிரதேச நாடாகிய ஐக்கிய அரபு அமீரகத்தில் சுமார் 27 ஆண்டுகளுக்குப் பின்னர் ஜூலை மாதத்தில் கொட்டிய ஆகக் கூடிய மழை வீழ்ச்சி இது என்று அந்த நாட்டின் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

வரலாற்றில் மிக அரிதானதும் எதிர்வு கூற முடியாததுமான இந்த மழையின் போது மேக விதைப்பு எனப்படுகின்ற பனிக் கட்டிகளுடன் (ஆலங்கட்டி) கூடிய தீவிரமான மழை அங்கு பொழிந்து தள்ளியிருக்கிறது. பூமி வெப்பமடைவதால் உலகப் பருவ நிலையில் உருவாகிவருகின்ற லா நினோ, எல் நினோ பருவ வடிவங்களின் விளைவு என்று நிபுணர்கள் கூறியுள்ளனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -40

# முக்கியமாக.... அனுபவக் கல்வி!

கணபதி சர்வானந்தா

சமூகப் பங்களிப்பு என்ற விடயம் பல வழிகளில் நடைபெறலாம். அதனை ஒரு தனிமனிதனாகவும் கூட்டாகவும் முன்னெடுக்கலாம். அதனைப் பல வழிகளில் முன்னெடுக்கலாம். அது தொடர்பான செயற்பாடுகளுக்கு முன்பதாக அது பற்றிய சிந்தனைகள் எமக்குள் உருவாக வேண்டும்.அச் சிந்தனைகளைப் பிறருக்கு விதைப்பதென்பது மிகவும் முக்கியமானது. அதுவும் சிறார்கள் மத்தியில் அதனை விதைப்பதென்பது கல் மேல் எழுத்துப் போன்றது. ஒரு போதும் அழியாது. என்றும் நின்று நிலைக்கும், பலரை வழிப்படுத்தும், நெறிப்படுத்தும்.

அதனால்தான் சிறந்த பலனைத் தரும் என்ற அறியப்பட்ட பலதை சிறார்கள் மத்தியில் விதைக்கி றார்கள். அவை விருட்சமாகிப் பலன் தரும் என்றும் நம்புகிறார்கள்.

ஒரு தனிமனிதச் செயற்பாடு என்பது எவ்வாறு முக்கி யத்துவம் பெறுகிறது? என்பதற்கு ஊர் நடுவே விருட்சமாக இன்று காட்சிதரும் பெரு மரங்களே சான்றாகின்றன.அவை ஒரு காலத்தில் யாரோ ஒரு சமூகச் சிந்தனையாளரால் விதைக்கப்பட்டதே.

பல வருடங்களுக்கு முன்னர் எமது மூதாதையர் வைத்த தென்னைகள் இன்று காய்த்துப் பலன் தருகின் றன. தற்போது காணப்படும் இவ் இக்கட்டான சூழ் நிலையில் மிகவும் இலகு வாகவும், மலிவாகவும் கிடைக்கின்ற தேங்காய்களைக் கொண்டு பெரும் பலனை அனுபவிப்பவர்கள் பலர் உண்டு.

குறிப்பாக நகர்ப் புறங்களில் உள்ள மொட்டை மாடிகளைப் பயனுள்ளவைகளாக மாற்றித் தாமும் பயனடைவதோடு பிறருக்கும் உதவுகின்ற பலரைப் பார்த்திருக்கிறேன். அங்கு மொட்டை மாடிகளில் சிறு தோட்டங்களை அமைத்து அதில் கீரை, கத்தரி, தக்காளி போன்ற பயிர்களை நாட்டிப் பராம ரித்து பலன்

பெற்றுவருபவர்களும் உண்டு. நான் அறிய கொழும்பு நகரத்தில் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத் தர் ஒருவர் தமது வீட்டு மொட்டை மாடியில் வீட்டுத் தோட்டம் ஒன்றினைச் செய்து வருகிறார். அவர் தனது ஊரில் இருந்து கீரை விதைகளைப் பெற்று வருடம் முழுவதும் அதனை அங்கு விதைத்துப் பயன்பெறுவதோடு பிறருக்கும் கொடுத்து வருகிறார்.

அச் சிந்தனையின் உருவாக்கத்தைப் பற்றிக் கேட்டேன். இதனைத் தான் தனது சிறுவயதில் பாடசாலைக் காலத்தில் கற்றுக் கொண்டதாகப் பெருமையோடு சொல்லிக் கொண்டார். அன்றைய ஆசிரியர்கள் ஏட்டுக் கல்வியோடு நின்றுவிடாது பலவற்றை அனுபவமாகவும் சொல்லிக் கொடுத்ததை ஞாபகப்படுத்திக் கொண்டேன்.

அது போல இன்றும் பல பாடசாலைகளில் அத்தகைய முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. அனுபவக் கல்வியில் அக்கறையுள்ளவர்களாகப் பல ஆசிரியர்கள் இருக்கின்றனர். அவர்கள் செயல் கல்வியில் தமது மாணவர்களை ஈடுபடுத் தியும் வருகின்றனர்.

அது தொடர்பானதொரு ஆரம்பப் பாடசாலையின் ஆக்கபூர்வமான முயற்சி இடம்பெற்றிருக்கிறது. அதனை உதாரணமாகக் கொண்டு பிறரும் பயடைய வேண்டும். அதுவே இப் பகிர்வின் நோக்கம்.

நாடே எதிர்கால உணவுப் பஞ்சத்தை எவ்வாறு எதிர் கொள்வது என ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கும் வேளை யில், யா/பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் (காலையடிப் பள்ளிக்கூடம்) அதிபர், ஆசிரியர்கள் தீர்க்க தரிசனமாக முன்னெடுக்கும் பாட சாலைத் தோட்டச் செயற் பாடுகள் பலரின் பாராட்டு களைப் பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது என தேவ சபா தனுஜன் தனது முகநூலில் குறிப்பொன்றை பதிவிட்டி ருக்கிறார். இவ் வருடம் 150 ஆவது ஆண்டைக் கொண்டாடும் அப் பாடசாலையின் வரலாற்றில் இத்தகைய அரும்பணிகள் பல இடம்பெற்றிருப்பதாகவும் அவர் தனது பதிவிலே குறிப்பிட்டுள்ளார்.

பத்து வயது வரையிலான பிள்ளைகள் மட்டும் கல்வி கற்கும் அப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாண வர்கள் இணைந்து முன்னெடுக்கும் இவ் அரும்பணி அனை வராலும் பாராட்டப்படுகிறது. அது மட்டுமல்லாது பிற பாட சாலை மாணவர்களும் அதனைப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர்கள் விரும்புகிறார்கள். இன்றைய நெருக்கடி நிலையில் அடிக்கடி பாடசாலைகளுக்கு நீண்ட விடுமுறைகள் வழங்கப்படுகின்றபோதும் பொறுப்போடு அவர்கள் பாடசா லைக்கு வருகிறார்கள்.

பாடசாலைத் தோட்டச் செயற்பாட்டைக் கவனிக் கிறார்கள். பயிர்கள் வாடிவிடக் கூடாது என்பதில் அவர்கள் காட்டும் அக்கறை மிகவும் போற்றத் தக்கது.

ஒரு மரத்தை நடுவது உணவுத் தேவைக்காக மட்டு மல்ல, அது மனித வள மேம்பாட்டை உயர்த்தவல்ல அரும்பெருஞ் செயல் என்று அறியப்பட்ட விடயம். குறிப்பாகப் பயிரிடுவதற்கு முன்பதாக மண்ணை வளம்படுத்துகிறோம். அதனூடாக எமது உடல் ஆரோக்கியத்தை வளப்படுத்திக் கொள்ளுகிறோம். இது போன்ற பல விடயங்கள் நாம் அறியாமலே....!

விவசாய வரலாறு மனித வரலாற்றில், உலகளாவிய சமூக–பொருளாதார மாற்றத்திற்கு ஒரு முக்கியமான கார ணியாக இருந்தது என்ற உண்மையை நாம் இளம் பிள்ளை களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். விவசாய முன்னேற் றமே மனித நாகரிகத்தில் பெரும் பங்காற்றியுள்ளது என்பதை உணர்த்தவல்லதாக வீட்டுத் தோட்டக் கலையைப் பாடசாலை களில் ஒரு பாடமாகக் கொள்ள வேண்டும். விவசாயிகள் தங் கள் குடும்பங்களுக்குத் தேவையான உணவை உற்பத்தி மேற் கொள்ளும்போது, அந்தச் சமூகத்திலுள்ள மற்றவர்களுக்கும் உதவுகிறார்கள் என்ற உண்மையை வெளிக் கொண்டு வரும் வகையில் கல்வி முறை உள்ளடக்கப்பட வேண்டும்.

வரலாற்றாசிரியர்களும் மானுடவியலாளர்களும் விவசா யத்தின் வளர்ச்சியே மனித நாகரீகத்தைச் சாத்தியமாக் கியுள்ளது என்று நீண்ட காலமாக விவாதித்து வந்துள்ளனர். எனவே மேற்படி பாடசாலையைப்போன்று எல்லாப் பாடசாலை களிலும் அதற்கென நேரத்தை ஒதுக்கி உணவு உற்பத்தியின் அவசியத்தை உணரச் செய்வதன் மூலம் அவர்களை வளப படுத்தலாம். அதுவே சமூகத்தை வளப்படுத்தக் கூடிய நல்லறி வையும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் வாய்ப்பாகவும் அமையும்.

# இந்தவார ராசிபலன் 17.07.2022 - 23.07.2022



ஜூலை 31 ஞாயிற்றுக்கிழமை

சுபகிருது வருடம் - ஆடி 15

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : திரிதியை




உங்களின் மன ஆற்றல் வெளிப்படும். சிந்தித்து செயல்பட்டு உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். நண்பர்களின் ஆதரவால் முயற்சிகள் வெற்றியாகும். உங்களுடைய நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறத்தொடங்கும். பகைவர்களின் தொல்லை களில் இருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பழைய கடன்கள் அடையும்.




உங்கள் செயல்களில் ஆதாயம் அதிகரிக்கும். வருமானம் அதிக ரிக்கும். முயற்சிகள் நிறைவேறும்.நினைத்ததை அடையும் வாரம் இது. உங்கள் முயற்சிகள் எளிதாக நிறைவேறும். எதிர்ப்புகள் விலகும். புதிய முயற்சிகள் ஆதாயம் தரும். நீண்ட நாட்களாக இழு பறியாக இருந்த வேலைகள் முடிவிற்கு வரும். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். குடும்பத்தினரின்அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நிதிநிலை உயரும்.




குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வருமானம் கூடும். புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். உங்கள் மன வலிமை அதிக ரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் உங்கள் முயற்சியால் நிறைவேறும். புதிய நட்புகள் வழியே ஒரு முயற்சி வெற்றியாகும். பண வரவில் இருந்த தடைகள் அகலும். தீராமல் இருந்த பிரச்சி னைகளில் தீர்வு ஏற்படும். பொருளாதார நிலை உயரும். புதிய பொருட்களின் சேர்க்கை உண்டாகும். குடும்பத்தின் மீதான அக்கறை அதிகரிக்கும்.




கவனமுடன் செயல்பட்டு உங்கள் தேவைகளை அடைவீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். எதிர்பார்த்த வருவாயை அடைவீர்கள். குடும்பத்தின் மீதான அக்கறை அதிகரிக்கும். தொழில், உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.




செலவுகளும் அலைச்சலும் அதிகரிக்கும். கடந்த கால அனுப வத்தைக் கொண்டு ஒரு வேலையை நடத்தி முடிப்பீர்கள். கவன முடன் செயல்பட்டு நன்மை காண்பீர்கள். பல வழியிலும் செலவுகள் அதிகரிக்கும். ஒரு சிலர் பண நெருக்கடிக்கு ஆளாவீர்கள். ஆலோ சனை சொல்பவர்களை அலட்சியம் செய்வீர்கள். குடும்பத்தினருக்காக செலவுகள் ஏற்படும். உங்கள் நீண்ட நாள் முயற்சிகள் நிறைவேறும்.




உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். அரசு வழியில் நீங்கள் மேற்கொண்ட முயற்சிகள் நிறைவேறும்.முயற்சிகள் இழுபறியாகும். நினைத்ததை அடைவீர்கள். புதிய முயற்சிகள் பலிதமாகும். பண வரவு அதிகரிக்கும். அதன்பின் திடீர் செலவுகளை சந்திப்பீர்கள். குடும்பத்திலும் சில பிரச்சினைகள் உருவாகும். செயல்களில் மாற் றம் உண்டாகும். அரசாங்க வழியில் நீங்கள் எதிர்பார்த்தவற்றை அடைவீர்கள். உங்கள் செல்வாக்கு வெளிப்படும்.




தொழிலில் நீங்கள் எதிர்பார்த்த நன்மைகள் உண்டாகும். வருமானம் அதிகரிக்கும். எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். உங்கள் விருப்பம் நிறைவேறும்.உங்களுடைய எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வேலை குறித்த முயற்சி பலிதமாகும். வருமானத்தில் ஏற்பட்ட தடைகள் விலகும். உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் முடிவிற்கு வரும். செயல்களில் தடுமாற்றம் உண்டாகலாம் என்பதால் கவனம் தேவை.




குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.நினைத் ததை அடையும் வாரம் இது. உங்கள் முயற்சிகளில் இருந்த தடை கள் விலகும். பண விஷயத்திலும் செலவுகளிலும் கவனம் தேவை. உங்கள் விருப்பங்கள் தடையின்றி நிறைவேறும் வாரம் இது. நீண்ட நாள் முயற்சி ஒன்று லாபம் தரும். வரவேண்டிய பணம் கைக்கு வந்து சேரும். தந்தை வழியினரால் நன்மைகள் ஏற்படும்.




செயல்களில் கவனம் தேவை. புதிய முயற்சிகள் வேண்டாம். தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்சினை வில கும். எதிர்பார்த்தவற்றில் நன்மைகள் உண்டாகும். முயற்சிகளில் இழுபறியும் அலைச்சலும் ஏற்படும். பொருளாதார நெருக்கடி வில கும். சொத்துப் பிரச்சினை முடிவிற்கு வரும். பெற்றோரின் ஆதர வுடன் ஒரு முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.




முயற்சிகளால் வெற்றிபெற வேண்டிய வாரமிது. மனமும் உட லும் சோர்வடையும், குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் விலகும். பண வரவு அதிகரிக்கும். விலகிச் சென்றவர்கள் மீண்டும் உங்க ளைத் தேடி வருவார்கள். முயற்சிகள் லாபமாகும். தடைகளைத் தாண்டி நினைத்ததை சாதிப்பீர்கள். புதிய முயற்சிகளை ஒத்தி வையுங்கள். எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.




நீண்ட நாள் முயற்சிகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். அரசு வழியில் ஆதரவு கூடும். துணிச்சலாக செயல்பட்டு விரும்பியவற்றில் வெற்றி காண்பீர்கள் என்றாலும், சில தடைகளை சந்திப்பீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறாமல் போகும். எதிர்ப்புகள் மறையும். வழக்குகள் சாதகமாகும். வருமானம் அதிகரிக்கும். தைரியம் கூடும். அனைத்திலும் விழிப்புணர்வு அவசியம். பயணத்தில் எச்சரிக்கைத் தேவை.




உங்கள் செயல்களில் இழுபறி ஏற்பட்டாலும் நினைத்ததை சாதிப் பீர்கள். நீங்கள் ஈடுபடும் முயற்சிகள் நன்மையாகும் என்றாலும் குடும்பத்தில் குழப்பம் அதிகரிக்கும். உங்கள் வார்த்தைகளில் கோபம் வெளிப்படும்.செயல்களில் கவனம் தேவை. ஆரோக்கியத்தில் கூடுதல் அக்கறை செலுத்துங்கள். வார்த்தைகளில் கவனம் கொள்ளுங்கள். முயற்சிகளில் தடை உண்டாகும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். செயல்களில் கவனம் தேவைப்படும். பிள்ளைகள் வழியே சங்கடங்களை எதிர்கொள்வீர்கள். எதிர்ப்புகளை சமாளிப்பீர்கள்.

# சீன - இந்திய மோதல் களமாக இலங்கை?

**சில** சிறப்பான, சுவாரஸ்யமான சம்பவங்கள் நடந்திருக்கின்றன, சமீப நாட்களில். உங்கள் நாட்டிலும் எமது நாட்டிலும் புது ஜனாதிபதிகள் பதவியேற்றுள்ளனர். கொழும்பில் தினேஷ் குணவர்த்தன தன்னுடைய அமைச்சர்களுடன் சேர்ந்து ஒரு விதமாய் அரசியல் துவங்கியிருக்கிறார். சென்னையில் 44ஆவது சர்வதேச சதுரங்கப் போட்டி துவங்கியது. இந்திய காங்கிரஸின் மகாராணியும் இளவரசனும் நாட்டின் பொருளாதாரக் குற்றப்பிரிவின் அமலாக்கத் துறையால் துருவித் துருவி விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.


சிறப்பும் சுவாரஸ்யமுமில்லாத ஒரு துயரச் செய்தியும் வெளியாகியுள்ளது. அது, உலக வங்கி, இப்போதைக்கு இலங்கைக்கு உதவ மறுத்துவிட்டது என்பதுதான். அதோடு மற்றொரு கவலை தரும் விஷயம், சீனாவின் கப்பல் அம்பந்தோட்டை துறைமுகத்தை நோக்கிப் பயணிக்கிறது என்றும் ஓகஸ்ட் 11ஆம் திகதியன்று சென்றடையும் என்றும் வெளியான தகவல், இந்தியாவைக் கவலையில் ஆழ்த்தியிருக்கிறது.

இப்பிராந்தியத்தில் தனது பொருளாதார, வர்த்தக மற்றும் புவிசார் அரசியல் ஆதிக்கத்தை நிறுவும் போட்டியில் சீனா மற்றும் இந்தியாவுக்கு இடையிலான மோதல் களமாக மாறும் அபாயம் இலங்கைக்கு உள்ளது என்று நான் தொடர்ந்து குறிபிட்டு வந்துள்ளேன். பல தசாப்தங்களாகத் தொடர்ந்து நடந்த உள்நாட்டுப் போர் மற்றும் ராஜபக்ஷ குடும்பத்தினரின் கொடுங்கோல் ஆட்சியால் ஏற்கெனவே பாதிக்கப்பட்டிருக்கும் இந்த நாட்டு மக்களின் துன்பத்தை அதிகரிக்கும் விதமாக, நான் அஞ்சியது போன்ற நிலையும் மெதுவாக உருவாகி வருவதாக நான் கவலை கொள்கிறேன்.

சீனாவின் இந்த ஆய்வுக் கப்பல், யுவான் வாங் 5, வருகை குறித்த தனது வாய்மொழி எதிர்ப்பை இந்தியா, இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சிடம் தெரிவித்துள்ளது. இந்தக் கப்பல், ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் வடகிழக்குப் பகுதியில், விண்வெளி மற்றும் ஆய்வுக் கண்காணிப்பு, செயற்கைக் கோள் கட்டுப்பாடு ஆகியவற்றை மேற்கொள்ளும் என்று கொழும்பில் இயங்கும் 'பெல்ட் அண்ட் ரோட் இனிஷியேடிவ் ஸ்ரீலங்கா' என்ற சீன நிறுவனம் தெரிவித்துள்ளது. ஒரு சாமானியனாக, நான் வரைபடத்தை எடுத்து வைத்துக்கொண்டு இந்தப் பிராந்தியத்தைப் பற்றி ஆய்வு செய்யும்போது, இந்தியாவின் நீண்ட மேற்குக் கடற்கரையோரமும் இதில் வருவதை அறிந்தேன். இங்குதான் இந்தியாவின் பொருளாதாரத் தலைநகரான மும்பை இருக்கிறது என்பதும், பாகிஸ்தானின் தென் கடலோரத்தை அரபிக்கடல் முத்தமிடுகிறது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கவை. இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்ச்சி, சீனக் கப்பலின் நகர்வை தமது நாட்டின் அரசு உன்னிப்பாகக் கவனித்துவருவதாகவும், தனது பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களைப் பாதுகாக்க இந்தியா தவறாது என்றும் வியாழனன்று செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இந்த ஆண்டு மட்டும் இந்தியா, இலங்கைக்கு உதவியாக 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களுக்கான நீண்ட வரிசைகளைப் படிப்படியாகக் குறைத்து, முடிவில் அவற்றை ஒழிப்பதே தனது அரசின் முன்னுரிமை என்று ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ள நிலையில், இலங்கைக்கான அவசர உதவிக் கோரிக்கைகளைக் கண்டு உலக நிதி அமைப்புகள் விழி பிதுங்கியுள்ள நிலையில், இந்தப் பிராந்தியத்தின் பாதுகாப்பிற்குச் சீனாவின் நகர்வுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. கொழும்பிலும் அம்பாந்தோட்டையிலும் ஏற்கெனவே நடைபெற்று வரும் திட்டங்களில் மேலும் பெருமளவு சீன முதலீடுகளை இலங்கை வரவேற்பதாகத் திங்களன்று ஓர் இலங்கை அதிகாரியை மேற்கோள் காட்டி, றொய்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவரவும், அனைவரையும் உள்ளடக்கிய ஓர் அரசை மத்தியில் அமைத்து, அங்கு ஓர் அரசியல் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தவும் ரணிலுக்கும் அவரது அரசுக்கும் உதவ, மேற்குலகம் தலையிட்டு முயலாத வரை, அதிகார நிறுவுதலுக்காக இந்தியாவும் சீனாவும் மேற்கொள்ளும் போட்டியால் ஓர் ஆபத்தான மோதல் உருவாகக் கூடும். அத்தீவு தேசத்தின் அரசியல் கட்டமைப்பில் புறக்கணிக்கப்பட்ட தமிழர்களுக்கான ஒரு நீண்ட காலத் தீர்வை எட்டவும், அரசியல் கைதிகளை விடுவிக்கவும், பறிக்கப்பட்ட நிலங்களைத் திருப்பித் தரவும், அவர்கள் வைத்திருக்கும் கோரிக்கைகளை நிறைவேற்றவும் ரணில் ஊக்கப்படுத்தப்பட வேண்டியது அவசியம்.



நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன், மீண்டும் சொல்வேன். என் யாழ் அறிவுஜீவிகள் சிலரின் கோபத்துக்கு ஆளானாலும் பரவாயில்லை என்று தமிழர்கள், ரணில் அமைச்சரவையில், ஈ பி டி பி-யின் டக்ளஸ் மட்டுமல்லாமல், மேலும் அதிக பிரதிநிதித்துவத்தைப்பெற்று, தங்களின் கோரிக்கைகள் விரைவாகவும் முழுமையாகவும் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அரசில் அங்கம் வகிப்பவர்கள் துரோகிகள் என்று இந்த அறிவு ஜீவிகள் சிலர் கூறலாம். ஆனால், பொறுப்புகளையும் பதவிகளையும் தட்டிக்கழித்துத் தமிழர்களின் வளர்ச்சிக்குத் தடைகல்லாக இருந்ததாக எதிர்காலச் சந்ததியினர் குற்றம் சுமத்தக்கூடும். இந்தப் பொருளாதார நெருக்கடியும் அரசியல் ஸ்திரமின்மையும் ஏற்படுத்தியிருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளாமல் இருப்பது



விவேகமற்ற செயலாகும்.

## சென்னை மடல்

-பகவான் சிங்-

## சென்னை வரவேற்பில் அக மகிழ்ந்த மோடி!

"எப்போதும்போல் ஆச்சரியமூட்டும் அன்பைப் பொழிந்துள்ள சென்னையே, அற்புதமான வரவேற்பால் அகமகிழ்ந்தேன்!" - பிரதமர் நரேந்திர மோடி வியாழனன்று வெளியிட்ட ட்விட்டர் பதிவு இது. அன்று அவர், தமிழகத் தலைநகருக்கு 44ஆவது சர்வதேச சதுரங்கப் போட்டியினைத் தொடங்கிவைக்க வந்திருந்தார். அடுத்த நாள் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள அன்றிரவு சென்னையில் ஆளுநர் மாளிகையில் அவர் தங்கினார். "இரவு நீண்ட நேரம் வரை, திராவிட மனநிலையை உடைத்து, காவிக்கு எதிரான மனநிலையை நீர்த்துப்போகச் செய்ய வகுக்க வேண்டிய உத்திகள் பற்றியும், மாநிலத்தில் கட்சியின் நிலை குறித்தும், எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் பாஜக நிர்வாகிகளுடன் விவாதித்தார். அதனால், திமுக தலைவர்கள் பலரும் உறக்கமிழந்தனர்" என்றும், "மத்திய உள்துறை அமைச்சரும் பாஜகவின் செல்வாக்கு மிக்க தலைவருமான அமித் ஷா அல்லது மோடி, ஒரு மாநிலத் தலைநகரில் இரவு தங்கினால், அங்கு குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழும் என்பது அனைவரும் அறிந்ததே" என்றும் தகவலறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

## திராவிட மண்ணில் வளர்ந்துவரும் பா. ஜ.க?

புதிய உத்வேகம் பெற்றுள்ள மாநில பாஜகவினரால், இந்தியாவின் பாதுகாவலராக மோடியைச் சித்தரிக்கும் பெரிய சுவரொட்டிகளும் பனர்களும் பெருமளவில் வைக்கப்பட்டதை திமுக மேலிடமும் கவனிக்கத் தவறவில்லை. சென்ற ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு, மோடி சென்னை வந்த பல முறை, திமுக தொண்டர்கள் அவருக்குக் கறுப்புக் கொடி காட்டியதையும், கறுப்பு பலூன் பறக்கவிட்டதையும் திராவிட அரசியல் தலைவர்கள் நினைவுகூர்ந்தனர்.

வியாழனன்று ராஜ்பவனிலிருந்து நேரு அரங்கம் செல்லும்போதும் சரி, மறுநாள் அருகில் உள்ள அண்ணா பல்கலைக்கழகம் செல்லும்போதும் சரி, வழி நெடுகிலும் ஆண்களும் பெண்களும் பாஜக கொடிகளுடன் மோடியை வரவேற்கும் வண்ணம் கையசைத்து, வரிசையில் நின்றுகொண்டிருப்பதைக் காண முடிந்தது. இதற்கெல்லாம் ஏற்பாடு செய்திருந்த கட்சித் தொண்டர்களை ஊக்குவிக்க அவர் எப்போதும் தவறியதில்லை. வெள்ளியன்று பல்கலைக்கழக நிகழ்வின்போது, திராவிடர்களின் முக்கியமான தேசியக் கல்விக் கொள்கை எதிர்ப்பு என்ற சித்தாந்தத்தில் கை வைத்தார். உயர் கல்வியில் அதிக சேர்க்கையும் தேர்ச்சி விகிதமும் புதிய கொள்கையால் உயர்ந்திருப்பதாகக் குறிப்பிட்டார். இதற்கு, திராவிட சித்தாந்தத்தில் ஊறிய பாஜக எதிர்ப்பாளர்கள் உடனடியாகச் சமூக ஊடகங்களில், தமிழகம் தேசியக் கல்விக் கொள்கையை ஏற்காமல் தனது கொள்கையினைப் பின்பற்றுவதால், கல்வித் துறையில் முன் நிற்பதாகப் பதிலடி கொடுத்தனர். பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை உடனடியாக இதற்கு, எப் போதுமே தமிழகம் கல்வியில் சிறந்து விளங்கியுள்ளதா கவும், மாநிலத்தில் கல்வி கற்கும் குழந்தைகளின் அறிவுக் கூர்மையே இதற்குக் காரணம் என்றும் பதிலடி கொடுத்தார்.

பாஜகவில் இணைவதற்குச் சில மாதங்கள் முன் வரை ஐ பி எஸ் அதிகாரியாக இருந்து விருப்ப ஓய்வு பெற்ற மாநிலக் கட்சித் தலைவர் அண்ணாமலை, தனக்கு முன்பு இந்தப் பொறுப்பில் இருந்த தலைவர்கள் அனைவரும், திமுக, அதிமுக ஆகிய இரு திராவிடக் கட்சிகளுடனும் மென்மையான போக்குடன் செயல்பட்டுவந்த நிலையில், ஆரம்பத்தில் இருந்தே கடுமையான தாக்குதலை மு க ஸ்டாலின் தலைமையிலான திமுகமீது செய்து வருகிறார். தனது கட்சியின் உள் விவகாரங்களி லும் ஒழுங்கையும் பொறுப்பேற்பையும் நடைமுறைப்படுத்தக் கடும் முயற்சி எடுத்து வருகிறார். அண்மையில் கூட, உள்ளாட்சித் தேர்தலில் கட்சி மோசமாகத் தோற்ற இடங்களில் 45 மாவட்டச் செயலாளர்களைப் பதவி நீக்கினார். இரண்டு சதவிகிதத்துக்கும் குறைவாக இருந்த தமது கட்சியின் வாக்குச் சதவிகிதம், தற்போது ஏழுக்கும் அதிகமாக ஆகியிருப்பதாகவும், தொடர்ந்து அது அதிகரித்து வருவதாகவும் தமிழக பாஜகவில் இவரைப் பாராட்டுவோர் கூறுகின்றனர். கட்சியில் வளர்ந்து வரும் நம்பிக்கை காரணமாக, வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் புதுச்சேரியின் ஒரு தொகுதி உட்பட மொத்தமுள்ள 40 தொகுதிகளில் 15 தொகுதிகளை பாஜக தனது கூட்டணிக் கட்சியான அதிமுகவிடம் கோரும் என்றும் மூத்த நிர்வாகி ஒருவர் கூறுகிறார். இந்தத் 'திராவிட மண்ணில்', பாஜக வளர்ந்து வருவதைப் புள்ளிவிவரங்களுடன் மகிழ்ச்சியாக விளக்கிய அவர், 'பத்து இடங்களுக்குக் குறையாமல் பெற்று, அவற்றில் குறைந்தது

ஐந்திலாவது நிச்சயம் வெற்றி பெறுவோம்" என்று நம்பிக்கையுடன் கூறுகிறார். தமிழகத்தில் மொத்தம் 67,000 வாக்குச் சாவடிகள் இருக்கின்றன. அவற்றில் 55,000இல் பூத் கமிட்டிகள் அமைத்து விட்டது பாஜக. ஒவ்வொரு பூத்திலும் 12-18 கட்சிக்காரர்கள் பிரதிநிதிகளாக இருப்பார்கள். மீதமுள்ள 12,000 பூத் கமிட்டிகளில் 5000 தான் சற்று சிரமமாக இருக்கின்றன, காரணம், அவை இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் பகுதிகள்" என்று அவர் தெரிவித்தார்.

இந்த பூத் கமிட்டி உறுப்பினர்கள், தேர்தல் நேரத்தில் தங்கள் கட்சி ஆதரவாளர்களைக் கணக்கெடுத்து தேர்தல் நாள் வரை அதைத் தொடர்ந்து அதிகரிக்க உழைப்பார்கள். ஆதரவாளர்கள் தேர்தலில் வந்து வாக்களிக்க அவர்கள் உதவுவதுடன், எதிர்க்கட்சியினர் முறைகேடுகளில் ஈடுபடாமல் இருப்பதை உறுதிசெய்ய, நாள் முழுவதும் அவர்கள் வாக்குச்சாவடிகளிலேயே காவல் இருப்பார்கள். மேலும், வாக்கு எண்ணிக்கை நாள் வரை, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் பாதுகாப்புக்கும் அவர்கள் பொறுப்பாவார்கள். முந்தைய தேர்தல்களில், மென்மையான இயல்பு

கொண்ட பாஜகவினரால் இந்தக் கடுமையான பணியை மேற்கொள்ள முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது. காங்கிரஸின் நிலைமை இன்னமும் இதுவே. நான் இப்போது பூத் கமிட்டி போன்ற, என் "ஈழநாடு" சகர்களுக்குச் சம்பந்தமில்லாதது போல் தோன்றும் நுண்ணிய அரசியல் அம்சங்களைக் குறித்து ஏன் பேசுகிறேன்? உரிமையுடன் உங்கள் நேரத்தை எடுத்துக் கொண்டு இதையெல்லாம் நான் பேசக் காரணம், இந்த பூத் கமிட்டி என்பது எவ்வளவு முக்கியமானது

என்பதையும், இது நமது ஜனநாயகச் சக்கரத்தைச் செயல்படவைக்கும் வலிமையான கம்பி என்பதையும், இது தேர்தல் சமயத்தில் மட்டுமல்லாமல், பலவகைப்பட்ட சமூக - அரசியல் - பொருளாதார நடவடிக்கைகளில் உங்களுக்கும் பயன்படக்கூடும் என்பதையும் வலியுறுத்தவே. ஒரு மாவட்டத்தின், நகரத்தின், கிராமத்தின், தெருவின் அனைத்து வாசிகளுக்கும் எரிபொருளும் உணவுப் பொருளும் கிடைப்பதை உறுதி செய்யவும்கூட இது பயன்படலாம். அடிமட்ட நிலையிலிருந்து

(18ஆம் பக்கம் பார்க்க)

# "அறகலய" மக்கள் கிளர்ச்சியும் ஜனாதிபதி ரணிலும்!



♦ வீரகத்தி தனபாலசிங்கம்



மே மாத நடுப்பகுதியில் பிரதமராக பொறுப்பேற்பதற்கு முன்னதாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் முன்வைத்திருக்கக்கூடிய வேறு நிபந்தனைகளைப் பற்றி எமக்கு பெரிதாக தெரியாது. ஆனால், ஒரு நிபந்தனையை மாத்திரம் நாடும் உலகமும் அறியும் வகையில் அவர் முன்வைத்தார்.

அதாவது கொழும்பு காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக "அறகலய" மக்கள் கிளர்ச்சி போராட்டக்காரர்கள் அமைத்திருக்கும் " கோட்டா கோ கம " மீது கைவைக்கக்கூடாது என்பதும் அந்த போராட்டம் தொடர அனுமதிக்கவேண்டும் என்பதுமே அந்த நிபந்தனை. கோட்டாபயவும் அதற்கு இணங்கி தன்னை வீட்டுக்கு போகுமாறு கேட்ட அந்த போராட்டத்தை குழப்புவதற்கு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

"கோட்டா கோ கம" போராட்டக்காரர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து அவர்களின் நலன்களைக் கவனிக்க ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜேவர்தன மற்றும் கொழும்பு மாநகர மேயர் றோசி சேனநாயக்க தலைமையில் குழுவொன்றை நியமித்தமை பிரதமராக பதவியேற்ற பிறகு விக்கிரமசிங்க செய்த முதல் காரியங்களில் ஒன்றாகும்.

இவற்றுக்கு முன்னதாக மே மாத ஆரம்பத்தில் காலிமுகத்திடல் போராட்டக்களத்துக்கு அண்மையாக பெருமளவு பொலிஸ், இராணுவ வாகனங்களைக் கொண்டுவந்து நிறுத்தி அச்சுறுத்தும் வகையிலான நடவடிக்கைகளில் அரசாங்கம் இறங்கியபோது விக்கிரமசிங்க பாராளுமன்ற கட்சி தலைவர்களின் கூட்டத்தில் அவசர காலச் சட்டத்தை பயன்படுத்தி "கோட்டா கோ கம" வை குழப்புவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமானால் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகப்போவதாகவும் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கத்துக்கு உதவுவதை நிறுத்தப்போவதாகவும் எச்சரிக்கை செய்திருந்தார்.

இவ்வாறாக எல்லாம் செய்த அவர் பாராளுமன்றத்தில் ஜூலை 20 ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற மறுநாள் இலங்கையின் 8 வது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியேற்ற 24 மணி நேரத்திற்குள் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி பொலிசாரையும் படையினரையும் கொண்டு அதிகாலை வேளையில் காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை பலவந்தமாக அப்புறப்படுத்தினார். பொலிசாரும் படையினரும் போராட்டக்களத்தை எவ்வாறு சுற்றிவளைத்தார்கள் என்பதும் போராட்டக்காரர்களுடனும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனும் எவ்வாறு முரட்டுத்தனமாக நடந்துகொண்டார்கள் என்பதும் இப்போது உலகறிந்த விடயம்.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை, ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரிமாளிகை மற்றும் பிரதமரின் அலுவலகம் ஆகியவை ஆக்கிரமிக்கப்பட்ட பிறகு போராட்டக்காரர்கள் மத்தியில் இரு பிரிவினர் இருப்பதாக ஒரு நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டார். அதாவது அமைதிவழியில் போராடுகின்றவர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் கவனிக்கப்படவேண்டியவை என்கின்ற



அதேவேளை, போராட்டத்திற்குள் ஊடுருவி அரச கட்டிடங்களை ஆக்கிரமித்திருக்கும் "பாசிசவாதிகள்" சட்டம் ஒழுங்கைச் சீர்குலைத்து அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கம் கொண்டவர்கள் என்ற வகையில் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று அவர் கூறினார்.

அதன் பிரகாரம் அவரின் உத்தரவின் பேரில் பாதுகாப்பு படையினர் போராட்டக்காரர்களின் கட்டமைப்புக்களை எல்லாம் நிர்மூலஞ்செய்து அரச கட்டிடங்களையும் ஆக்கிரமித்தவர்களிடம் இருந்து மீட்டனர். ஜனாதிபதி செயலகத்தில் இருந்து ஜூலை 22 பிற்பகல் வெளியேறிவிடுவதாக போராட்டக்காரர்கள் ஏற்கெனவே அறிவித்ததை பொருட்படுத்தாமல், அன்றைய தினம் அதிகாலையில் மிகவும் சொற்ப எண்ணிக்கையான போராட்டக்காரர்களே களத்தில் தங்கியிருந்த நிலையில் அந்த எண்ணிக்கைக்கு எந்த விதத்திலும் விகிதப் பொருத்தமில்லாமல் பெருமளவில் படையினரைக் குவித்து மேற்கொண்ட நடவடிக்கை மூலம் ஜனாதிபதி விக்கிரமசிங்க போராட்டக்காரர்களுக்கு தெளிவான செய்தியொன்றை தெரிவிக்க விரும்பினார் போலும். கோட்டா கோ கம ஒரு ரணில் கோ கம வாக மாறுவதை அனுமதிக்க அவர் தயாராயில்லை.

காலிமுகத்திடல் படை நடவடிக்கைக்குப் பிறகு அரசியல் முனையில் ஒருவித அமைதி நிலவுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. மக்கள் மனதில் பீதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மக்கள் கிளர்ச்சியின்போது தவிர்க்கமுடியாத வகையில் உணர்ச்சி மேலீட்டின் விளைவாக இடம்பெற்றிருக்கக்கூடிய சில சம்பவங்கள் இப்போது சட்டம், ஒழுங்குப் பிரச்சினையாக நோக்கப்பட்டு அதில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்படுவதைக் காண்கிறோம்.

இலங்கை அதன் வரலாற்றில் இதுவரையில் காணாத படுமோசமான பொருளாதார நெருக்கடியில் திணறும் பொதுமக்கள் தன்னெழுச்சியாக - பெருமளவுக்கு அரசியல் தூண்டுதல் இல்லாமல் - முன்னெடுத்த கிளர்ச்சியில் துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் இடம்பெறுவது தவிர்க்கமுடியாதது. அவற்றையெல்லாம் வெறுமனே சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக நோக்குவது நாட்டுக்கு அவசரமாக தேவைப்படுகின்ற அரசியல் உறுதிப்பாட்டை கொண்டுவர உதவாது என்பதை அரசாங்கம் உணர்ந்து செயற்படவேண்டும். மக்கள் கிளர்ச்சி என்பது தெளிந்த நீரோடையோ அல்லது மலர்ப்படுக்கையோ இல்லை.

அதேவேளை, ஒரு சில மாதங்களுக்குள் தீவிரமடைந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதியொருவரை பதவி கவிழ்த்த கிளர்ச்சி எந்தவொரு அரசியல் கட்சியினாலும் ஏற்பாடு செய்யப்பட்டதல்ல, பொருளாதார நெருக்கடியின் விளைவான இடர்பாடுகளுக்கு மக்கள் தன்னெழுச்சியாக வெளிக்காட்டிய பிரதிபலிப்பே கிளர்ச்சி வெற்றியின் மூலாதாரமாகும். மக்களின் கொந்தளிப்பைக் கண்டு அதிர்ச்சியடைந்த அரசியல் கட்சிகள் பிறகு ஆதரவை வெளிக்காட்டி தங்களையும் கிளர்ச்சியுடன் அடையாளப்படுத்துவதில் நாட்டம் காட்டின. வீதிப்போராட்டங்களில் வழமையில் அக்கறை காட்டாத நடுத்தர வர்க்கம் அண்மைய போராட்டங்களில் சமூகத்தின் ஏனைய பிரிவுகளுடன் இணைந்து பெருமளவில் பங்கேற்றமை கிளர்ச்சியின் தன்னியல்புக்கு ஒரு சிறந்த சான்றாகும்.

அறகலய மக்கள் கிளர்ச்சிக்கு ஆதரவாக கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக சமூக ஊடகங்களில் நிரம்பி வழிந்த பதிவுகள் அந்த போராட்டத்தின் முக்கிய இயக்கு சக்திகளில் ஒன்றாக விளங்கின. ஆனால், இப்போது கடந்த சில நாட்களாக அதுவும் குறிப்பாக படை நடவடிக்கைகளுக்கு பிறகு சமூக ஊடக பதிவுகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்படுவதாக பத்திரிகைகள் சுட்டிக்காட்டுகின்றன.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தை ஆதரித்த கலைஞர்கள், மாணவர்கள், தொழிற்சங்கவாதிகள் மற்றும் சட்டத்தரணிகள் இப் போது முன்னைய ஆர்வத்துடன் இல்லை என்ற ஒரு மதிப்பீடும் இருக்கிறது.

போராட்டங்களில் முன்னரங்கத்தில் நின்றவர்களுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் "வேட்டை" பல தரப்பினர் மத்தியில் பீதியை ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

**(9 ஆம் பக்கம் பார்க்க...)**

ஈழநாடு



# மக்களின் குரலுக்கு செவிசாய்க்கவேண்டுமே தவிர, அடக்குமுறை கூடாது

போராட்டக்காரர்களை தனிமைப்படுத்துவதை விடுத்து அவர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை மதித்து அரசாங்கம் அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவேண்டும். மக்களின் குரலுக்கு செவிமடுக்கவேண்டுமே தவிர, போராட்ட இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களை இலக்குவைத்து அடக்குமுறையை செய்யக்கூடாது என்று இலங்கை தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்திக் கேட்டிருக்கிறது.

வெள்ளியன்று சமாதானப் பேரவை இது தொடர்பில் வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

உலகில் அரிதாக காணப்படக்கூடிய ஒரு வகையான அரசியல் கொந்தளிப்பை இலங்கை கண்டிருக்கிறது. மக்களுக்காக, மக்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதமேந்தாத ஒரு மக்கள் இயக்கம் ஒரு ஜனாதிபதியை, ஒரு பிரதமரை, ஒரு அமைச்சரவையை பதவிவிலக நிர்ப்பந்தித்தது.

இந்த போராட்ட இயக்கம் அதன் பருமன், பயனுறுதி மற்றும் அமைதிவழி ஆகியவை காரணமாக சர்வதேச சமூகத்தின் கவனத்தை பெரிதும் ஈர்த்ததை காணக்கூடியதாக இருந்தது. போராட்ட இயக்கத்தின் வெற்றிக்கு காரணம் அதன் தன்னெழுச்சியும் அமைதியும் கொண்ட தன்மையேயாகும்.

மக்களின் மெய்யான மனக்குறைகள் மற்றும் பிரச்சினைகளில் இருந்த வெளிக்கிளம்பிய போராட்ட இயக்கம் மாபெரும் வெகுஜன இயக்கமாக மாறியது. இடர்மிகு நிலைவரத்துக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள மறுத்த முன்னைய அரசாங்கம் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் தவறியது. இடம்பெற்றிருக்கக்கூடிய வன்முறைகள் அரசாங்கத்தினாலேயே முதலில் தொடக்கிவிடப்பட்டவையாகும்.

ஶ்ரீ லංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

புதிய ஜனாதிபதி தலைமையில் இப்போது பதவிக்கு வந்திருக்கும் புதிய அரசாங்கம் 2022 மே மாதம் பதவி விலகிய அமைச்சரவையின் உறுப்பினர்களையே பெரும்பாலும் கொண்டிருக்கிறது. இது போராட்டக்காரர்களின் அதிருப்திக்கும் வெறுப்புக்கும் மேலும் வலுச்சேர்த்திருக்கிறது.

பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களை விரிவாக விசாரித்து அதற்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.

தவறான ஆட்சிமுறை மற்றும் ஊழல் காரணமாக நாடு சந்திக்கவேண்டியிருந்த பல தோல்விகள் தற்போதைய பாராளுமன்றத்தின் மீது மக்களை நம்பிக்கை இழக்கச்செய்துவிட்டன. அதனால் புதிய மக்கள் ஆணையுடன் பாராளுமன்றம் தெரிவு செய்யப்படுவதற்காக விரைவில் தேர்தல் ஒன்றை அறிவிக்குமாறு நாம் அரசாங்கத்திடம் கோருகிறோம்.

போராட்டங்களை மூளவைத்த காரணிகளை கையாளுவதற்கு பதிலாக அரசாங்கம் போராட்ட இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களை வலுவில்லாத குற்றச்சாட்டுக்களின் பேரில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் இலக்குவைப்பது எமக்கு பெருங்கவலையை தருகிறது. இந்த அவசரகாலச் சட்டத்தின் கீழ் கிரமமான சட்டங்களும் அவற்றினால் கிடைக்கின்ற பாதுகாப்புகளும் இடைநிறுத்தப்படுகின்றன.

பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் நிலை பலமானதாக தோன்றுகிறது, ஆனால் அதன் மக்கள் ஆதரவு மிகவும் பலவீனமானதாக இருக்கிறது என்று உலக நாடுகளின் பொருளாதார நிலைவரம் குறித்து மதிப்பீடு செய்கின்ற “ஃபிற்ச் றேட்டிங் 2022 ஜூலை 28 கூறியிருக்கிறது.

அதனால் அரசாங்கம் போராட்டக்காரர்களை தனிமைப்படுத்துவதை விடுத்து அவர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளுக்கு செவிமடுத்து அவர்களுடன் அர்த்தபுஷ்டியான முறையில் ஊடாட்டங்களை செய்வதற்கு வழிவகைகளைக் கண்டறியவேண்டியது முக்கியமானதாகும்.

# “அறகலய” மக்கள் கிளர்ச்சியும்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால், மக்கள் கிளர்ச்சிக்கான மூலக்காரணிகள் இன்னமும் இல்லாமல் போய்விடவில்லை. இன்னமும் மக்கள் எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்காக நீண்ட வரிசைகளில் காத்துக்கிடக்கிறார்களள. அந்த வரிசைகளில் மக்கள் இன்னமும் மயங்கிவிழுந்து மரணமடைந்துகொண்டிருக்கிறார்கள். பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் ஒரு வேளை உணவை தவிர்ப்பதை வழக்கமாக்கிக்கொண்டுள்ளன. மக்களின் இந்த பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காண்பதே அரசாங்கத்தின் முன்னுரிமைக்குரிய கடமையாக இருக்கவேண்டும்.



பொருளாதார நெருக்கடியின் விளைவான மக்களின் இடர்பாடுகள் போராட்ட நாட்களில் இருந்ததையும் விட எந்த விதத்திலும் இப்போது குறைந்துவிடவில்லை. நிலைவரங்களை அரசாங்கம் எவ்வாறு கையாளுகிறது என்பதைப் பொறுத்தே மீண்டும் மக்கள் வீதிகளில் இறங்குவார்களா இல்லையா என்பதைக் கூறமுடியும். மக்களின் மனக்கொந்தளிப்பு அடங்கிப்போய்விடவில்லை. அரசியல் நோக்குடனான சக்திகள் போராட்டத்திற்குள் ஊடுருவிவிட்டன என்று கூறுவதன் மூலம் மக்களின் கவனத்தை திசைதிருப்பமுடியாது.

அரசியல் புரட்சியொன்றின் பரிமாணங்களை எடுத்த மக்கள் கிளர்ச்சியின் உலகறிந்த சின்னமாக விளங்கிய கோட்டா கோ கம படையினரால் அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றதே தவிர அந்த கிளர்ச்சியில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. புதிய மொந்தையில் பழைய கள் என்பது போன்று ஜனாதிபதி விக்கிரமசிங்க தலைமையில் அமைந்திருக்கும் அரசாங்கம் அந்த கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய தகுதியுடன் இருக்கிறது என்று எவரும் நம்பவில்லை.

மக்கள் கிளர்ச்சியின் காரணமாகவே தன்னிடமிருந்து இதுகாலவரை நழுவிக்கொண்டிருந்த நாட்டின் அதியுயர் பதவியான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி தனது கைகளில் சிக்கியது என்பதை விக்கிரமசிங்க புரிந்துகொள்ள வேண்டும். ராஜபக்சாக்களை அதிகாரத்தில் இருந்து விரட்டிவிட்டு விக்கிரமசிங்கவை அரியாசனத்தில் அமர்த்துவதற்காகவா மக்கள் இவ்வளவு நாளும் இரவு பகலாக போராடினார்கள்? நிச்சயமாக இல்லை. தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணக்கூடியதும் ஊழலற்றதுமான அரசாங்கம் ஒன்றை மக்கள் வேண்டிநிற்கிறார்கள். புதியதொரு அர சியல் கலாசாரம் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பது அவர்களின் அபி லாசை.

மக்கள் கிளர்ச்சி உண்மையில் அரசியல் அதிகார வர்க்கத்தின் அத்திபாரத்தை ஆட்டங்காண வைத்திருக்கிறது. இதே நிலைவரத்தை அந்த வர்க்கம் தொடர்ந்து அனுமதிக்கப்போவதில்லை. மீண்டும் மக்கள் கிளர்ச்சி உருவாகாமல் தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் அது மேற்கொளளும். மக்களின் பிரச்சினைகளை தீர்த்துவைத்து கிளர்ச்சிக்கான சூழ்நிலைகளை இல்லாமல் செய்வதென்பது அதிகாரவர்க்கத்தினால் சாதிக்கமுடியாத ஒன்று. பதிலாக அடக்குமுறை நடவடிக்கைகளின் ஊடாகவே கிளர்ச்சி மூளாதிருப்பதை உறுதிசெய்வதில் அவர்கள் முழுமூச்சாக செயற்படுவார்கள். அரச இயந்திரம் அந்த நோக்கத்துக்காக முழுவீச்சில் பயன்படுத்தப்படும். இது வரலாறு கற்றுத்தந்த பாடம்.



அதனால் முறைமை மாற்றம் (System Change) என்பது வெறுமனே அரசாங்க மாற்றத்துடன் வந்துசேருகின்ற ஒன்றல்ல. தற்போதைய அரசியல் அதிகார வர்க்கம் பயன் படுத்துகின்ற அதே அரச இயந்திரத்தை வைத்துக்கொண்டு முறைமை மாற்றத்தை செய்யமுடியாது என்பதை புதிய போராட்ட சக்திகள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

இந்த பின்னணியில்தான் அறகலய மக்கள் கிளர்ச்சி பற்றி இப்போது எழுதுகின்ற பல சர்வதேச அரசியல் அவதானிகள் கடந்த தசாப்தத்தின் தொடக்கத்தில் அரபுலகை ஆக்கிரமித்த “அரபு வசந்தம்” மக்கள் புரட்சிக்கு நேர்ந்த கதி இதற்கும் ஏற்படுமா என்று எழுப்புகின்ற கேள்வியை நோக்கவேண்டியிருக்கிறது.

ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்ட அரபு நாடுகளில் எல்லாம் குழப்பநிலைக்கு மத்தியில் அரசியல் உறுதிப்பாட்டை மீளநிலை நிறுத்துவது என்ற பெயரில் மீண்டும் எதேச்சாதிகாரிகளே அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கிறார்கள். பழைய முறைமையே புதியவர்களின் தலை மையில் நடைமுறையில் இருக்கிறது கூடுதல் இராணுவ பலத்துடன்.

இன்னொரு முக்கிய விடயம். அறகலய போராட்டக்காரர்களுக்கு கூட்டிணைவான தலைமைத்துவம் ஒன்று இருக்கவில்லை. பல்வேறு அரசியல் சீர்திருத்த நிகழ்ச்சி நிரல்களை முதன்மைப்படுத்துவதற்கான களமாக போராட்டம் தவிர்க்கமுடியாத வகையில் மாறியது. மற்றையது பதவியில் இருந்த ஆட்சியை விரட்டிய பின்னர் அடுத்து உடனடியாக செய்யவேண்டியது குறித்து போராட்டக்காரர்கள் மத்தியில் திட்டமெதுவும் இருக்கவில்லை.

அதனால் தொடர்ந்தும் கிளர்ச்சி என்பது தொடர்ந்தும் குழப்ப நிலையோ என்ற ஒரு பீதி மக்கள் மனதில் தோன்றவும் ஆரம்பித்தது.

# அரசியல் கட்சிகளைப் பிளவுபடுத்தும்

## ரணிலின் தந்திரோபாய நகர்வலையில் சுமந்திரனின் கூட்டமைப்பும் சிக்கியது

**பனங்காட்டான்**

இலங்கை அரசியலில் தற்போதைய நிலைமாறு காலம் என்பது இடைக்காலம், இடர்காலம் என பல்பரிமாணங்களில் பயணிக்கிறது.

தேசிய அரசுமில்லை, தனிக் கட்சி அரசுமில்லை, சர்வகட்சி அரசுமில்லை - பல கட்சிகளைப் பிளவுபடுத்தி பிரித்தெடுக்கும் ஆட்சிக்குழுவாக அரச கட்டமைப்பு மாற்றம் பெற்று வருகிறது.

கோட்டாபயவை ஆட்சியை விட்டு அகற்ற ஆரம்பித்த கோட்டா கோ ஹோம் போராட்டம் முதல் 100 நாட்களை முடிப்பதற்குள் ராஜபக்சக்கள் அனைவரையும் ஒட்டு மொத்தமாக உயர் பதவிகளிலிருந்து ஓடவைத்து விட்டது.

இது நிரந்தரமானதல்ல, தற்காலிகமானது என்று ஒரு தரப்புக் கூறி வந்தாலும், அடுத்து இரண்டரை ஆண்டுகளுக்கு ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதியாக இருப்பார் என்றவாறு காய்கள் நகர்த்தப்படுகின்றன.

மக்கள் போராட்டத்தை ஆதரிப்பதாகக் கூறி வரும் ரணில், இப்போது அதன் இலக்கு என்ன என்று கேள்வி எழுப்பியுள்ளதுடன், சரியான இலக்குடன் போராட்டம் நடைபெற தான் எதிர்ப்பில்லை என்று கூறுவது இவரது இடைக்கால ஆட்சித் தந்திரம்.

'புதிதாக அமைக்கப்பட்ட அமைச்சரவை நிரந்தரமானதல்ல. மேலும் 12 பேரை அமைச்சர்களாக நியமிக்கும் வரை இது தற்காலிக அமைச்சரவை. மேலும் 40 வரையான ராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட உள்ளனர். இதில், பல அரசியல் கட்சிகளும் இணைக்கப்படும். நாட்டின் நலனுக்காக அனைவரையும் அரசியல் பேதமின்றி அழைக்கிறேன்' என்ற ரணிலின் பகிரங்க வேண்டுகோள், இலங்கையில் ஜனநாயகம் மலர்ந்துள்ளது என்று காட்டும் விசித்திர முன்னெடுப்பு.

இவரது உண்மையான செயற்பாடும், நிலைப்பாடும், சகல அரசியல் கட்சிகளையும் சின்னாபின்னமாக்கி, எந்தக் கட்சியையும் பலமாக இயங்க முடியாமற் செய்து, தமது கதிரையை பலப்படுத்துவது.

மறுபுறத்தில், கோத்தபாயவை சிங்கப்பூரில் கைது செய்ய வேண்டும், போர்க் குற்றத்திற்கான பொறுப்புக் கூறலுக்குள் புகுத்த வேண்டும் என்ற முன்னெடுப்புக்களும் தீவிரம் பெற்றுள்ளன. எனினும், சிங்கப்பூர் அரசாங்கம் அவருக்கு மேலும் இரண்டு வார தங்கிட விசா வழங்கியுள்ளது. இது மேலும் மேலும் நீடிக்கப்படலாம். கோட்டா போர்க்குற்றவாளியென நிரூபிக்கப்படாதவரை, அவர் மீது எந்த நாடும் கடும் போக்கை மேற்கொள்ள சாத்தியமில்லை.

கோட்டா விரைவில் நாடு திரும்ப உள்ளதாக சில தகவல்கள் வந்து போகிறது. அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைப் பகிரங்கமாக அறிவித்துள்ளார். யதார்த்தநிலை நோக்கின் கோட்டா தமது நாட்டிற்குத் திரும்புவதில் எந்தத் தடையுமில்லை. அவர் இப்போது இலங்கைப் பிரஜாவுரிமையுடன் மட்டும் இருக்கிறார். அவரை நாட்டை விட்டு வெளியேறுமாறு போராட்டக்காரர்கள் ஒருபோதும் கேட்கவுமில்லை. அவருக்குத் தெரிந்த மரண பயத்தால் அவர் தப்பியோட நேர்ந்தது என்று மட்டுமே கூறமுடியும்.

மற்றைய ராஜபக்சக்கள் அமைச்சுப் பதவிகளைத் துறந்துவிட்டு, நாடாளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றி வருவதை போராட்டக்காரர்கள் எதிர்க்கவில்லை. இந்த நிலையில் தமது ஜனாதிபதிப் பதவியைத் துறந்த கோட்டா அரசியலை விட்டு விலகி சாதாரண பிரஜையாக இலங்கையில் வாழ முடியும்.



இலங்கையில் இரண்டு பருவப்பெயர்ச்சிக் காற்றுகளே உண்டு. ஒன்று – வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்று. மற்றது – தென்மேல் பருவப் பெயர்சிக்காற்று. இப்போது எந்தக் காற்று இலங்கையில் வீசுகிறது?

அவர் மீதான போர்க்குற்ற விசாரணைகளை சர்வதேச மட்டத்தில், ஜெனிவா மனித உரிமை பேரவையில் குறிவைத்து முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு தமிழர் தரப்பையே சார்ந்தது. புலம்பெயர் தமிழர் அமைப்புகள் ஜெனிவா அமர்வுக் காலங்களில் அறிகைகளுடனும், ஆர்ப்பாட்டங்களுடனும் புறப்படும். பின்னர் எல்லாமே பொசுங்கிப் போய்விடும். தாயகத்திலுள்ள தமிழர் தேசியக் கட்சிகளும் இதே நிலைதான்.

வரப்போகும் செப்ரெம்பர் மாத மனிதஉரிமைப் பேரவையின் அமர்வு முக்கியமான ஒன்று. ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தை இலங்கை ஆட்சி பீடங்கள் நிராகரித்து வந்துள்ளன. ஜெனிவா கூறிய சர்வதேச விசாரணைப் பொறிமுறையை இலங்கை அரசு முழுமையாக நிராகரித்து விட்டது.

அடுத்தடுத்து ஜெனிவா பல கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டும் அனைத்தும் தீர்மானங்களாகவே உள்ளன. செப்ரெம்பர் மாத 51ஆவது அமர்வு இலங்கை விடயத்தில் இறுக்கமான கடும்போக்குத் தீர்மானத்தை நிறைவேற்றுமென மனித உரிமை ஆணையாளர் பச்சிலற் அம்மையார் அறிவித்திருந்தார்.

நாட்டில் புதிதாக ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி, மக்கள் எழுச்சிப் போராட்டம், ராஜபக்சக்களின் பதவி துறப்புகள், நிலைமாறுகால ஆட்சிமாற்றம், போராட்டங்களை நசுக்குவதற்கான அவசரகால ஊரடங்குப் பிரகடனங்கள் என்ற புதிய பரிமாணங்களின் விளைவை ஜெனிவா எந்தளவுக்கு வயப்படுத்தி மேல் எடுக்கும் என்பது தெரியவில்லை.

இலங்கை மீதான தீர்மானத்தை முன்னர் அமெரிக்கா கொண்டு வந்த போது, அதன் இணை அனுசரணையாகவிருந்த இலங்கை அரசு - அப்போதைய பிரதமரான ரணில் இப்போது ஜனாதிபதியாக உள்ளதால், மீண்டும் அதே போக்கில் இயங்குவாரென சொல்ல முடியாது. தமது பதவியேற்பின் ஒரு வாரத்துக்குள்ளேயே படையினரை ஏவி போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியதற்காக பல நாடுகளின் கண்டனத்துக்குள்ளாகி இருக்கும் வேளையில், ஜெனிவாவில் செம்ரெம்பர் மாதம் அவர் 'பல்டி' அடிப்பாரென எதிர்பார்க்க இடமுண்டு. அவ்வேளை இவரையும் ஜெனிவா குற்றக்கூட்டுக்குள் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு வலிசுமக்கும் தமிழர்களையே சார்ந்தது.

கோட்டா மீதான குற்றச்சாட்டுக்களை உள்வாங்கி, சர்வதேசத்துடன் இணைந்து நடவடிக்கை எடுக்கும் நிலைப்பாட்டையும், ரணில் எடுக்க மாட்டாரென்றே நம்பலாம். ராஜபக்சக்களின் பொதுஜன பெரமுனவின் ஆதரவின்றி இவரால் தமது தற்போதைய கதிரையைத் தக்க வைக்க முடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் இலகுவாக வெற்றி பெற்ற ரணில் இந்த வாரம் அவசரகால சட்டத்தை நிறைவேற்றுவதிலும் வெற்றிபெற்று தம்மை அரசியல் பலசாலியாக உலக அரங்கிற்குக் காட்டி உள்ளார். இதுதான் அவருக்குக் கிடைத்த பிளஸ் பொயின்ட்.

இதனூடாக நாடாளுமன்றத்தின் சகல கட்சிகளையும் லாவகமாக இவர் பிளந்துள்ளதையும், பிரித்துக் கொண்டிருப்பதையும் காணலாம். பொதுஜன பெரமுனவின் அக்கிராசனரான ஜி.எல்.பீரிஸ் கட்சியின் முக்கியத்துவரான டளஸ் அழகப்பெரும ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கட்சிக்குள் நெருக்கடியைச் சந்திக்கின்றனர். பிரீஸ் அமைச்சர் பதவியை இழந்துள்ளார். டளஸ் அழகப்பெரும புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கி வருகிறார்.



சஜித் பிரமதாசவின் மக்கள் சக்தியைத் சேர்ந்த ஹறின் பெர்னான்டோவும், மனுகூஷ நாணயக்காரவும் இப்போது ரணிலுடன் இணைந்து மீண்டும் அமைச்சர்களாகி உள்ளனர். மேலும் சுமார் பத்துப் பேர் சஜித் அணியிலிருந்து பிரிந்து ரணில் பக்கம் பாய உள்ளதாக செய்திகள் வருகின்றன.

இந்த நெருக்கடியைத் தடுத்து தனது அணி உடைந்து சிதறுவதைக் காப்பாற்ற புதிய சர்வகட்சி அரசில் பிரதமர் பதவியை ஏற்க சஜித் பிரமதாச முன்வந்துள்ளார். ஆயினும் ஜனாதிபதி ரணில் அதனை நிராகரித்து விட்டார். எதிரணியைச் சின்னாபின்னமாக்கி சஜித்தை கோ ஹோம் ஆக்குவதே ரணிலின் இப்போதையை நோக்கம்.

ராஜபக்சக்கள் மறைநிலையில் நின்று ஆட்சி நிர்வாகத்தை நடத்த, சஜித்தை முழுமையான அரசியல் நிர்வாணமாக்க ரணில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பகிரங்கமானவை.

இதுபோன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் உள்ளகத்தில் பிளவு நிலைக்குள் சென்றுள்ளது. ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்பின் போது இரண்டு கூட்டமைப்பின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலுக்கு வாக்களித்ததை ஹறின் பெர்னான்டோ அம்பலப்படுத்தி இருந்தார். பெயர்களை அவர் குறிப்பிடாவிட்டாலும், அவர்கள் யார் யார் என்பது சம்பந்தனுக்கும், சுமந்திரனுக்கும் தெரியும். வாக்களிப்பின் போது தமது வாக்குச்சீட்டை கைத்தொலைபேசியில் படமெடுக்க முனைந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரின் கைத்தொலைபேசியை நாடாளுமன்ற அலுவலர்கள் பறித்தெடுத்தனர். சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தாம் ரணிலுக்கு வாக்களித்ததை அவருக்குக் காட்டி நிரூபிப்பதற்காக படமெடுக்க முனைந்தார் என்பது ரகசியமன்று.

ரணிலுக்கு எதிராக டளஸ் அழகப் பெருமவை போட்டியிட நிறுத்திய பின்னணியில் சீனத் தரப்பு இருந்ததும், இதற்கு இணைவாக சுமந்திரனும், சாணக்கியனும் சீனத் தூதுவரை நேரில் சென்று சந்தித்து உரையாடியதும்கூட ரகசியமன்று. இது தொடர்பான நிறைய தகவல்கள் சேகரிப்பில் உண்டு. அவசியமேற்படும் போது அவைகளைப் பகிர்ந்து கொள்ளலாம்.

கோதபாய அரச தரப்பிலிருந்து முதலில் வெளியேறி நெருக்கடி உருவாக்கியவர்கள் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகிய மூவருமே. இவர்கள் ஒரு குழுவாக கோதாவுக்கு எதிர்ப்புக் காட்டுவதில் ஒற்றுமையாக இருந்தனர். இந்த வாரம் இடம்பெற்ற அவசரகாலப் பிரகடன வாக்கெடுப்பு இவர்களுக்குள்ளும் பிளவை ஏற்படுத்தியுள்ளது. விமல் வீரவன்ச இதில் ஆதரித்து வாக்களிக்க, உதய கம்மன்பல அணியினர் வாக்களிப்பை பகிஷ்கரித்தனர். அதே போன்று, மைத்திரிபால சிரிசேன தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. அது தவிர 41 உறுப்பினர்கள் அவ்வேளை நாடாளுமன்றத்தில் இருக்கவில்லை.

இந்த நிகழ்வை ரணிலின் சூட்சுமமான தந்தோரபாயத்தின் வெளிப்பாடு எனலாம். தமது தந்தை எஸ்மண்ட் விக்கிரமசிங்க இலங்கையில் அரசாங்கங்களை உருவாக்குவதிலும், வீழ்த்துவதிலும் கைதேர்ந்தவராக விளங்கிய வகிபாகத்தை, ரணில் 45 வருடங்கள் காத்திருந்து தமது இலக்கை நோக்கி செஸ் விளையாடுவது போல கையாளுகிறார்.

இதற்கு உதாரணமாக இரண்டு அரசியல்வாதிகளின் அறிவிப்புகளைப் பார்க்க முடிகிறது.

'வருவோரெல்லோரையும் வீட்டுக்குப் போ என்றால் யாரைக் கொண்டு வர காலிமுகக்காரர்கள் போராடுகிறார்கள்? எவர் என்ன செய்தாலும் அடுத்த இரண்டரை வருடங்களுக்கு ரணில்தான் ஜனாதிபதி' என்று கூறியுள்ளார் விமல் வீரவன்ச.

'போராட்டத்தின் மூலம் ரணிலே அதிக பயன் பெற்றுள்ளார். போராட்டம் நடந்திருக்காவிட்டால் ரணில் ஜனாதிபதியாக வந்திருக்கமாட்டார்' என்று கூறியுள்ளார் கூட்டமைப்பின் சுதந்திரன்.

இலங்கையில் இரண்டு பருவப் பெயர்ச்சிக் காற்றுகளே உண்டு. ஒன்று - வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்று. மற்றது - தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று. இப்போது எந்தக் காற்று இலங்கையில் வீசுகிறது?

# இம்முறை களைகட்டும் நல்லூர்!

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தன் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 2ஆம் திகதி ஆரம்பமாகின்றது. கடந்த 2018 முதல் நாட்டு சூழ்நிலைகளால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்று வந்த திருவிழா இம்முறை வழமையான ஏற்பாடுகளுடன் மிகச் சிற்அப்பான முறையில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்முறை நல்லூர் ஆலயச் சூழலில் பெரிய அளவில் வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டு திருவிழாக் கால வியாபார நடவடிக்கைகளும் மும்முரமாக இடம்பெறவுள்ளன. அதற்கான ஏற்பாடுகளை யாழ். மாநகர சபை மேற்கொண்டுள்ளது.

அறிக்கையிடல்
REPORTING
**என். குகராஜ்**



## வழமைபோல் இம்முறை திருவிழா ஏற்பாடுகள்

**த.ஜெயசீலன் ஆணையாளர், யாழ் மாநகரசபை**



வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர்கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்தின் ஆரம்பமாகி எதிர் வரும் 27 நாட்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

கடந்த மூன்று நல்லூர் ஆலய வருடாந்த உற்சவம் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் இடம்பெற்றது.

தற்போது நாட்டில் கொரோனா நெருக்கடி யற்ற நிலையில் நல்லூர் ஆலய உற்சவம் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி இடம்பெற வுள்ளது. வழமைபோல இம்முறையும் ஆலய உற்சவம் சிறப்பாக இடம் பெறுவதற்குரிய ஏற் பாடுகள் ஆலய நிர்வாகத்தினர்மற்றும் யாழ் மாநகர சபையினராலும் முன்னெடுக்கப்படு கின்றன.

நல்லூர் ஆலய வளாகத்தினுள் புதிதாக ஒரு கோபுரமும் அமைக்கப்பட்டுள்ளது அந்த கோபுர கும்பாபிஷேகம் உற்சவ காலத்தில் இடம் பெறுவதற் குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன.

எனவே இந்து மக்களால் மட்டுமன்றி அனைவ ராலும் வணங்கப்படுகின்ற முருகப்பெருமானின் வரு டாந்த உற்சவம் இம்முறை வழமை போல பிரம்மாண் டமாக இடம் பெறும் என எதிர்ப் பார்ப்புள்ளது.

தற்பொழுதும் கொரோனா பரவல் நிலைநாட் டில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் அனைத்தையும் அனுசரித்து பொதுமக் கள் மற்றும் அனைவரினதும் ஒத்துழைப்புடன் இம்முறை நல்லூர் ஆலய உற்சவம் சிறப்பாக இடம் பெறவுள்ளது-என்றார் மாநகர சபை ஆணையா ளர் ஜெயசீலன்.

## சகலரும் பங்கேற்க முருகனின் அருள்

**வ. பார்த்திபன்**



வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை ஆரம்பமாகி வெகு சிறப் பாக இடம் பெறுவதற குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று வருட காலமாக நல்லூர் ஆலய உற்சவம் விமரிசையாக இடம்பெறவில்லை என்ற கருத்து மக்களிடையே காணப்படுகின்றது. எனவே அந்த நிலை தாண்டி இவ்வருட மகோற்சவம் மிகவும் பிரம்மாண்டமாக இடம் பெறும்.

அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மாநகர சபை யினால் நல்லூர் ஆலய வளாகத்தில் வழமைபோல் முன்னெடுக்கப்படுகின்ற அனைத்து செயற்பாடு களும் இம்முறை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக கடந்த வருடம் முழுமையாக நல்லூர் உற்சவம் உள் வீதியுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில் வீடுகளில் இருந்தவாறு மக்கள் நல்லூர் கந்தனை வழிபட்டனர்.

இம்முறை அனைத்து மக்களும் நல்லூர் ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ள முருகன் அருள் புரிந்துள்ளார்.



## முகக் கவசம் அணிந்து சகலரும் பங்கேற்போம்

**வி.மணிவண்ணன் யாழ்.மாநகர முதல்வர்**



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், அதனுடைய ஏற்பாடு கள் மற்றும் நடைமுறைகள் யாழ்.மாநகர சபையினால் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

ஈஸ்டர் குண்டு வெடிப்பு மற்றும் கொரோனா தொற்று காரணமாக கடந்த மூன்று வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்ற நல்லூர் மஹோற்சவம் வழமைபோன்று அதாவது 2018 ஆம் ஆண்டுக்கு முன்பு எவ்வாறு உற்சவம் நடந்ததோ அதேபோல இம்முறை இடம்பெறும்.

மேலும் ஒகஸ்ட் 1ஆம் திகதி காலையில் இருந்து நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு ஒகஸ்ட் 29 ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்து விடப்படும்.

ஆலய வெளி வீதியைச் சூழ ஆலய நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும். வீதித்தடை பகுதிகளினுள் மாநகர சபையின் நீர் விநியோக வண்டி மற்றும் கழிவகற்றும் வண்டியை தவிர எக்காரணம் கொண்டும் வாகனங்கள் உட் செல்ல முடியாது. அதே போல வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப் படும் வீதித்தடை பகுதிகளினுள் எந்தவிதமான வியா பார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது. ட்ரோன் கமராக்களை பயன்படுத்தி காணொளி பதிவு செய்ய முடியாது.

காலணிகளுடன் ஆலய வளாகத்திற்குள் பிரவே சிக்க முடியாது.

ஆலயத்துக்கு நேர்த்திக்கடன்களைக் கழிப்பதற் காக வருகின்ற தூக்குக் காவடிகள் அனைத்தும் ஆல யத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட் டுமே உள்நுழைய முடியும். அவ்வாறு வருகின்ற காவடி கள் இறக்கப்பட்டதும், வாகனங்கள் அனைத்தும், செட்டித் தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத் தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ். மாநகர சபைக்கு முன் பாக உள்ள வீதியால் பய ணித்து யாழ் நகரை அடைய முடியும். ஆனால் இரதோற்சவம் மற்றும் சப்பர திருவிழாக் களின்போது கச்சேரி- நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும்.

முகக்கவசங்களை அணிவது சட்டமாக்கப்பட வில்லை. இருந்தபோதும் கொரோனா எச்சரிக்கை காணப்படுவதால் முகக்கவசங்களை அணிந்து தன்னெழுச் சியாக சுகாதார விதிமுறைகளை பக்தர்கள் பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனும் தங்களது சுகாதாரத்தில் கவனம் எடுத்து செயல்பட வேண்டும்.

திருட்டுச் சம்பவங்களை தவிர்க்க நல்லூர் ஆலயச் சூழலில் யாழ் மாநகர சபையினால் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்-என்றார்.



## கவர்ச்சி திசையில் ஐஸ்வர்யா

காக்கா முட்டை படத்தில் நடித்து பிரபலமானவர் ஐஸ்வர்யா ராஜேஷ். தனுஷ், சிவகார்த்திகேயன் எனப் பல முன்னணி நடிகர்களின் படங்களில் அவர் நடித்த போதும், குடும்பப் பாங்கான வேடங்களிலேயே அவர் நடித்து வந்தார்.

இந்நிலையில், அவர் சமீப காலமாக கவர்ச்சிப் பக்கமும் திரும்பி வருகிறார்.

இதன் காரணமாகவே சமீபத்திய அவர் வெளியிடும் ஒளிப்படங்களில் சற்று கவர்ச்சி வெளிப்படுகிறது. இந்த நிலையில் தனது சினிமா தோழிகளாக ஜனனி, சம்யுக்தா ஆகியோருடன் வெளிநாடுகளுக்கு சுற்றுலா சென்றுள்ள ஐஸ்வர்யா ராஜேஷ்.

குட்டையான உடையணிந்து எடுத்த படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகின.



## முருக பக்தராகும் யோகி



நடிகர் யோகி பாபு தீவிர முருக பக்தர். தற்போது முருக பக்தராகவே ஒரு படத்தில் நடிக்கிறார். முருகனின் அருளால் அவருக்குக் கிடைக்கும் பரிசு, அவர் வாழ்வை எப்படி மாற்றுகிறது என்பதுதான் கதை. முருகன் சம்பந்தப்பட்ட வார்த்தைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதையே தலைப்பாக வைக்கச் சொல்லியிருக்கிறாராம் யோகி பாபு.

முருகன் படங்களை அடிக்கடி சமூக வலைதளங்களில் பதிவிடுவதையும் வழக்கமாக வைத்திருக்கிறார் யோகி.

## எட்டிப்போகும் சமந்தா

'அடுத்த இரண்டு வருடங்களுக்கு படங்களை வைத்துள்ளார் சமந்தா. நாக சைதன்யா விவகாரத்துக்குப் பிறகு, சமந்தாவுக்கான வாய்ப்புகள் உயர்ந்து விட்டன.

விவகாரத்துக்கு முன்பு ஒன்றரைக் கோடி வரை சம்பளம் வாங்கிய சமந்தா, இப்போது நான்கு கோடிக்கு உயர்ந்திருக்கிறார்.

இந்த சம்பளத்தைக் கொடுக்க தமிழ் திரையுலக தயாரிப்பாளர்கள் முன்வந்தும், ஹிந்தி மற்றும் தெலுங்கு படங்கள் கைவசம் இருப்பதால், அவற்றை முடித்து விட்டு வர சமந்தாவுக்கு இரண்டு வருடங்கள் ஆகுமாம். அஜித், விஜய், சிவகார்த்திகேயன் ஆகியோருக்கு ஜோடி என்றால், திகதியில் சமரசம் செய்து ஒதுக்கிக் கொடுக்கலாம் என்று சமந்தா கூறியிருக்கிறாராம்.

## ரஜினியை தொடர்ந்து விஜயுடன்...!

டாக்டர், எதற்கும் துணிந்தவன், டான் போன்ற படங்களில் நடித்தவர் பிரியங்கா மோகன். அடுத்து நெல்சன் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் ஜெயிலர் படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்க போகிறார்.

பிரியங்கா தற்போது பல நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். ரஜினியின் ஜெயிலர் படத்தின் படப்பிடிப்பு தொடங்கியதும் இந்தியா திரும்பவுள்ள பிரியங்கா மோகன், அந்த படத்தை அடுத்து லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிக்கும் 67 வது படத்தில் நடிக்கவுள்ளார் என்று கூறப்படுகிறது.



## மீண்டும் ரஜினி - கமல்


ராஜ் கமல் நிறுவனத்துக்கு இயக்குநர் லோகேஷ் கனகராஜ் அழைக்கப்படக் காரணமே, ரஜினியை வைத்துப் படம் இயக்கத்தான். ரஜினியும் திகதி தருவதாகச் சொன்ன நிலையில், ஏனோ அந்தப் படம் தொடங்கப்படவில்லை. பிறகுதான் கமலை வைத்து 'விக்ரம்' படத்தைத் தொடங்கினார் லோகேஷ். 'விக்ரம்' பெருவெற்றி அடைந்திருக்கும் நிலையில், ரஜினி - கமல் இணைந்து நடிக்கக் கதை செய்யும்படி லோகேஷைப் பணித்திருக்கிறதாம் ராஜ் கமல் நிறுவனம்.

'ஹவிக்ரம்' வெற்றியை மிஞ்ச இந்த இணைப்பு தேவை' என நினைக்கிறாராம் கமல்!



## இன்று வெளியாகிறது பொன்னி நதி பாடல்

கல்கியின் சரித்திர நாவலான “பொன்னியின் செல்வன்” திரைப்படமாக உருவாகி வருகிறது. மணிரத்னம் இயக்க விக்ரம், கார்த்தி, ஜெயம் ரவி, சரத்குமார், விக்ரம் பிரபு, ஐஸ்வர்யா ராய், திரிஷா, ஜெயராம் உள்ளிட்ட ஏகப்பட்ட நட்சத்திரங்கள் நடித்துள்ளனர். ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள் இந்தப் படத்தின் முதல் பாகம் செப்ரெம்பர் 30ஆம் திகதி வெளியாகின்றது. இந்தப் படத்தின் முதல் பாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை வெளியாகின்றது. “பொன்னி நதி”என்ற பாடலே வெளியாகவுள்ளது.







**திரைப்படம் - தி லெஜன்ட்**
**இயக்கம் - ஜேடி ஜெர்ரி**
**இசை - ஹரிஸ் ஜெயராஜ்**
**நடிப்பு - சரவணன், கீத்திகா, ஊர்வசி ரவுட்டலா**
**வெளியான திகதி - 28 ஜூலை 2022**

தனது கடை விளம்பரங்களில், தமிழ் திரையுலகின் முன்னணி நடிகைகளுடன் சேர்ந்து நடனமாட, விளம்பரப் படங்களை எடுத்து அதன் மூலம் மக்கள் மத்தியில் ஓரளவுக்கு பிரபலமானவர் சரவணன். எந்தவிதமான விமர்சனம் வந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் திரையுலகில் நாயகனாக நடித்தே தீருவது என்று இந்தப் படத்தைத் தயாரித்து நாயகனாக அறிமுகமாகி இருக்கிறார்.

பல விளம்பர படங்களையும், “உல்லாசம், விசில்“ ஆகிய படங்களையும் இயக்கிய ஜேடி ஜெர்ரி இந்தப் படத்தை இயக்கியுள்ளார்கள். கதைக்காக எல்லாம் ரொம்பவும் கஷ்டப்படவில்லை. 50 வருடங்களுக்கு முன்பு வெளிவந்த “உலகம் சுற்றும் வாலிபன்“ வடிவிலான ஒரு கதையே போதும் என முடிவெடுத்து கொஞ்சம் உல்டா செய்திருக்கிறார்கள்.

இந்தியாவில் நீரிழிவு நோயளிகளின் எண்ணிக்கை அதிகம். அதன் வீரியத்தைக் குறைக்க இன்சுலின் ஊசியை போட்டு தங்கள் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கும் பலர் இருக்கிறார்கள். வெளிநாட்டில் தனது ஆராய்ச்சிப் படிப்பை முடித்துவிட்டு சொந்த ஊர் மக்களுக்காக எதையாவது செய்ய வேண்டும் என சரவணன், இந்தியா திரும்புகிறார். அவரின் பள்ளிக்கால நண்பன் ரோபோ சங்கர் குடும்பமே நீரிழிவு வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவரின் இரண்டு குழந்தைகளுக்கும் பிறந்ததிலிருந்தே அந்த நோய் இருக்கிறது.

இந்நிலையில் ரோபோ சங்கர் இறந்து விடுகிறார். அதனால் மனமுடையும் சரவணன் நீரிழிவு நோயை குணப்படுத்தும் மருந்தைக் கண்டு பிடிக்கும் ஆராய்ச்சியில் இறங்குகிறார். அதற்கு பெரிய மருந்து நிறுவனத்தின் உரிமையாளரான சுமன் எதிராக இருக்கிறார். சரவணன் மருந்தைக் கண்டுபிடித்தாரா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை

படம் முழுவதும் ஒரே தலைஅலங்காரம், சோகக் காட்சியில்கூட அப்படியே இருக்கும் ஒப்பனை, ஒரே விதமான வசன உச்சரிப்பு என பணம் இருந்தால் போதும் யார் வேண்டுமானாலும் படம் தயாரித்து நாயகனாக நடிக்கலாம் என சரவணன் இந்தப் படத்தில் நடித்துள்ளார். படத்தை பிரமாண்டமாக எடுத்தால் சில பல குறைகளை மக்கள் கண்டு கொள்ள மாட்டார்கள் என இயக்குநர்கள் அறிவுரை கொடுத்திருப்பார்கள் போலிருக்கிறது. படம் முழுவதும் ஒரே கூட்டமாக இருக்கிறது. எம். ஜி. ஆர், சிவாஜி, ரஜினி, கமல் படங்களை அதிகம் பார்த்து நடிக்க முயற்சித்திருக்கிறார் சரவணன். நடிப்பு என்பது வேறு என இனிப் புரிந்து கொள்வார்.

விளம்பரப் படங்களில் தன்னுடன் ஜோடி போட்டு நடித்த முன்னணி நடிகைகள் எத்தனை கோடி கொடுத்தாலும் படத்தில் தன்னுடன் ஜோடியாக நடிக்க மாட்டார்கள் என்பது அவருக்குப் புரிந்திருக்கிறது. அதனால் புதிதாக பொலிவூட் நாயகிகளை அழைத்து வந்திருக்கிறார்கள் இயக்குநர்கள்.

சரவணனின் மனைவியாக கீத்திகா முதல் பாதியிலும், சரவணனின் ஆராய்ச்சி உதவியாளராக ஊர்வசி ரவுட்டலா இரண்டாம் பாதியிலும் நடித்திருக்கிறார்கள். வில்லனாக சுமன். மிகப் பெரிய மருந்து நிறுவனத்தை நடத்துபவர். சரவணனின் ஆராய்ச்சிக்கு தடையாக இருப்பவர். சரவணன் அண்ணனாக பிரபு, இடைவேளைக்கு முன்பு நகைச்சுவைக்காக மறைந்த நடிகர் விவேக், இடைவேளைக்குப் பின்பு யோகி பாபு, சிரிக்க வைக்க முயற்சிக்கிறார்கள்.

படம் முழுவதும் பிரமாண்டமான அரங்குகள், நூற்றுக்கணக்கான துணை நடிகர்கள் என செலவை எகிற வைத்திருக்கிறார்கள். பாடல் காட்சிகளை முன்னணி கதாநாயகர்களுக்குரியதுபோல எடுத்திருக்கிறார்கள். ஆனாலும், அவற்றைப் பார்க்க விளம்பரப் பாடல் போலவே உள்ளது. ஹரிஸ் ஜெயராஜ் இதற்கு முன்பு வெளிவந்த சில ஹிட் பாடல்களை மீண்டும் கொப்பி அடித்திருக்கிறார்.

படம் எப்படித்தான் இருக்கிறது என பார்க்க ஆசைப்பட்டு சிலர் படத்தைப் பார்க்கப் போகிறார்கள். அதையே வரவேற்பு என நினைத்து அடுத்த படத்தை இந்தக் குழு விரைவாக ஆரம்பித்தாலும் ஆச்சரியமில்லை.

# பிரபாத்தின் ஆட்டம் ஆரம்பம்...!

கிரிக்கெட் உலகில் அச்சுறுத்தலான அணி என்று பெயரெடுத்தது இலங்கை அணி. துடுப்பாட்டம் - பந்துவீச்சு என்று ஜாம்பவான்கள் நிறைந்திருந்த இலங்கை அணி இன்று அறிமுக அணிகளுக்கே சவால் கொடுக்கத் தடுமாறி வருகின்றது.


எனினும், நம்பிக்கையுடன் சற்று ஏறுமுகம் காட்டத் தொடங்கியுள்ளது இலங்கை அணி. அண்மையில் தாயகத்தில் நடந்த அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் மகத்தான சாதனையைப் படைத்துள்ளது இலங்கை அணி.

இந்த மகத்தான சாதனைகளுக்கு பிரபாத் ஜெயசூரிய, ரமேஷ் மெண்டிஸ், தினேஷ் சந்திமால் ஆகியோரே முக்கிய காரணிகளாயினர். இலங்கை டெஸ்ட் அணியைப் பொறுத்தவரை மூன்று வாரங்களுக்கு முன்னர் பிரபாத் ஜெயசூரிய அணியில் இருக்கவில்லை. அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மோசமான ஆட்டத்தால் லசித் எம்புல்தெ னிய நீக்கப்பட்டார். அவரின் இடத்துக்கு பிரவீன் ஜெயவிக்கிரம நியமிக்கப்பட்டார். ஆனால், கொரோனா தொற்றால் அவர் பாதிக்கப்பட்டதையடுத்து அணிக்கு புதிய சுழல் பந்துவீச்சாளர்கள் தேவைப்பட்டனர்.

அந்தச் சமயத்தில் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன பிரபாத் ஜெயசூர்யாவை இணைக்குமாறு வலியுறுத்தினார். இவர்கள் இருவரும் சிங்கள விளையாட்டு கழகத்துக்காக (எஸ். எஸ். சி.) அணிக்காகவும் தேசிய சுப்பர் லீக் போட்டித் தொடரிலும் விளையாடியவர்கள். பிரபாத்தின் திறமைமீதான நம்பிக்கையாலேயே கருணாரத்ன அவரை சிபாரிசு செய்தார்.

பிரபாத் 62 முதல்தர போட்டிகளில் விளையாடியிருந்தார். எனினும், அவர் ஒருபோதும் டெஸ்ட் போட்டி ஒன்றிலேனும் விளையாடாவிடினும்கூட அனுபவத்துடனான பந்துவீச்சு முறைமையை மிக நேர்த்தியாகக் கையாண்டிருந்தார்.

ஆஸியுடனான முதல் தோல்விக்கு நன்கு மாற்றியமைக்கக்கூடிய சுழல்பந்துவீச்சாளர் ஒருவர் இன்மையே என்று கருதப்பட்டது. இப்போது 3 டெஸ்ட் போட்டிகளில் ஜெயசூரிய விளையாடியுள்ளார். இதில் இரு போட்டிகளில் வெற்றி பெறுவதற்கு அவர் முக்கிய பங்காற்றியுள்ளார். அவர் 6 இனிங்ஸ்களில் 20.37 என்ற சராசரியுடன் 29 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். அவரின் எக்கணமி 2.73. அவரை அறிமுகப்படுத்திய கருணாரத்னகூட பிரபாத் ஒரு நிலையான விக்கெட் வீழ்த்தும் அச்சுறுத்தும் வீரராக இருப்பார் என்று கற்பனை கூட செய்திருக்க மாட்டார்.




பாகிஸ்தானுக்கு எதிரான இலங்கையின் தொடரில் 8 விக்கெட்களை வீழ்த்திய ஜெயரசூரியா உயர் மட்டத்துக்கான தனது பாதையை பிரதிபலித்தார்.

இது எளிதான பயணமல்ல மாத்தளையில் இருந்து கொழும்புக்கு கிரிக்கெட் ஆட வந்தார். கடினமான பயணம். குடும் பத்தினர் அவருக்கு இல்லை. தனியாகவே இருந்தார். நிறையப்பேர் உதவினர். பயிற்று நர் தினேஷ் வீரசிங்க உதவினார். சிங்கள விளையாட்டு கழகத்துக்கா ஆடினேன்.

நிதிப் பிரச்னைகள் இருந்தன. அதை சமப் படுத்தவேண்டியிருந்தது. குடும்பத்தின் மீது அழுத்தம் கொடுக்க விரும்பவில்லை. வெளி நாட்டில் ஆடும் வாய்ப்புகள் வந்தன. ஆனால், நாட்டுக்காக விளையாட்டும் இலக்கை நோக்கி பயணித்தேன் இப்போது வெற்றி பெற்றுள்ளேன் என்று கூறுகிறார் பிரபாத்.

பிரபாத் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார். அவரின் நேரான பந்துவீச்சு. இடதுகை சுழல் பந்துவீச் சாளர்களை பொறுத்தவரையில் எல். பி. டபிள்யூ மற்றும் பந்துவீச்சில் ஆட்டமி ழப்பை கொண்டுவந்தார். இரண்டாவது டெஸ்டின் ஐந்தாம் நாளில் மூன்றாவது விக்கெட் ஆடிய றிஸ்வான் அந்த பந்து திரும்பும் என்று எதிர்பார்த்து ஓவ் ஸ்டம்பை தாக்கினார். அதன்பிறகு மீத முள்ள விக்கெட்களை பெற இலங்கைக்கு 23 ஓவர்களே தேவைப்பட்டன. இதில், பிரபாஸ் 5 விக்கெட்களையும், ரமேஷ் மெண்டிஸ் 4 விக்கெட்களையும் வீழ்த்தி யிருந்தனர். ஒருவர் இறுக்கத்தையும் அழுத்தத்தையும் ஏற்படுத்த ஒருவர் விக்கெட்டை வீழ்த்தினார். இதுவே இந்தப் போட்டியின் வெற்றிக்குக் காரணம் என்கிறார் பிரபாத் ஜெயசூரிய.

எது எப்படியோ முரளிதரன், சமிந்த வாஸ், பண்டார, மலிங்க என பந்துவீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்திய இலங்கை அணி, இன்று அவர்களின் இடத்தை நிரப்ப முடியாமல் தவித்து வருகின்றது. ஆனால், இந்த இடைவெளியை பிரபாஸ் ஜெயசூரிய விரைவில் நிரப்புவார் என்பதே இலங்கை ரசிகர்களின் எண்ணமாகவுள்ளது.

# 3 புதிய சாதனைகள்

ஐக்கிய அமெரிக்காவின் ஒரிகொன், ஹேவோர்ட் பார்க் விளையாட்டரங்கில் ஜூலை 15ஆம் திகதியிலிருந்து ஜூலை 24ஆம் திகதி வரை நடைபெற்ற உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியில் 3 உலக சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

பெண்கள் பிரிவில் 2 உலக சாதனைகளும் ஆண்கள் பிரிவில் ஒரு உலக சாதனையும் நிலைநாட்டப்பட்டன.

ஒரிகொன் 2022 உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டிக்கான இறுதிப் பதக்கங்கள் நிலையில் ஐக்கிய அமெரிக்கா 13 தங்கப் பதக்கங்களுடன் முதலாம் இடத்தைப் பெற்றது.

பெண்களுக்கான 100 மீற்றர் சட்டவேலி ஓட்ட அரையிறுதிப் போட்டியை 12.12 செக்கன்களில் நிறைவுசெய்ததன் மூலம் நைஜீரிய வீராங்கனை டோபி அமு சான் புதிய உலக சாதனை நிலைநாட்டினார்.

அதன் பின்னர் நடைபெற்ற பெண்களுக்கான 100 மீற்றர் சட்டவேலி ஓட்ட இறுதிப் போட்டியை 12.06 செக்கன்களில் நிறைவு செய்த டோபி அமுசான் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

எவ்வாறாயினும் அவர் பதிவு செய்த 12.06 செக்கன்கள் உலக சாதனையாக கருத்தில்கொள்ளப்படவில்லை. ஏனேனில் 100 மீற்றர் சட்டவேலி ஓட்டப் போட்டியின்போது நேர்த்திசை காற்றின் வேகம் மணிக்கு 2.5 கிலோ மீற்றராக இருந்ததால் அவரது நேரப் பெறுதி உலக சாதனைக்கு கருத்தில் கொள்ளப்படவில்லை.

இதேவேளை பெண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலி ஓட்டப் போட்டியை 50.68 செக்கன்களில் நிறைவு செய்த அமெரிக்காவின் சிட்னி மெக்லோலின் புதிய உலக சாதனை நிலைநாட்டி தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.




ஒரு மாதத்துக்கு முன்னர் இதே அரங்கில் நிலைநாட்டப்பட்ட தனது சொந்த சாதனையான 51.46 செக்கன்கள் என்ற உலக சாதனையை மெக்லோலின் முறியடித்தே புதிய உலக சாதனையை நிலைநாட்டினார்.

உலக மெய்வல்லுநர் அரங்கில் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் தொடர்ந்து சாதனைகளை நிலைநாட்டி வரும் ஆர்மண்ட் டுப்லான்டிஸ் தனது சொந்த சாதனையை முறியடித்து புதிய உலக சாதனை நிலைநாட்டினார்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆண்களுக்காக கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 6.21 மீற் றர் உயரம் தாவிய ஆர்மண்ட் டுப்லான்டிஸ் தனது முந்தைய சொந்த சாதனையான 6.20 மீற்றர் உயரத்தை முறியடித்து புதிய உலக சாதனை நிலைநாட்டினார்.

சேர்பியாவில் இந்த வருடம் மார்ச் மாதம் நடைபெற்ற உள்ளக மெய்வல்லுநர் கோலூன்றிப் பாய்தல் போட்டியிலேயே டுப்லான்டிஸ் 6.20 மீற்றர் உயரம் தாவி உலக சாதனை நிலைநாட்டிய இருந்தார்.

ஒரிகொன் 2022 உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை சார்பாக பங்குபற்றிய மூவரும் முதல் சுற்றுகளுடன் வெளியேறினர்.

ஆண்களுக்கான 100 மீற்றர் திறன்காண் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய இலங்கையின் யுப்புன் அபேகோன் (10.19 செக்.) ஒட்டுமொத்த நிலையில் 30ஆவது இடத்தைப் பெற்று வெளியேறினார்.

பெண்களுக்கான 3,000 மீற்றர் தடைதாண்டும் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய இலங்கை வீராங்கனை நிலானி ரட்நாயக்க (9:54.10) ஒட்டுமொத்த நிலையில் 39ஆவது இடத்தைப் பெற்றார்.

பெண்களுக்கான 800 மீற்றர் திறன்காண் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய இலங்கையின் கயந்திகா அபேரட்ன (2:02.35) ஒட்டுமொத்த நிலையில் 29ஆவது இடத்தைப் பெற்றார்.

ஒரிகொன் 2022 உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியில் ஐக்கிய அமெரிக்கா 13 தங்கம், 9 வெள்ளி, 11 வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தம் 33 பதக்கங்களை வென்று முதலாம் இடத்தைப் பெற்றது.

எதியோப்பியா 4 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களுடன் 2ஆம் இடத்தையும் ஜெமெய்க்கா 2 தங்கம், 7 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கங்களுடன் 3ஆம் இடத்தையும் பெற்றன.

# - டிஜிட்டல் திரையில் வாசிப்பு -

## நம் மூளையில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துகிறது?

**வா**சிப்பு போன்று ஓர் இயல்பான விஷயம் எதுவும் இல்லை. வாசிப்பு பழக்கம் என்பது நமது சிந்தனையை மாற்றும் திறன் கொண்டது. அனைவரும் புத்தகங்களை வாசிக்க வேண்டும். புத்தகங்கள் ஒரு வாழ்க்கை அனுபவம் புத்தகங்கள் அறிவு சார்ந்தது. புத்தகங்கள் ஒரு சமூகம். புத்தகங்கள் இல்லையென்றால் மனிதர்களுக்கு தற்போது இருக்கும் பண்புகள் இருந்திருக்காது. மனித இனத்தின் மிகச் சிறந்த கண்டுப்பிடிப்புகளில் ஒன்று, படிப்பறிவு.



நம் பரிணாம வளர்ச்சி எனும் கடிகாரத்தில், கண் இமைக்கும் நொடியில் வாசிப்பு உருவானது. வாசிப்பு பழக்கம் தொடங்கி வெறும் ஆறாயிரம் ஆண்டுகளே ஆனது. எத்தனை மது பாத்திரங்கள் அல்லது கால் நடைகள் நம்மிடம் உள்ளன என்பதை குறித்ததில் தொடங்கியது வாசிப்பு. எழுத்துக்கள் தோன்றியதால் அறிவை சேமிக்கவும், நினைவில் வைத்து கொள்ளவும் ஒரு சிறந்த முறை உருவானது.

மனித மூளை வடிவமைப்பின் முக்கிய அமைப்பை மாற்றும் சக்தி கொண்டது வாசிப்பு. இது பார்வை திறன், மொழி திறன், சிந்தனை திறன், உணர்வு திறன் ஆகியவற்றுக்குள் ஒரு புதிய தொடர்பை ஏற்படுத்த உதவுகிறது. ஒவ்வொரு புதிய வாசிப்பாளருக்கும் உண்மையில் புத்துணர்ச்சியை தருகிறது. அது நம் மூளையில் இயல்பாக உருவாக வில்லை.

படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டிய ஒவ்வொரு நபரும் தங்கள் மூளையில் ஒரு புதிய அமைப்பை உருவாக்க வேண்டும்.

ஒரு நல்ல கதையை வாசிப்பது என்பது பொழுது போக்கு நிகழ்ச்சிகளை விட அதிக நன்மைகள் அளிக்கக்கூடியது. வாசிப்பு பழக்கத்திற்கு பல மருத்துவ ரீதியான நன்மைகள் உள்ளன. வாழ்வில் ஏற்படும் நோய்களுக்கு தீர்வாக புனைவுகளை பரிந்துரைக்கும் கலையே நூலியல் மருத்துவம் பிப்லியோதெரபி. படைப்பாற்றலும், அறிவாற்றல், கருணை ஆகிய மூன்று அற்புதமான திறன்களை வாசிப்பு அளிக்கிறது.

நீங்கள் படிக்கும் போது, உங்கள் மூளை தியான நிலைக்கு செல்கிறது. உங்கள் இதயத் துடிப்பு சீராகி, உங்களை அமைதிப்படுத்தி, பதட்டத்தைக் குறைக்கும் ஒரு செயல்முறையாக வாசிப்பு உள்ளது.

நாம் மேலோட்டமாக படிக்கும்போது, நாம் தகவலை மட்டும் பெறுகிறோம். நாம் ஆழமாகப் படிக்கும்போது, நமது பெருமூளைப் புறணியை (cerebral cortex) அதிகம் பயன்படுத்துகிறோம். ஆழ்ந்த வாசிப்பு என்பது நாம் தொடர்பு முறையை உருவாக்குவதாகும். நாம் அனுமானங்களை உருவாக்குகிறோம். இது நம்மை உண்மையிலேயே விமர்சனம், பகுப்பாய்வு, கருணை கொண்ட மனிதர்களாக உருவாக்குகிறது.

புத்தகம் வாசிப்பை ஒரு வேலை என்று நாம் நினைக்கிறோம், ஆனால் புத்தகம் வாசிப்பு ஒரு விநியோக செயல் திறன் கொண்டது (Delivery Mechanism).

வாசிப்பு பழக்கம் புதுமை அடைந்து வருகிறது. அலைபேசியில் படிக்க வேண்டுமென்றே எழுதப்படும் அற்புதமான புத்தகங்கள் வந்துவிட்டன.

இந்த மாதிரியான புதிய முறைகள், புதிய தலைமுறை எழுத்தாளர்களுக்கு அதிக பலன்களை கொடுக்கின்றன. அவர்கள் தடைகளைக் கடந்து செல்ல வேண்டியதில்லை. “நல்ல எழுத்து“ இதுதான் என்ற கட்டமைப்பை அது உடைக்கிறது. மேலும் இது உண்மையில் மக்களைப் பேசவும் கதைகளைப் பகிர்ந்து கொள்ளவும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பு அளிக்கிறது.

எதில் வாசிக்கிறோம் என்பது முக்கியமில்லை, எப்படி கிடைக்கிறது என்பது முக்கியமில்லை, கதைதான் முக்கியத்துவம் பெறுகிறது. புத்தகம் என்பது ஒருவேளை இதுதான் என்ற மாயையை வழங்குகிறத் உண்மையில் அது அப்படி இருந்தும் இருக்காது, இது ஒரு சிந்தனை செயல்முறைக்கான ஒரு வழி

“முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களும், விஞ்ஞானிகளும் ஒன்றிணைத்து, வாசிப்பில் டிஜிட்டல் மயமாக்கலின் தாக்கம் குறித்து ஆய்வு செய்தோம். இந்த ஆய்வில், உங்கள் ஸ்மார்ட்போனில் சமமாக நன்றாகப் படிக்கக்கூடிய நிறைய விஷயங்கள் உள்ளன் நீங்கள் சிறிய செய்தியையும் படிக்கலாம். ஆனால் அறிவாற்றல் அல்லது உணர்ச்சி ரீதியாக சவாலான ஒன்றாக இருக்க வேண்டும் என்று நினைத்தோம். காகிதத்தில் படிப்பதை விட டிஜிட்டல் திரையில் படிப்பது மோசமான வாசிப்பு புரிதலுக்கு வழிவகுக்கிறது.”, என்று கூறுகிறார் இ-ரீட் என்ற அமைப்பின் தலைவர் அன்னா மன்கேன்.

உண்மையில், நாம் எதைப் படிக்கிறோம் அல்லது எவ்வளவு படிக்கிறோம் என்பது அல்ல, ஆனால் எப்படிப் படிக்கிறோம் என்பதுதான் மிகவும் முக்கியம். ஸ்கிம்மிங் செய்ய, அதாவது மேலோட்டமாக படிக்க, நமக்கு ஒரு நாட்டம் இருப்பதால் , எதிர்மறை யான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

வாசிப்பு மூளையில் ஒரு பிளாஸ்டிக் சுற்றமைப்பை (Circuit) உருவாக்குகிறது. இது அது படிக்கும் ஊடகத்தின் பண்புகளை பிரதிபலிக்கும். டிஜிட்டலின் குணாதிசயங்கள் சுற்றமைப்புகள் பிரதிபலிக்கும்.

வாசிப்பிற்கான திறன்களைப் பயிற்றுவிக்காவிட்டால், இறுதியில் மிகவும் சிக்கலான உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ளும் திறனையும், ஒரு வேளை ஈடுபடும் மற்றும் கற்பனை செய்யும் திறனையும் நாம் இழக்க நேரிடும்.

மனிதனின் கற்பனை ஓர் அற்புதமான விஷயம் - நாம் எளிதில் ஒன்றை பழக்கக்கூடியவர்கள் . நமக்குக் கிடைத்திருக்கும் தொழில்நுட்பத்தைக் கொண்டு நாம் விரும்பியதைச் செய்வதற்கான வழிகளைக் காண்கிறோம்.

“மக்கள் இருமொழி மற்றும் மும்மொழி பேசக்கூடியவர்களாக இருப்பதைப் போலவே, நாம் ஒரு இரு அறிவுத்திறன் கொண்ட மூளையை வளர்த்துக் கொள்வோம் என்று நான் நம்புகிறேன். வாசிப்பு நம் இனத்திற்குக் கொடுத்த அசாதாரணமான பரிசை இழக்காமல் இருக்க, நாம் படிக்கும் சாதனம் அல்லது வழியை, மிகவும் பொருத்தமாக் தேர்வு செய்ய நம்மை நாமே ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்.”, என்கிறார் எழுத்தாளர் மரியானே ஊல்ஃப்.

---




**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**எஸ் கோபிநாத், நல்லூர், யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**

காலிமுகத்திடல் கோட்டா கோ கம போராட்டக் காரர்கள் ஒவ்வொருவராக கைதுசெய்யப்படுகின்றனரே. இப்படி நடக்கும் என்று எதிர்பார்த்தீர்களா?

**வியுக்தியார்:**

நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. எண்பத்தி ஒன்றில் யாழ்ப்பாணம் நூலகம் எரிக்கப்பட்ட அன்று, யாழ்ப்பாண நகரமே சிங்கள காடையர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. அப்போது அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி உள்ளூரில் இருந்த சில காடையர்கள் நகரத்திலுள்ள கட்சிகள் சிலவற்றை கொள்ளையடித்தனர். அதேபோலத்தான், போராட்டத்தில் மக்கள் உணர்வு பூர்வமாக கலந்துகொள்ள, அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சிலர் வன்முறையிலும் சிலர் திருட்டிலும் ஈடுபட்டனர். அவர்கள் கைதுசெய்யப்பட வேண்டியவர்கள் தான். ஆனால் நடப்பது அதுபோலத் தெரியவில்லை.

---

**க. பரணீதரன், உடுவில், யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**

சுயாதீனமாக இயங்குவதாக கூறும் விமல், கம்பன்பில, வாசு அணியினர் பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் டலஸ் அழகப்பெருமாவை ஆதரித்தனர். ஆனால் அதற்குப்பின்னர் நடந்த அவசர கால சட்ட வாக்கெடுப்பில் வெவ்வேறு நிலைப் பாட்டை எடுத்தனர். இப்படியானவர்களை மக்கள் பிரதிநிதிகளாக வைத்துக்கொண்டு இந்த நாட்டை முன்னேற்ற முடியும் என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:**

ஜனாதிபதி தேர்தலில் அழகப்பெருமாவை ஆதரித்தனர் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?. அப்போதும் கூட அவர்கள் சொன்னபடிதான் செய்தார்களோ தெரியவில்லையே? இல்லையெனில் டலஸ் இப்படி படுதோல்வி அடைந்திருக்கமாட்டாரே?

---

**ஜே. சுதர்சன் , அடம்பன், மன்னார்.**

**கேள்வி:**

சர்வதேச பொருளாதார நிபுணர்கள் இலங்கைக்கு சர்வதேச நாணயநிதியத்தின் உதவி கிடைக்காது என்கிறார்கள். ஆனால் இலங்கை அரச தரப்போ பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளது. விரைவில் உதவிகள் கிடைக்கும் என்கின்றனர். யார் சொல்வதைத்தான் நம்புவது?

**வியுக்தியார்:**

யார் என்ன சொன்னாலும் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த மாட்டோம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற ஒருவர் கடன் கேட்டால் நீங்கள் கொடுப்பீர்களா? முதலில் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த முடியாவிட்டாலும் கடன்காரரிடம் பேசி, ஒரு தவணையை எடுக்காதவரை யாரும் புதிய கடனை தரப்போவதில்லைதானே.

---

**என். நிசாந்தன், நெல்லியடி.**

**கேள்வி:**

அண்மைக்காலமாக உங்கள் பத்திரிகை ஒருசிலரை மாத்திரம் குறிவைத்து தாக்கி வருகிறீர்களே, காய்க்கிற மரத்திற்குத்தான் கல் எறி விழுகின்றது என்று எடுத்துக்கொள்ளலாமா?

**வியுக்தியார்:**

அண்மையில் முகநூலில் படித்த ஒரு நண்பரின் பதிவு தான் ஞாபகத்திற்கு வருகின்றது. ராஜபக்சக்கள் மீது தொடர்ச்சியாக விமர்சனங்கள் வைக்கப்பட்டது பற்றி எழுதிய ஒருவர், காய்க்கிற மரத்திற்குத்தான் கல் எறிவிழுகிறது என்று எழுதியிருந்ததற்கு ஒரு நண்பர், இல்லை தெரு நாய்க்கும்தான் கல் எறி விழும் என்று எழுதியிருந்தார். அதுசரி நாங்கள் எங்கே ஒருசிலரை குறிவைத்து தாக்கிவருகின்றோம்? யார் தவறுசெய்தாலும் அதனை வெளிச்சத்திற்கு கொண்டுவருவதுதானே ஊடகங்களின் பணி.



# சாவித்திரி ஒரு ஸ்ரீலங்கன் அகதியின் குழந்தை!

- வ.ந.கிரிதரன் -

இந்த அப்பா எப்பொழுதுமே இப்படித்தான். Harry Potter and The Goblet of fire புத்தகத்தைக் கடைசியில் ஒரு மாதிரி வாங்கித் தந்து விட்டார். ஜெ.கெ. ராவ்லிங்கின் ஹறி பாட்டர் தொடர் புத்தகங்கள் எனக்குப் பிடித்த தொடர்களிலொன்று. ஆனால் இந்தப் புத்தகத்தை மட்டும் அப்பா ஒவ்வொருமுறையும் வாங்குவதற்குச் சாக்குப் போக்குச் சொல்லி இழுத்தடித்துக் கொண்டு வந்தார். காரணம் இதன் விலைதான் தான். முப்பத்தைந்து கனடியன் டொலர்கள். சென்ற முறை சாப்டர்ஸ்ஸிற்குக் கூட்டிப் போனபோது இந்தப் புத்தகத்தை வாங்கித் தருவதாகத் தான் கூட்டிப் போனார். ஆனால் வழக்கம் போல் இறுதியில் கையை விரித்து விட்டார். “உனக்கம்மா இந்த ஒரு புத்தகத்திற்குப் பதிலாக இரண்டு “துரதிருஷ்ட்டவசமான சம்பவங்கள்” (The unfortunate events) புத்தகங்களை வாங்கித் தருகிறேன்” என்று வாங்கித் தந்து விட்டார். லெமொனி சினிக்கெட்டின் “துரதிருஷ்ட்டவசமான சம்பவங்கள்” தொடரும் எனக்கு மிகவும் விருப்பமான தொடர் தான். இந்ததொடரை எனக்கு அறிமுகப்படுத்தியவர் மிஸ் எலிஸபெத். எனது கிளாச் டீச்சர். தாய் தகப்பனில்லாத வயலட், கிளாஸ், குழந்தை சனியை பொல்லாத ஓலாவ் படுத்தும் பாடிருக்கிறதே. பாவம் அவர்கள். அவர்களது அப்பா அம்மாவை இந்தப் பொல்லாத ஓலாவ்தான் கொன்று விட்டான். இப்பொழுது இவர்களின் சொத்தினை அடைவதற்கும் முயன்று கொண்டிருக்கின்றான். திரு. போ (Mr.Poe) மட்டுமில்லையென்றால் இவர்களது பாடு இன்னும் அதிகத் துன்பம் நிறைந்ததாகவிருந்திருக்கும். இந்தப் புத்தகங்களென்றால் எனக்கு றொம்பவும் உயிர். அப்பாவுக்கும் தான். எந்த நேரமும் புத்தகம் புத்தகமாய் வாங்கி வருவார். ஆனால் ஒவ்வொருமுறையும் இந்தத் தொடர் புத்தகங்களை வாங்கித் தருவதற்கு மட்டும் அப்பா எப்பொழுதுமே முதலில் தயங்கத் தான் செய்கிறார். அது தான் ஏனென்று இன்னும் எனக்குப் புரியவில்லை. இப்படித்தான் மேரி பாப் ஆஸ்பார்னின் மந்திர மர வீடு (Magic Tree House) தொடர் நூல்களையும் முதலில் வாங்கித் தர அப்பா தயங்கிக் கொண்டிருந்தார். எனக்கு மிகமிகப் பிடித்த தொடர் இது தான். ஜக்கும் ஆன்னியும் ஒவ்வொரு முறையும் மந்திர மர வீட்டிலுள்ள புத்தகங்களினூடு கடந்த காலம், வருங்காலமென்று அலைந்து திரிந்து வருவதைப் போல் எனக்கும் அலைந்து திரிந்து வர ஆசைதான். நாங்கள் இருப்பதோ நகரத்துத் தொடர்மாடி இல்லமொன்றில். இதற்கெல்லாம் சாத்தியமேயில்லை.அப்பா எப்பொழுதுமே சொல்லிக் கொண்டுதானிருக்கிறார் “கொஞ்சம் பொறம்மா! இன்னும் இரண்டு வருடங்களிற்குள் வீடு வாங்கி விடுகின்றேன்” என்று. இந்த அப்பாவை ஒரு போதுமே நம்ப முடியாது. ஆனால் அப்பவுக்கு நான் நிறையத் தொந்தரவு தான் செய்கின்றோனோ தெரியவில்லை. பாவம் அப்பா! என்னால் அவருக்கு நிறையச் செலவு. தொலைக் காட்சியில் செய்திகள் பார்ப்பதற்கு அப்பாவுக்கு என்னால் நேரமே கிடைப்பதில்லை. பாடசாலை இல்லாத நேரங்களில் தூங்கப் போகும் மட்டும் எனக்குத் தொலைக்காட்சி பார்க்கவேண்டும். எனக்குப் பிடித்தமான காட்சிகள் பார்த்துக் கொண்டிருப்பேன். “டி.வி.ஒ.கிட்ஸ்” நிகழ்ச்சியினை நடத்தும் பில், யூலி ஒன்று, யூலி இரண்டு, படி (Patty), சிசெல் எல்லோரும் நன்றாக நடத்துவார்கள். ஆனால் எனக்குப் பிடித்தவை “பெரு வெடிப்பு“ (The Big Bang) காட்சி தான். வயலட் பேர்லினும், ஹேரித் ஜோன்ஸ்சும் இணைந்து நடாத்தும் நிகழ்ச்சி. விளையாட்டுகள், புதிர்கள் எல்லாவற்றையும் எவ்விதம் செய்வதென்று விளக்கம் தருவார்கள். நீல் பஞ்சனானின் “ ஓவியத் தாக்குதலும்” (Art Attack) எனக்கு மிகவும் பிடித்தவை. வீட்டில் பாவிக்கப்படாமலிருக்கும் பொருட்களைக் கொண்டு எவ்விதம் ஓவியங்களை உருவாக் குவதென்று அழகாக நீல் செய்து காட்டுவார். மார்டின் க்ராட், கிறிஸ் கிராட் சகோதரகளின் “சூபூமொவூ” (Zoboomofoo), பொம்மை லீமா எல்லாம் என்னைக் கவர்ந்தவை. இவர்களின் “கிராட் உயிரினங்கள்“ காட்சியும் நல்லதொரு காட்சி. மிருகங்களைப் பற்றிய தகவல்களைத் தரும் காட்சிகளிவை.

என்ன இவள் ஓயாமல் தனக்கு விருப்பமானதைப் பற்றியே கூறிக் கொண்டிருக்கிறாளென்று பார்க்கின்றீர்களா? தன்னைப் பற்றி ஒன்றுமே கூறவில்லையேயென்று பார்க்கின்றீர்களா? கொஞ்சம் பொறுங்கள் கூறி விடுகின்றேன் கேளுங்கள். என் பெயர் சாவித்திரி. எனக்கு வயது ஒன்பதுதான் ஆகிறது. நான் ஒரு கனடியப் பிரசை. நான் பிறந்தது டொராண்டோ மாநகரிலுள்ள ஸ்கார்பரோ கிரேஸ் ஆஸ்பத்திரியில் தான். நான் பிறக்கும் பொழுதே அம்மாவை நல்லா வருத்திப் போட் டுத் தான் இவ்வுலகிற்கு வந்துதித்தேனாம். என் அப்பா அம்மா இருவரும் ஸ்ரீலங்காப் பிரசைகளாகவிருந்து கனடியப் பிரசைகளானவர்கள். ஸ்ரீலங்காவில் ஒரே யுத்தமாம். அதனால் தான் இங்கு வந்தவர்களாம். அகதியாக வந்தவர்களாம். அப்பா தான் முதலில் வந்தவராம். அப்பாவிற்கு அவரது ஊரில பெரிய வீடு தோட்டமெல்லம் இருந்ததாம். அவர் ஸ்ரீலங்காவில் சீமெந்துத் தொழிற்சாலையில் பொறியியலாளராக வேலை பார்த்து வந்தவராம். அங்கு மட்டும் யுத்தம் ஏற்பட்டிருக்காவிட்டால் அவர் ஒரு போதுமே இங்கு வந்திருக்க மாட்டாராம். அப்பொழுதெலலாம் நான் கூறுவேன்: “டாடி! அப்போ என்னை நீங்கள் இழந்திருப்பீர்களேயென்று.” அதற்கவர் கூறுவார்: “குஞ்சூ! எப்படியம்மா நான் உன்னை இழந்திருக்க முடியும். அப்பொழுது நீ தான் கனடாவை இழந்திருப்பாய். நீ தான் ஸ்ரீலங்காப் பிரசையாக இருந்திருப்பாயே!”. அப்பா என்னை அப்படிக் “குஞ்சூ” என்ற் அழைக்கும் போது எனக்கு எப்பொழுதுமே அப்பாவைக் கட்டிக் கொள்ள வேண்டுமென்றிருக்கும். அவ்வளவு தூரம் அன்பையெல்லாம் குழைத்துக் கூப்பிடுவார். அப்பா கூறுவார் அம்மா அவரது குடும்பத்தில் ஒரேயொரு பெண்பிள்ளையாம். மற்ற மூவரும் ஆண்பிள்ளைகள் தானம். எல்லோருக்கும் அவவென்றால் உயிராம். அவ்வளவு செல்லமாக வளர்ந்தவ இங்கு வந்து தொழிற்சாலையில் வேலை செய்வதைப் பார்த்தால் அவருக்குக் கவலையாகவிருக்குமாம். அவ கனடாவிற்கு வந்ததிலிருந்து பலவருடங்களாக அவவை வேலை செய்யவே அவர் விடவில்லையாம். ஆனால் ஒரு வருடமாகத் தானாம் அவ தானாகவே வேலைக்குப் போகவேண்டுமென்று அடம் பிடித்து வேலைக்குப் போகின்றாவாம். அதுவும் ஒரு விதத்திற்கு நல்லதுதானே என்று எனக்குப் பட்டது. அம்மா பகலிலை தொழிற்சாலையில் வேலையென்றால் அப்பா நள்ளிரவிலிருந்து காலை வரை நகரிலுள்ள ஆஸ்பத்திரியொன்றில் பாது காவலனாக வேலை செய்கின்றார். அப்பா சொல்லுவார் தான் கனடா வந்து செய்யாத வேலையில்லையென்று. உணவகங்களில் கோப்பை கழுவியதிலிருந்து, பொருட்களை உணவுகளை விநியோகிக்கும் சாரதி, ஆபிஸ் தளங்கள், வங்கிகளைக் கழுவியதிலிருந்து பாதுகாவலன் வேலை வரை எத்தனையோ வேலைகள் செய்து விட்டாராம். அம்மா அடிக்கடி சொல்லுவா “பாவம் இந்த மனுசன். ஊரில் என்ன மாதிரி இருக்க வேண்டிய மனுசன் இங்கு வந்து இப்படி அனுபவிக்க வேண்டுமென்று விதிதான். ஊரில் மட்டும் பிரச்சினை இல்லையென்றால் அடுத்த கணமே உங்கள் எல்லோரையும் கூட்டிக் கொண்டு நான் அங்கு போய் விடுவேன்.“ அப்பொழுதெல்லாம் நான் “அதெப்படி. நான் இந்நாட்டுப் பிரசை. நான் அங்கெல்லாம் வர மாட்டேன். எனக்குக் கனடா தான் வேண்டும்” என்று அழுது அடம் பிடிப்பேன். இந்த நாட்டை விட்டு வேறு ஒரு நாட்டிற்குப் போவதை என்னால் நினைத்துப் பார்க்கவே முடியாது. ஏன் இதனை அப்பாவும் அம்மாவும் உணர்கின்றார்களில்லை. அவர்களிற்கு எப்படி அவர்களது நாடு முக்கியமோ அப்படி முக்கியம் எனக்கு இந்த நாடும். முன்பெல்லாம் அப்பா அடிக்கடி கூறுவார் “கொஞ்சக் காசு சேரட்டும். பேசாமல் எல்லோரும் கொடைக்கானல் போய் விடலாம். குழந்தைக்கு எங்களுடைய பண்பாடெல்லாவற்றையும் காட்ட வேண்டுமெ“ன்று. ஆனால் நான் அப்பொழுதெல்லாம் “அது மட்டும் முடியாது. நான் கனடியன். இங்குதானிருப்பேன்“ என்று அடம் பிடித்து அழுவேன். இப்பொழுதோ அந்தக் கொஞ்சக் காசையும் அவர்கள் உழைத்து விட்டார்கள் போல் தெரிகிறது... ஆனால் அப்பா இப்பொழுது முன் போலில்லை. “யோசித்துப் பார்த்தால் ..என்னுடைய ஆசைக்காக ஏன் எங்களுடைய குழந்தையின் எதிர்காலத்தைப் பாழாக்க வேண்டும். எங்களுக்கு ஏற்பட்ட நிலைமை இங்கு பிறந்த எங்களுடைய குஞ்சுக்கும் ஏன் ஏற்படவேண்டும். எங்களுக்குத் தான் எங்களுடைய வெளிநாட்டுக் கல்வித் தகைமைகளிற்குரிய அங்கீகாரம் இங்கு கிடைக்கவில்லை. கிடைப்பதற்கும் எவ்வளவோ போராட வேண்டும். எல்லொருக்கும் போராடுவதற்கும் அவர்களது குடும்ப நிலைமைகள் விடுவதில்லை. எங்களுடைய குஞ்சு இந்தியாவில் படித்து விட்டு ஒருகாலத்தில் இங்கு திரும்பி வந்தால் அவளும் எங்களைப் போல் தானே பிரச்சினைகளை முகம் கொடுக்க வேண்டி வரும்” என்பார். அப்பா இப்பொழுது தனது எதிர்காலத் திட்டத்தை மாற்றிக் கொண்டார். “நான் இன்னும் கொஞ்சம் நல்லாக உழைத்து, முழுதாகப் பணம் செலுத்தி ஒரு வீடு வாங்கிக் கொஞ்சம் காசையும் வங்கியில் உங்களுடைய அன்றாடச் செலவுக்காக வைப்பில் போட்டு வைத்து விட்டு நான் மட்டும் கொஞ்சக் காலம் அங்கும் கொஞ்சக் காலம் இங்குமாகக் காலம் தள்ள வேண்டும்.“ என்பார். அப்பொழுதெல்லாம் அம்மா “இவ்வளவு காலம் உங்களுடன் காலந் தள்ளியது போதும். என்னுடைய கடைசி காலத்திலும் ஒரு போதும் உங்களுடன் இருக்க மாட்டேன்” என்று வேடிக்கையாகக் கூறுவா. ஆனால் அதற்கு அப்பா என்னிடம் “குஞ்சூ! நீ டாக்டராக வந்து அம்மாவுக்கும் ரிஷப்சனில் ஒரு வேலை போட்டுக் கொடுத்து விடு. அது தான் அவவுக்குச் சரி” என்று கூறிச் சிரிப்பார். அதற்கு நான் “அப்பா! உங்களுக்கும் கூடவேலை போட்டுத் தந்து விடுகிறேன்” என்பேன். அதற்கு அப்பா சிரித்துக் கொண்டே “நீ பொல்லாத குஞ்சம்மா!” என்பார்.

ஆனால் கொஞ்ச நாட்களாக அம்மாவுக்கும் அப்பாவுக்கும் அடிக்கடி சண்டை வர ஆரம்பித்து விட்டதன் காரணம் தான் சரியாக எனக்கு விளங்கவில்லை. சின்னச்சின்ன விசயங்களிற்கெல்லாம் சண்டை பிடிக்க ஆரம்பித்து விடுகின்றார்கள். சாதாரணமாக ஆரம்பிக்கும் சண்டை விரைவிலேயே சூடு பறக்க ஆரம்பித்து விடுகிறது. அப்பா கையில் கண்டதையெல்லாம் எடுத்து அம்மாவின் மேல் எறியத் தொடங்கி விடுகிறார். கையில் அம்மா அகப்பட்டு விட்டால் கண்டபடி அடிக்கவும் ஆரம்பித்து விடுகின்றார். ஆரம்பத்தில் சும்மா இருந்த அம்மாவும் பதிலிற்கு கையிலகப்பட்டதையெல்லாம் எடுத்து அப்பாவின் மேல் எறிய ஆரம்பித்து விடுகின்றா. அம்மாவும் அப்பாவும் சிறுவயதிலிருந்தே ஒன்றாகப் பழகியவர்களாம். அவர்களிற்கிடையில் என்ன நடந்து விட்டது. அப்பாவின் ஆக்களெல்லோரையும் அப்பா கனடா எடுத்து விட்டாராம். அம்மாவின் ஆக்களெல்லாம் இன்னும் ஸ்ரீலங்காவில் தான். அப்பா அடிக்கடி கூறுவார் “நீ கொஞ்ச நாளைக்காவது ஊருக்குப் போய் உன்னுடைய ஆக்களைப் பார்த்து வா“வென்று. ஆனால் அம்மாவோ அடிக்கடி தேவையில்லாமல் அப்பாவுடன் அப்பாவின் ஆக்களை எடுத்தெறிந்து கதைக்கத் தொடங்குவா. உடனே சண்டை ஆரம்பித்து விடும். அதுவரை அமைதியாகவிருக்கும் அப்பாவுக்கும் ஆத்திரம் பொத்துக் கொண்டு வரும். யுத்தம் தொடங்கி விடும். இடையில் அகப்பட்டுக் கொண்டு நான் முழிக்க வேண்டி வரும். எதற்காக இவர்கள் இப்படி எதற்கெடுத்தாலும் சண்டை பிடிக்கிறார்கள். ஒரு நாள் பொறுக்க மாட்டாமல் “கனடியர்கள் இவ்விதம் சண்டை பிடிக்க மாட்டார்கள். நீங்கள் ஸ்ரீலங்கர்கள் ஏனிப்படி சண்டை பிடிக்கிறீர்களோ“ என்று கேட்டு விட்டேன். அப்பாவுக்கு அது மனதைத் தைத்து விட்டது. “இங்குள்ள ஏனைய கனடியர்கள் சிலர் கேட்பதைப் போலவே கேட்டு விட்டாயேயம்மா“ என்று கவலைப் பட்டார். எனக்கும் வருத்தமாகப் போய் விட்டது. “எப்படியம்மா இவ்விதம் பிரித்துப் பார்க்க இந்தச் சின்ன வயசிலை மனசு வந்தது“ என்று சரியாகக் கவலைப்பட்டார். அப்பாவைத் தடவி ஒரு மாதிரி சமாதானம் செய்து விட்டேன்.“ ஒரு மாலையில் வழக்கம் போல் இருவரும் சண்டை பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

“கனடா வந்த இந்த பத்து வருடங்களில் என்னத்தைச் சாதித்துக் கிழித்துப் போட்டீர்கள். உங்களுடைய ஆட்களென்றால் உங்களுக்குப் பதறிக் கொண்டு வருகின்றது. எங்களைப் பற்றிக் கொஞ்சமாவது உங்களுக்குக் கவலையிருக்கிறதா?“ என்று அம்மா கேட்டதும் அப்பாவுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. “இத்தனை வருசமாய் உங்களை பராமரித்துக் கொண்டு வருகின்றேனே. அது உனக்குத் தெரியவில்லையா?“ என்று அப்பா கேட்டதும் அம்மா “என்ன ஊரில் மற்றவர்கள் செய்யாததைச் செய்து கிழித்துப் போட்டீர்கள். எல்லோரும் தானே குடும்பத்தைப் பார்க்கின்றார்கள். நீங்களில்லையென்றால் சமூக உதவிபணத்திற்கு விண்ணப்பித்திருப்பேன்“ என்று கூறியதும் தான் அப்பாவால் தாளமுடியவில்லை. அதன் பிறகு நானும் என்னை வெகுவாகக் கட்டுப்படுத்திக் கொள்ள ஆரம்பித்து விட்டேன். அவர்களிருவரின் சண்டையில் இடையில் குறுக்கிடுவதில்லை. ஆனால் சரியாகக் கவலையாகத் தானிருக்கும். ஆனால் இவ்விதம் அடிக்கடி ஆரம்பித்த சண்டைகள் கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாகி ஒரு நாள் அப்பா வீட்டை வருவதையே நிறுத்திக் கொண்டார். என்னால் அதன் பிறகு வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. அம்மாவும் எந்த நேரமும் ஒரே அழுதபடி. அப்பா எங்கிருக்கிறாரென்றே யாருக்கும் தெரியவில்லை.ஆனால் அப்பா டொராண்டோவில தான் தன்னுடைய நண்பரொருவருடன் இருப்பதாக அறிந்தோம். அந்த நண்பரூடாக அப்பா என்னுடன் தொடர்பு கொண்டார். “அப்பா! ஏனப்பா! எங்களை விட்டுப் பிரிந்து போனீர்கள். நீங்களில்லாமல் எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. வீட்டு வேலை (Home work) செய்வதற்கு எனக்கு யாருமே உதவியில்லையே“ என்றேன். அதன் பிறகு அப்பா ஒவ்வொரு நாள் மாலையிலும் எனக்காக வந்து எமது தொடர்மாடிக் கட்டடத்தில் வெளியில் அழைப்பு மணியை அழைத்துவிட்டுக் காத்திருப்பார். இருவருமாக அருகிலிருக்கும் நூலகம் செல்வோம். வீட்டு வேலைகள் எல்லாம் செய்து முடிந்ததும் அப்பா என்னை “மக்டானல்ட் கூட்டிச் செல்வார். ஒவ்வொரு நாளும் அப்பா என்னை மறுபடியும் வீடு கொண்டு வந்து விடும்போது “அப்பா! எப்ப திரும்பவும் எங்களுடன் வந்திருக்கப் போகின்றீர்கள்” என்பேன். அதற்கு அவர் “குஞ்சூ! உன் அம்மா தனியாக இருந்து வாழ்ந்து பார்த்தால் தான் எல்லாவற்றையும் உணர முடியும். அவ உணர்ந்த பின் அழைத்தால் வருவேன். அதன் பிறகு இவ்விதம் தேவையற்ற சண்டைகளைப் போடக் கூடாது.“ என்பார். அம்மாவிடம்“ அம்மா! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள். அப்பா இவ்விதம் கூறுகிறார்களே“ என்பேன். அதற்கவர் “நீ பேசமல் இருக்க மாட்டாய். எப்ப அவர் போய் விட்டாரோ. அப்பவே அவரை நான் கை கழுவி விட்டேன். என்னாலும் தனியாக வாழ முடியும்.” என்று ஆத்திரத்துடன் கூறுவா. ஆனால் அதன் பிறகு அவவிற்கு அழுகை வந்து விடும். எதற்காக அம்மாவும் அப்பாவும் இவ்விதம் வீண் பிடிவாதம் பிடித்துக் கொண்டு வாழுகிறார்களோ தெரியவில்லை..

நான் ஒருத்தி இருப்பதை இதனால் எனக்கேற்படும் பாதிப்புகளை ஏன் இவர்கள் உணர்கிறார்களில்லை.

இவர்களது சண்டைகளெல்லாம் தேவையற்ற விடயங்களிற்காக இருப்பதாக எனக்குப் படுகிறது. இவர்களுக்கேன் அவ்விதம் படுவதில்லை. அப்பா! வேண்டுமானல் எங்களுடன் மீண்டும் வந்து விடுங்கள். அப்படி வந்து விட்டால் நாங்களெல்லோருமாக நீங்கள் கூறியது போல் இந்தியாவோ எங்கோ வரவும் நான் தயாராகவிருக்கிறேன் அப்பா! எனக்கு அது விருப்பமில்லாவிட்டாலும் எனக்கு நீங்களும் அம்மாவும் தான் முக்கியம் அப்பா. மீண்டும் எங்களுடன் வந்து விடுங்களப்பா. வேண்டுமானால் நீங்களிருவரும் ஒருவருக்கொருவர் கதைக்காவிட்டாலும் பரவாயில்லை. ஒன்றாயிருங்கள். அது போதுமெனக்கப்பா! அப்பா! அடிக்கடி நீங்கள் உங்களது பால்ய காலத்து அனுபவங்களைப் பற்றிக் கூறுவீர்களே! எனக்கும் அத்தகைய அனுபவங்களைத் தரவாவது நீங்கள் எங்களுடன் வந்திருக்கத் தான் வேண்டும். அங்கு உங்களது சொந்த ஊரில் யுத்தம்மென்றுதானே இங்கு வந்தீர்கள். அங்கு தான் யுத்தம் எல்லோரையும் பிரித்து வைத்திருக்கிறது. இங்கும் உங்களிற்கிடையிலொரு யுத்தம் தேவைதானா? தேவையில்லாத விசயங்களிற்கெல்லாம் இவ்விதமொரு பிரிவினைத் தரும் யுத்தம் தேவைதானா? சொல்லுங்கள் அப்பா! சொல்லுங்கள் அம்மா! அப்பா! எப்போ நீங்கள் மீண்டும் வரப் போகின் றீர்கள்? அம்மா! எப்போ உங்களுடைய வீண் பிடிவாதத்தினை விட்டொழிக்கப் போகின்றீர்கள்?

# நீறு பூத்த நெருப்பாக செச்சினியா:

## குமுறும் கவ்காஷிய மலைகளும்.. தொடரும் ரஷ்யாவின் ஆதிக்கமும்..

ஐங்கரன் விக்கினேஸ்வரா



**செச்சினியா** பிரச்சனை இன்று நேற்று வந்ததல்ல, அது சுமார் முன்னூறு ஆண்டு கால பிரச்சனையாக குமுறும் கவ்காஷிய மலைகளில் நீறு பூத்த நெருப்பாக இன்னமும் எரிந்து கொண்டே இருக்கிறது.

**முன்னூறு ஆண்டு கால பிரச்சனை:**

அன்று ரஷ்யாவின் ஜார் (Czar) ஆட்சியாளர்களின் படைகள் செசன்னியர்களின் நிலங்களை 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆக்கிரமைக்க ஆரம்பித்த பிரச்சனை இன்னமும் தொடர்கிறது. இன்று வரை பல ஆட்சியாளர்கள் மாறிவிட்டார்கள், ஆனால் செசன்னியர்களுக்கு அவர்கள் நிலப்பகுதி மட்டும் திரும்ப கிடைக்கவில்லை. அன்றிலிருந்து இன்று வரை லட்சக்கணக்கான மக்களை இந்த விடுதலை போராட்டத்திற்கு அவர்கள் பறிகொடுத்து விட்டனர்.

1991 இல் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் செச்சினியா விடுதலையை நாடியது. ரஷ்யாவுடனான முதலாவது செச்சினியப் போரின் போது (1994-1996) செச்சினியரல்லாத சிறுபான்மையோர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். பின்னர் அது நிழல் அரசை அறிவித்தது. ஆனாலும் 1999 இல் இடம்பெற்ற இரண்டாம் போரின் பின்னர் ரஷ்யா தனது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் செச்சினியாவைக் கொண்டுவந்தது.

ரஷ்யாவோடு எல்லையைக் கொண்டுள்ள மத்திய ஆசியாவின் முஸ்லிம் பிராந்தியமான செச்னியா சுமார் 12300 சதுர கிலோமீற்றர் பரப்பளவு மட்டுமே கொண்டது. இங்கு வாழும் மக்கள் தொகை 1.5 மில்லியன்.

செச்சினியா கிட்டத்தட்ட எல்லா பக்கங்களிலும் ரஷ்ய பிரதேசத்தால் சூழப்பட்டுள்ளது, வடக்கு கவ்காசஸ் மலைத்தொடரில் வடமேற்கே ஸ்தாவ்ரபோல் பிரதேசம், வடகிழக்கு மற்றும் கிழக்கில் தாகெஸ்தான் குடியரசும், தெற்கில் ஜோர்ஜியா, மேற்கே இங்குஷேத்தியா மற்றும் வடக்கு அசேத்தியா ஆகிய ரஷ்யக் குடியரசுகளும் அமைந்துள்ளன.

**நிரந்தர அமைதி மற்றும் பாதுகாப்பு:**


நீண்ட கால போரின் பின்னர் நிரந்தர அமைதி மற்றும் பாதுகாப்பு தான் இப்போது செச்சினியா மக்களுக்கு தேவை என்றும் கூறுகின்றனர். பெரும்பாலான செசன்ய மக்களை பொறுத்தவரை இந்த நிரந்தர அமைதி மற்றும் பாதுகாப்பு என்பது செச்சினியா சுதந்திர நாடாவதால் மட்டுமே சாத்தியம் என்றும் கருதுகின்றனர்.ஆயினும் ரஷ்ய சம்மேளனத்தின் (Russian Federation) முடிவோ, அவர்களது மண்ணில் இருந்து ஒரு பகுதி பிரிவதை அனுமதிக்க முடியாது என்பதில் திடமாக இருந்தனர்.

ரஷ்யா என்னதான் செச்சினியா தங்களது பகுதி என்று சொன்னாலும், செச்சினியா மக்களை பொறுத்த வரை அவர்கள் என்றுமே தங்களை ரஷ்யாவின் ஒரு பகுதியாக நினைத்ததில்லை, அத்துடன் விரும்பியதில்லை! மேலும் செச்சினியா ரஷ்யாவின் நிலப் பகுதியும் இல்லை என்றும் வாதிடுகின்றனர். செசன்னியர்களை பொறுத்தவரை, ரஷ்யா தன் இராணுவ பலத்தால் அவர்களை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது எனக் கருதுகின்றனர்.

**சோவியத் ஒன்றிய பிளவு:**

சோவியத் ஒன்றிய பிளவின் பின்னர் 1991 ஆம் ஆண்டு கால கட்டத்தில் தாங்கள் ஒரு சுதந்திர நாடு என்று செசன்னியர்கள் அறிவித்து கொண்டார்கள். அதன் பின் ரஷ்ய கூட்டரசிற்கும், செசன்யாவிற்கும் இடையே இரு யுத்தங்கள் தொடர்ந்து மறுபடியும் செச்சினியா, ரஷ்ய கூட்டரசு ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

ரஷ்ய தேசம் ஐரோப்பாவின் கிழக்கிலிருந்து ஆசியாவின் கிழக்கு வரை பரந்து விரிந்த பகுதி. ரஷ்ய அரசியல் சாசனத்தின்படி, ரஷ்யா, 83 பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. (83 federal members of Federation).அவற்றில் 21 குடியரசுகள் (Republics) உள்ளன.




1991 இல் ரஷ்ய சம்மேளனம் உருவான போது, ரஷ்யாவில் இருந்த வெவ்வேறு இனத்தவருக்கு (உதாரணத்திற்கு செசன்னியர்கள்) அவர்கள் சார்ந்த இனம், மொழி வாரியாக குடியரசுகள் உருவாக்கப்பட்டன. இந்த குடியரசுகள் சுதந்திர நாடுகள் கிடையாது. இவை ரஷ்யாவின் கட்டுபாட்டுக்குள்ளேயே இருந்தன. ரஷ்யாவின் ஒரு பகுதியாகவே அறியப்படும்.

**ரஷ்ய சம்மேளனமும் குடியரசுகளும்:**

ஆனால் ரஷ்ய சம்மேளனத்தின் மற்ற பகுதிகளை விட இவற்றுக்கு அதிகாரம் அதிகம்.இந்த குடியரசுகளுக்கு தன்னாட்சி அதிகாரமும் (Autonomous) உண்டு. ஒவ்வொரு குடியரசும் தங்களுடைய அரசியல் சாசனத்தை (Constitution) உருவாக்கி கொண்டது. பாராளுமன்றம், குடியரசு அதிபர் என்று ஒரு நாட்டிற்கு இருக்கக்கூடிய எல்லா பதவிகளும் உள்ளன. குடியரசின் உள்விவகாரங்களை (Internal Affairs) எல்லாம் அவர்களே பார்த்துக்கொள்வார்கள். ஆனால் வெளியுறவு மற்றும் ராணுவ அதிகாரங்கள் (External Affairs and Military) எல்லாம் ரஷ்யாவிடம் இருக்கும்.



அதுமட்டுமல்லாமல், இந்த குடியரசுகளின் அதிபரை, ரஷ்ய அதிபர் தான் தேர்ந்தெடுப்பார். ஆனாலும் இன்றைய அதிபர் புடின் அவர்கள் ரஷ்யாவின் தலைமை பொறுப்புக்கு வந்த பிறகு குடியரசுகளின் அதிகாரங்களை பெருமளவு குறைத்து விட்டார்.

**ரஷ்யாவின் அச்சம்:**

வரலாற்றில் சோவியத் யூனியனில் (USSR) இருந்து பிரிந்து சென்ற 14 நாடுகளும் (1991), சோவியத் யூனியனின் குடியரசுகளாக இருந்தவை தான்.இதுதான் இன்றைய ரஷ்யாவின் மற்றுமொரு அச்சம். தற்போது ரஷ்ய கூட்டரசின் பகுதிகளாக உள்ள குடியரசுகளும் சுதந்திரம் கேட்க ஆரம்பித்து விட்டால் ரஷ்யாவின் நிலை என்ன ஆகலாம் என அச்சமடைந்துள்ளனர்.

1917ல் சோவியத் உருவாக்கத்தின் பிறகு தம்மை விடுவித்துக் கொள்வதற்காக செச்சினிய மக்கள் அவ்வப் போது நடத்திய போராட்டங்களும் தோல்வியிலேயே முடிந்துள்ளன. அதன் தொடராக 1922ல் செச்னியா சோவியத்தின் ஒரு அங்கமாக குடியரசானது.

**இரண்டாம் உலகப்போர்:**

1944-ஆம் ஆண்டு, தங்கள் விடுதலைக்காக, ஹிட்லரின் நாஜி படைகளுக்கு செசன்யர்கள் உதவுவதாக ஸ்டாலின் குற்றஞ்சாட்டினார். அதற்கு தண்டனை என்று, செச்சினியா மக்களை கஜகஸ்தானுக்கும், சைபீரியாவிற்கும் நாடு கடத்த உத்தரவிட்டார். 1944ல் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட செச்னியர்கள் இங்குஷ் மற்றும் வட கோகாஷிய மக்கள் இனச் சுத்திகரிப்பு செய்யப்பட்டு சைபீரியா மற்றும் மத்திய ஆசியா வுக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

1991ல் சோவியத் யூனியன் சரிவடைந்த பிறகு ரஷ்ய கூட்டமைப்பில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட சுதந்திரப் போராட்டத்தை செச்சினியா மக்கள் மீள மீண்டும் தொடங்கினர்.

1991 ஆகஸ்ட்டில் செச்சினியா அரசியல் வாதியும் முன்னாள் சோவியத்தின் விமாப் படை ஜெனரலுமான ஜகார் டுடாயேவ் என்பவர் உள்ளூர் கம்யூனிஸ அரசுக்கு எதிராக ஒரு சதிப் புரட்சியை மேற்கொண்டார்.

1991 அக்டோபரில் ஜகார் டுடாயேவ் செச்னியாவின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். நவம்பர் மாதத்தில் அவர் செச்னியா ரஷ்யாவிடம் இருந்து சுதந்திரம் பெற்று விட்டதாக ஒரு தலைப் பட்சமாகப் பிரகடனம் செய்தார்.

**1994 முதல் யுத்தம்:**

1994 டிசம்பர் 11ல் ரஷ்யா செச்னியாவை மீண்டும் ஆக்கிரமித்தது. விரைவாக 1995 மார்ச்சில் ரஷ்யப் படைகள் செச்னியாவின் தலைநகரான குரோஸ்னியை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். அதன் பிறகு 1996 ஏப்பிரல் 21ல் ஜகார் டுடாயேவ் ரஷ்யாவின் இலக்கு வைக்கப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

அதன் பிறகு முன்னாள் கெரில்லாத் தலைவர் அஸ்லன் மஷ்கடோவ் செச்னிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். 1997 மே இல் அன்றைய ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்ஸ்டின் மற்றும் அஸ்லன் மஷ்கடோவ் ஆகியோர் ஒரு இடைக்கால சமாதான உடன்படிக்கையில் ஒப்பமிட்டனர்.

ரஷ்யாவுக்கு எதிராக செச்னியாவில் இரண்டு ஆயுதப் போராட்டங்கள் நடந்துள்ளன. ஒன்று 1994 டிசம்பர் முதல் 1996 ஆகஸ்ட் வரை நீடித்தது. 1996 நவம்பர் நடுப்பகுதியில் யெல்ட்ஸின் மற்றும் மஷ்கடோவ் ஆகியோர் பொருளாதார உறவுகள் மற்றும் 1994 முதல் 96 வரையான யுத்தக் காலத்தில் பாதிக்கப்பட்ட செச்னிய மக்களுக்கான இழப்பீடுகள் என்பன தொடர்பன ஒரு உடன்படிக்கையில் ஒப்பமிட்டனர்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C　　2) E　　3) F

24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16　　2) 15　　3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய்　　2) நிஷான்　　3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13　　2) 14　　3) 15

27.  உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம்　　2) செவ்வகம்　　3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm　　2) 18cm　　3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3　　2) 2　　3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14　　2) 10　　3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ　　2) ஆ　　3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள்　　2) 3 தடவைகள்　　3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) தடவைகள்　　2) 5 தடவைகள்　　3) 4 தடவைகள்

36.  இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2　　2) 3　　3) 4

## விடைகள்

24. 2
25. 3
26. 1
27. 2
28. 2
29. 2
30. 3
31. 1
32. 1
33. 1
34. 2
35. 1

### கல்வி tv CHANNEL-1

**31.07.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி tv CHANNEL - 2

**31.07.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# காலி முகத்திடலை ஆக்கிரமித்துள்ள ஆர்ப்பாட்டக்காரர் மீது சட்டம் பாயும்!

## பொது பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை. 31

காலி முகத்திடலில் போராட்டம் நடத்தும் இடங்களை இன்னமும் ஆக்கிரமித்துள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபை, துறைமுக அதிகாரசபை உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளை அனுமதியின்றி ஆக்கிரமிப்பு செய்த குற்றச்சாட்டு அவர்கள் மீது சுமத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அதன்பிரகாரம் பாதுகாப்பு கமரா காட்சிகள் மற்றும் சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள வீடியோ காட்சிகள் மூலம் வளாகத்தை ஆக்கிரமித்துள்ளவர்களை அடையாளம் காணும் செயற்பாடு முன்னெடுக்கப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சு மேலும் கூறியுள்ளது.

போராட்டம் தொடர்பில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் தொலைபேசி உரையாடல்கள் மற்றும் வங்கிக் கணக்குகளை கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பொலிஸ், குற்றப் புலனாய்வு திணைக்களம் உள்ளிட்ட பல குழுக்களினால் ஜனாதிபதி செயலகம் உட்பட அடையாளம் காணப்பட்ட இடங்களில் தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார். (அ)

# எரிபொருள் விநியோகத்தில் இறுக்கமான கட்டுப்பாடுகள்

கொழும்பு, ஜூலை. 31

எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை நல்ல கட்டுப்பாட்டுடனும் நிர்வாகத்துடனும் பேணுமாறு மாவட்ட செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமைகளை உரிய திணைக்களங்களின் சரியான ஒருங்கிணைப்புடன் தீர்த்து வைக்குமாறும் மாவட்ட செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சட்டவிரோதமாக எரிபொருள் சேகரித்த 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

606 லீற்றர் பெற்றோல் மற்றும் 6,610 லீற்றர் டீசல் இதன் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ)

# நீறு பூத்த நெருப்பாக செச்சினியா...

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

1997 மே 12ல் செச்னியாவின் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அஸ்லான் மஷ்கடோவ் மொஸ்கோவுக்கு விஜயம் மேற்கொண்டார். அங்கு அவர் ரஷ்ய ஜனாதிபதியுடன் ரஷ்யா செச்னியா உறவுகள் பற்றிய கொள்கைகளும் சமாதானமும் என்ற உடன்படிக்கையில் முறைப்படி ஒப்பமிட்டார்

**1999 இல் இரண்டாவது போர்**

இரண்டாவது போர் 1999 ஆகஸ்ட் முதல் ஏப்பிரல் வரை நீடித்தது. இவ்விரு சுதந்திரப் போராட்டங்களின் போதும் சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான செச்னிய மக்கள் கொல்லப்பட்டனர் நான்கு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் தங்களது சொந்த இருப்பிடங்களில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இருந்தாலும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை இதைவிட அதிகம் என்றே கருதப்படுகின்றது.

நீண்ட போர்களின் பின்னர் 2003 புதிய ரஸ்ய அரசியலமைப்பு செச்சினியாவுக்கு அதிக சுயாட்சியை அளித்தது. ரஷ்ய கூட்டமைப்பிற்குள் அதன் அந்தஸ்தை உள்ளடக்கியதாக, அக்மத் கதிரோவ் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். 2004 ஜனாதிபதி கதிரோவ் வெடிகுண்டு மூலம் கொல்லப்பட்டார்.2005 மார்ச் பிரிவினைவாதத் தலைவர் அஸ்லான் மஸ்கடோவ் ரஷ்யப் படைகளால் கொல்லப்பட்டார். இதன் பின் 2006 மார்ச் படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி அக்மத் கதிரோவின் மகன் ரம்ஜான் கதிரோவ் பிரதமரானார். 2006 ஜூலை ரஷ்யாவின் பரம வைரி ஷமில் பசாயேவ், அண்டை நாடான இங்குஷெட்டியாவில் நடந்த வெடிவிபத்தில் இறந்தார்.

நீண்ட கால இரண்டு மோசமான போர் அழிவை ஏற்படுத்திய மோதல்களில் குரோஸ்னி நகரம் உலகின் மிகவும் உருக்குலைக்கப்பட்ட நகரமாக மாற்றப்பட்டுள்ளது. தலைநகர் குரோஸ்னி தான் இந்த மோதல்களின் மத்தியப் புள்ளியாக என்றும் இருந்துள்ளது. 2003ம் ஆண்டளவில் இந்த நகரில் சேதமடையாத கட்டிடங்களே இல்லை என்று கூறும் அளவுக்கு நிலைமை மோசமடைந்திருந்தது.

**புட்டினின் புனரமைப்பு :**

அதன் பிறகு, போர் முடிவில் குரொஷ்னி நகரம் ரஷ்ய நிதி உதவித் திட்டத்தின் கீழ் புதுத் தோற்றம் பெறும் வகையில் மீள் கட்டமைப்புக்கும் உற்படுத்தப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் யுதத்தால் பாதிக்கப்பட்ட இந்த நகரில் இன்று வானை முட்டும் அளவுக்கு உயரமான நவீன கட்டிடங்களைக் காண முடிகின்றது. இங்கு தான் ரஷ்யாவின் மிக உயரமான மினாரத் கோபுரத்தைக் கொண்ட மிகப் பெரிய பள்ளிவாசலும் அமைந்துள்ளது. புட்டினின் அரசால் புனரமைப்பு என கட்டப்பட்ட இப்பள்ளிவாசல் செச்னியாவின் இதயமாக இதுவே கருதப்படுகின்றது.

கடந்த 20 ஆண்டுகளாக நடந்த போரில் மட்டும் ஐந்தில் ஒரு செச்சினியர் உயிரிழந்திருக்கின்றனர். எண்ணற்றவர்கள் அகதிகளாய் வெளியேற்றப்பட்டிருக்கின்றனர். ஆயினும் ரஷ்யா தன் முடிவில் உறுதியாய், தனக்கு ஆதரவான அரசாங்கத்தை செசன்யாவில் நிறுவியுள்ளது. 2004 இருந்து இன்றுவரை ரஷ்யா அமைத்துள்ள பொம்மை அரசாங்கம் (Puppet Government) தான் செசன்யாவில் செயற்பட்டு வருகிறது.

2009 ஆம் ஆண்டு ஏப்ரலில் ரஷ்யா தன் படைகளை செசன்யாவிலிருந்து திரும்பப்பெற்றது. அதேபோல் செச்சினிய போராட்டகாரர்களும் ஆகஸ்ட் 2009இல் சண்டையை நிறுத்தி உள்ளதாக அறிவித்துள்ளனர். ரஸ்யாவின் வரலாற்றில் நடந்த நீண்ட கால உள்நாட்டு போரின் பின் செசன்யாவை தன்னுள் வைத்திருக்க முழு முதற்காரணம் அந்த பகுதியின் இயற்கை வளம் மற்றும் காஸ்பியன் கடலில் கண்டெடுக்கப்பட்டுள்ள எண்ணெய் வளம் ஆகும். அத்துடன் செசன்யா பிரிந்து சுதந்திரம் அடைந்து விட்டால் அது ரஷ்யாவிற்கு தர்ம சங்கடமான நிலையைத் தரும்.

செசன்ய பிரிந்து விடுதலை பெற்றால் மற்றய குடியரசுகளை பிரிவினைக்கு தூண்டிவிட்டதாய் அமையும் என ரஸ்யா அஞ்சுகிறது. மற்றும் அடிப்படைவாத இஸ்லாமிய ஆட்சி கவ்காஸ் பிராந்தியத்தில் அமைந்து விடும் என்றும் ரஸ்யா அச்சமடைகிறது. இன்றைய உக்ரேனிய போர் சூழ்நிலையில் மட்டுமன்றி, அன்றைய காலத்திலும் ரஷ்யா செசன்னியர்களுடன் போராடு வதை விரும்பவில்லை. அவர்களால் செசன்னியர்களை முழுமையாக வெற்றிக்கொள்ளவும் முடியாது. நிலப்பகுதிகளில் வேண்டுமானால் அவர்கள் ஆதிக்கம் செய்யலாம். ஆனால் காவ்கஷ் மலைப்பகுதிகலெ அவர்களால் என்றும் வெற்றி பெறமுடியாது.

தற்போது செச்சினியாவில் அமைதி நிலவினாலும் எப்போதாவது செசன்னியர்கள் மலைகளிலிருந்து படையோடு வருவார்கள் என்ற அச்சம் இருந்து கொண்டேதானிருக்கும் (ஏனென்றால் 1996 ஆம் ஆண்டு இப்படித்தான் நடந்தது). ரஷ்யா, இதையெல்லாம் நன்கு உணர்ந்தேயிருக்கிறது என்பதும் உண்மை.

ஒருவேளை, ரஷ்யா எதிர்பார்ப்பது போல, செசன்னியர்கள் இன்று சமாதானமாக அமைதிக்கு திரும்பியிருந்தாலும், செசன்னியர்கள் கடந்த காலத்தை மறப்பார்களா என்பதுதான் இப்போது ரஷ்யாவிற்கு இருக்கும் மாபெரும் சவாலான கேள்வியாகும். ●

# ஜூலையில் பணவீக்கம் 60 வீதமாக அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை. 31

இலங்கையின் வரலாற்றில் அதிகபட்ச பணவீக்க விகிதம் 2022 ஜூலை மாதம் பதிவாகியுள்ளது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டில் வருடாந்த புள்ளி மாற்றத்தால் அளவிடப்படும் முதன் மைப் பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 60.8 வீதமாக பதிவாகியுள்ளது.

மேலும், உணவுப் பணவீக்க விகிதம் 90.6 சதவீதமாக அதிகரித்துள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் போக்குவரத்துப் பணவீக்கம் 143.6 வீதம் வரை அதிகரித்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# சீன - இந்திய....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுயாட்சி என்ற ஓர் இணை அமைப்பாக உருவெடுக்கவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகளின் செயல்பாடுகளைச் சீர் தூக்கிப் பார்க்கும் ஒரு மக்கள் அமைப்பாகவும் கூட இது உதவலாம். இதுபோன்ற நுண் அமைப்புகள் உங்களிடமும் செயல்பட்டுக்கொண்டும் இருக்கலாம்,

மோடி-பாஜக விஷயத்துக்கு மீண்டும் வருவோம். ராஜ்பவனில் பின்னிரவுச் சந்திப்பில் அண்ணாமலை தனது தலைவருடன் அதிக நேரம் பேசியதாக அறிவேன். தமிழகத்தில் தற்போதைய சட்டம் ஒழுங்கு நிலவரம், ஊழல், முக்கியமாக, ஆளும்கட்சி ஆதரவுடன் பிரிவினைவாதம் பேசும் சிறு குழுக்களின் துணிச்சலும், அதற்குப் பாராமுகமாக இருக்கும் அரசின் போக்கும் ஆகியவை குறித்த கள நிலவரத்தை பாஜகவின் கண்ணோட்டத்திலிருந்தும் ஓய்வு பெற்ற காவல் துறை அதிகாரியாகத் தனது கண்ணோட்டத்திலிருந்தும் அண்ணாமலை விளக்கியுள்ளார். ஒரு மாநிலத் தலைநகரில் அதிக நேரம் ஒரு பிரதமர் தங்குகிறார் என்றால், அந்தப் பிராந்தியத்தின் பாதுகாப்பு அம்சங்கள், குறிப்பாக இரண்டு விஷயங்கள் குறித்து உளவுத் துறை தகவலளித்திருக்கும் என்று நான் கருதுகிறேன். அவை, ஒன்று - மாநிலத்தின் உள்ளிருந்து செயல்படும் பிரிவினைவாத ஃ தீவிரவாதக் குழுக்கள். இரண்டு - இலங்கையிலிருந்து வரும் சீன அச்சுறுத்தல். 'அமைதிப்பூங்கா'வாகத் திகழும் தென்னகமாம் தமிழகத்தில் புதிதாக ஒரு போர்முனை உருவாவது யாருக்கும் நல்லதன்று. இதுபோன்ற முக்கியமான - அபாயகரமான உளவுத் தகவல்களை மாநிலக் காவல் துறையோ அல்லது அதிகாரிகளோ முதல்வருக்கு அளிக்கிறார்களா என்பது தெரியவில்லை.

முதல்வர் ஸ்டாலினை அவரது அரசியல் ஆலோசகர்களும் அதிகாரிகளும் சரியாக வழி நடத்தியிருந்தால், சர்வதேச சதுரங்கப் போட்டி குறித்த சுவரொட்டிகளில், போட்டி நடத்தும் மாநில முதல்வர் மட்டுமல்லாமல், பாரதக் குடியரசுத் தலைவர் மற்றும் பிரதமரின் படத்தையும் சேர்த்திருக்க வேண்டும் என்று நீதிமன்றம் அறிவுறுத்தும் நிலை வந்திராது. ரஷ்யா-உக்ரைன் போர் காரணமாக, ரஷ்யாவில் நடத்தப்பட்டிருக்க வேண்டிய இந்தப் போட்டியை நடத்தும் வாய்ப்பை சர்வதேச செஸ் கூட்டமைப்பு இந்தியாவுக்கு வழங்கியது. அந்த பாக்கியத்தைத் தமிழகத்துக்கு வழங்கும் முடிவை எடுத்தது பாரதப் பிரதமர்தான் என்பதையும் மறுக்க முடியாது. நீதிமன்றத்தின் கண்டனத்துக்குப் பிறகும், தமிழக அரசு வழக்கறிஞர்கள், பிரதமரின் வருகை குறித்து உறுதி செய்யப் பிரதமர் அலுவலகம் நேரம் கடத்தியதாலும், குடியரசுத் தலைவர் தேர்தல் முடிந்து, திரௌபதி முர்மு பதவியேற்பதற்கு முன்பே சுவரொட்டி டிகள் அச்சாகிவிட்டதாலும் அவர்களின் படங்கள் இடம்பெறவில்லை என்று சப்பை கட்டு கட்டினர். இவ்வளவு பெரிய சர்வதேச நிகழ்வுக்குப் பிரதமர் வந்தாலும் வராவிட்டாலும், அவரது படம் அச்சாகியிருக்க வேண்டும் என்றும், குடியரசுத் தலைவர் தேர்தலுக்குப் பின் அச்சான சுவரொட்டிகளிலும் ஊடக விளம்பரங்களிலும்கூட அவரின் படம் இல்லாதது ஏன் என்றும் நீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

அரசின் செஸ் சுவரொட்டிகளின் மீது பாஜக தொண்டர்கள் ஒட்டியிருந்த பிரதமரின் படத்தின் மீது பெரியார் திராவிடர் கழகத் தொண்டர்கள் கறுப்பு மை பூசியதை எதிர்த்துச் சாலையில் இறங்கிப் போராடிய பாஜக தொண்டர்கள் இதில் ஈடுபட்டோரைக் கைது செய்யவும் காவல்துறைக்கு அழுத்தம் கொடுத்தனர். மோடி - ஸ்டாலின் இணைந்து கலந்துகொண்ட தொடக்க நிகழ்விலும்கூட, முதலில், இரு கட்சித் தொண்டர்களுக்கும் இடையில், தத்தம் தலைவர்களுக்கான கோஷம் எழுப்புவதில் போட்டி நிலவியது. ஆனால், பிரதமரும் முதல்வரும் மேடையில் ஒருவரை ஒருவர் ஆரத் தழுவி, செயற்கையாகப் புன்னகைகளையும் உதிர்த்தனர். மனிதனுக்கு மனிதனே எதிரி என்பது வருத்தமளிக்கும் நிலையான உண்மையாகும். உங்கள் காலை உணவு நேரம் கடந்தமைக்கு என்னை மன்னிக்கவும். என் மாநில, என் நாட்டு அரசியல் குறித்தும் பொது வாழ்வு குறித்தும் பேச இன்னும் நிறைய இருக்கிறது. ●

## அரசியல்...

காலிமுகத்திடல் போராட்டக்கார இயக்கத்தினர் கொழும்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று சனிக்கிழமை முற்பகல் நடத்திய கலந்துரையாடலில் பங்கேற்ற மனோ கணேசன் மேலும் கூறியதாவது:

ரணில் இன்று ஜனாதிபதி. அவருடன் அரசியல் காரணங்களுக்காக எதிரணி என்ற முறையில் நாம் முரண்படலாம். முரண்பாடுகள் உள்ளன. ஆனால், அவர் சட்டப்படித்தான் ஜனாதிபதி ஆகியுள்ளார்.

இடைக்கால ஜனாதிபதி ஒருவர் பாராளுமன்றத்தில்தான் தெரிவு செய்யப்பட முடியும் என சட்டம் கூறுகிறது. அதன்படி அவர் 134 வாக்குகளை பெற்று அவர் ஜனாதிபதி ஆகியுள்ளார். தமிழ் முற்போக்கு கூட்டணி எம்பீக்கள் மாற்று வேட்பாளருக்கு வாக்களித்தோம். அது எம் அரசியல் கொள்கை நிலைப்பாடு. ஆனால், ரணில் இன்று ஜனாதிபதி.

இன்றைய பாராளுமன்றம் மக்களின் மனவுணர்வுகளை பிரதிபலிக்கவில்லை. வெளியே மக்கள் மத்தியில் தேர்தல் நடந்திருந்தால், முடிவுகள் வேறு மாதிரி இருந்திருக்கும். ஆகவே இயன்றவரை சீக்கிரம் புதிய ஒரு பாராளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டு, புதிய மக்கள் ஆணை பெறப்பட்டு, புதிய பாராளுமன்றம் அமைய வேண்டும். ஆகவே சீக்கிரம் "புதிய ஒரு பாராளுமன்ற தேர்தல் தேவை", என்பதையும் மேலதிக ஒரு கோஷமாக சேர்த்துக்கொள்ளுங்கள்.

இங்கே என்னருகில் அமர்ந்து இருக்கும் முன்னிலை சோஷலிச கட்சி நண்பர் புபுது ஜாகொடவின் கட்சி பொது செயலாளர், குமார் குணரத்தினம் பாராளுமன்றத்துக்கு வெளியே "மக்கள் சபை" அமைய வேண்டும் என கூறுகிறார். எம்மை பொறுத்த அளவில், பாராளுமன்றம்தான் இன்று இந்நாட்டில் உள்ள மிகப்பெரும் "மக்கள் சபை". அந்த பாராளுமன்றத்தை எரிக்க முடியாது. ஆகவே அதை தேர்தல் மூலம் கைப்பற்றுங்கள்.

ஜனாதிபதி ரணில், எமது கட்சிக்கும் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் தேசிய அரசு, அமைச்சர் பதவிகள் பற்றி எதுவும் இல்லை. நாடு இன்று எதிர்கொள்ளும் அரசியல், பொருளாதார, சமூக சவால்களை சந்திக்க தேசிய கலந்துரையாடலில் கலந்துக்கொள்ள எம்மை அவர் அழைத்துள்ளார்.

இதுபற்றி நமது கட்சி அரசியல் குழு முடிவு செய்யும். ஆனால், நாம் இந்த தேசிய கலந்துரையாடலுக்கான அழைப்பை சாதகமாக பரிசீலிப்போம். போராட்டக்காரர்கள் மீதான, ஆட்கடத்தல், முறைதவறிய கைது, அவசரகால சட்ட பயன்பாடு, பயங்கரவாத தடை சட்ட பயன்பாடு ஆகியவற்றை நிறுத்துங்கள் என நாம் அவரை சந்தித்து கோருவோம். இதுதான் ஜனநாயக கதவுகளை திறக்கும், தடைகளை நீக்கும் தேசிய கலந்துரையாடல். அதை அவருக்கு எம்மால் சொல்ல முடியும்.

பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கி அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்பது எங்கள் கோரிக்கைதான். அதையும் நாம் ஜனாதிபதி ரணிலிடம் சொல்வோம். உங்கள் கோரிக்கை பட்டியலில் 10, 15, 20 வருடங்களாக சிறையில் இருந்து, தம் வாழ்வையே இழந்து நிற்கும் தமிழ் அரசியல் கைதிகள் முதலிடம் பெறவேண்டும் என்பதை உறுதி செய்யுங்கள். இல்லாவிட்டால் உங்களுடன் எமது கட்சி உங்களுடன் ஒத்துழைக்க முடியாது-என்றார். (அ)

## ரஞ்சனுக்கு...

அனைத்து அரசியல்வாதிகளும் மற்றும் சகல இலங்கையர்களும் எதிர்பார்த்துள்ளோம்."

- இவ்வாறு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை நேற்று பார்வையிட்ட பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்-

நீண்ட நாட்கள் செல்வதற்கு முன் அனைவரின் எதிர்பார்ப்பாக இருக்கும் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு விடுதலை கிடைக்கும் என நான் எதிர்பார்த்துள்ளேன். அந்நாள் வரும் வரை காத்திருக்கின்றேன்.

ரஞ்சன் ராமநாயக்க மனிதாபிமான மிக்க அரசியல்வாதிவாதி மக்கள் சார் கலைஞர் மக்கள் செல்வாக்குள்ள பிரபலம். நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் அவர் மகத்தான பணிகளை ஆற்றியுள்ளார்.

நல்ல பண்புகளைக் கொண்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை இன்று நான் நேரில் சந்தித்து நீண்ட நேரம் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டேன்.

அவர் சுதந்திர குடிமகனாக சமூகத்துக்குத் திரும்பி, உறுதியுடன் சமூக நீதிக்காகப் பாடுபடுவதைப் பார்ப்பதை எனது ஒரே நோக்கம்" - என்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கையின் பிரகாரம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்குப் பொதுமன்னிப்பளித்து அவரை விடுதலை செய்வதற்கான அனைத்துச் செயற்பாடுகளும் பூரணத்துவம் அடைந்திருக்கும் நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று ரஞ்சன் ராமநாயக்கவை நேரில் சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடியமை ரஞ்சன் ராமநாயக்க விடுதலையானதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவின் பக்கமே சென்று விடுவாரோ என்ற அச்சம் காரணமாக இருக்கலாம் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. (அ)

## பயிற்சிக்காக...

ருந்தனர்.

அமெரிக்க கடற்படையின் டக்ளஸ் முன்ரோ என்ற கப்பல் அமெரிக்க கடற்படையின் பணிகளில் இருந்து நீக்கப்பட்டு, வெளிநாட்டு உதவி உடன்படிக்கையின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்டது.

அமெரிக்காவின் முன்னாள் கடற்படை கப்பலான டக்ளஸ் முன்ரோ, அமெரிக்காவில் சிறப்பான புனரமைப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அது விரைவில் இலங்கைக்கு வரவுள்ளது.

இந்நிலையில், இந்த கப்பலில் பணியாற்றி வந்த நிலையில், 9 இலங்கை கடற்படை மாலுமிகள் அங்கிருந்து தப்பியதாக இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தை, அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது. இது தொடர்பாக அதிகாரிகள் சட்ட நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் அது தெரிவித்துள்ளது.

அத்துடன் அமெரிக்காவில் அந்நாட்டின் குடியேற்றச் சட்டங்களை மீறும் நபர்கள் கைது செய்யப்படலாம். அத்துடன் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு நாடு கடத்தப்படலாம்.

மேலும் அமெரிக்காவில் சட்டவிரோதமாக இருப்பவர்கள் 10 ஆண்டுகள் வரை அமெரிக்காவுக்குத் திரும்ப வரமுடியாமல் தடுக்கப்படலாம் என தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

பொருளாதார நெருக்கடியால் இலங்கையில் இருந்து வெளியேறும் மக்கள் இலங்கையில் நிலவும் அரசியல், பொருளாதார நெருக்கடிகள் காரணமாக இலங்கை மக்கள் சட்ட ரீதியாவும் சட்ட விரோதமாகவும் வெளிநாடுகளுக்கு செல்வது அதிகரித்துள்ளது.

பல வருட தவறான அரசியல் முகாமைத்துவம் காரணமாக இலங்கை அதன் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

முதல் முறையாக கடந்த ஏப்ரல் மாதம் வெளிநாட்டு கடனைகளை திரும்ப செலுத்துவதை நிறுத்தியதுடன் நாட்டின் பொருளாதாரம் மோசமாக வீழ்ச்சியடைந்தது.

வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்வதற்கு போதுமான அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லாத காரணத்தினால், மக்கள் மின் துண்டிப்பு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பணவீக்கத்தின் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் சர்வகட்சி அரசில் இடம்பெறாது!

### புத்திக்க பத்திரண திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை. 31

"பாராளுமன்ற உறுப்பினர்களை வளைத்துபோட்டு அமையும் சர்வகட்சி அரசில் தமது கட்சி ஒருபோதும் இணையாது." - என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

சர்வக்கட்சி அரசில் இணையுமாறு அழைப்பு விடுத்து அனைத்து எம்.பிக்களுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடிதம் அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த நகர்வு ஏற்புடையது அல்ல என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண தெரிவித்தார்.

கட்சிகள் இருக்கையில், தனிப்பட்டவர்களை இலக்கு வைத்து அனுப்படும் கடிதம் பேரம் பேசுதலாகவே அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# கடிதங்கள் வருவதில் தாமதம் ஏற்படலாம்

கொழும்பு, ஜூலை. 31

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக கடிதங்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஊழியர்கள் முறையாக கடமைக்கு சமூகமளிக்காததால் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டதாக பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, வெளிநாட்டு தபால் கட்டணங்களை எதிர்வரும் முதலாம் திகதி முதல் திருத்தியமைக்க தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது. (அ)

## தலைமைப்...

டுக்கவேண்டிய பொறுப்பு எனக்கு உள்ளது. எனவே, கூட்டணியின் தலைமைப் பதவியில் இருந்து விலகி, அப்பணியை செய்ய எதிர்பார்க்கின்றேன். கூட்டணியில் தகுதியானவர்கள் உள்ளனர். அவர்களில் ஒருவர் தலைவராவார்.

மலையக அபிலாஷை ஆவணம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிடம் கையளிக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

## நாட்டின்...

மாளிகையில் இருந்து விசேட உரையொன்றை ஆற்றியபோது இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது அனைவரும் ஏற்றுக் கொண்ட ஒன்று. இது தொடர்பில் யாரும் விவாதம் செய்ய மாட்டார்கள். கொழும்பில் உள்ள சில அரசியல்வாதிகள் விவாதிப்பார்கள்.

கிராமத்தில் அது இல்லை. கிராமத்து விகாரைக்கு செல்லுங்கள். அங்கு என்ன சொல்கிறார்கள். கிராமத்து பாடசாலைக்கு செல்லுங்கள். என்று கூறுகிறார்கள்.

நாம் ஏன் இந்த தகவலை கூறுவதில்லை. நாம் தற்போது ஒன்றிணைய வேண்டும் என்று. அந்த தகவலை கொண்டு செல்லுங்கள். நீங்கள் அனைவரும் கடந்த மே 9 ஆம் திகதி முதல் எதிர்கொண்ட துன்பங்களை நான் அறிவேன். சிலருக்கு வீடு இல்லாமல் போனது. சிலருக்கு கிராமத்தில் இருந்து செல்ல வேண்டி ஏற்பட்டது. அச்சுறுத்தல் இருந்தது. அழைத்து கூறினார்கள் உங்கள் அனைவரையும் கொலை செய்வோம் என்று. அந்த காலம் தற்போது நிறைவடைந்துள்ளது. நாம் ஒன்றிணைய முயற்சிப்போம்.

நாம் ஒன்றிணைந்து நாட்டுக்காக உழைப்போம். அவ்வளவுதான் நான் கேட்கிறேன். இந்த இடத்தில் ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இரண்டு கட்சியினரும் உள்ளனர். இந்த அரங்கில் மீதமுள்ள பகுதியும் நிரம்பி இருப்பதைப் பார்க்க எனக்கு விரும்பம் உள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள், காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவர்களையும் அழைத்து வரை முடியாதா?. இதை நிரப்புவோம். இதை ஐக்கிய தேசிய கட்சிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் மாத்திரம் மட்டுப்படுத்த வேண்டியதில்லை-என்றார். (அ)

## சர்வகட்சி...

மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்து பிரதமருக்கு அதிகாரங்களை வழங்கவேண்டும் என்ற கோரிக்கை வலுத்த நிலையில் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதியின் அதிகாரங்களை குறித்து 19 ஆவது திருத்தத்தை மீண்டும் இந்த அரசாங்கம் கொண்டு வருமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஆகவே சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்துகொள்வதில் சிக்கல் காணப்படுகிறது.

தற்போதைய சூழ்நிலையில் தேர்தலை நடத்த முடியாது. அதற்கு பதிலாக புதிய சக்தி ஒன்று உருவாக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

## நீதி,...

பகுதியில் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதார நிலை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடன் கலந்துரையாடப்பட்டு வருகிறது.

உலக வங்கி அவசர உதவிகளை வழங்க ஆரம்பித்துள்ளது. இந்த நிதி நெருக்கடியில் இருந்து நாட்டை கட்டியெழுப்புவதற்கான அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் நாட்டில் நீதி மற்றும் சமத்துவத்தை பாதுகாக்கவே நாட்டில் அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாவும் வேறு எந்த காரணங்களுக்காகவும் அல்ல-என்றார். (அ)

## எரிபொருள்...

நிறைவேற்ற முடியாதென இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே தட்டுப்பாடாக இருந்த சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் சற்று சீராகத் தொடங்கியுள்ள நிலையில் ,இப்போது எரிபொருளுக்கான தட்டுப்பாடு தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

எவ்வாறாயினும் அரபு நாடுகளிடம் இருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் மேற்கொண்டுவருகிறது. அது சாத்தியப்பட்டால் அடுத்த மாதம் எரிபொருள் தட்டுப்பாடு சீராகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் தம்மிக்க பெரேராவை பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகவேண்டாமென வலியுறுத்தியிருக்கும் ஜனாதிபதி ரணில், டொலர்களை ஈட்டும் அமைச்சுப்பொறுப்பொன்றை அவருக்கு வழங்கவுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

அதேவேலை, நாட்டில் எரிபொருள் பிரச்னையை முன்னுரிமை அடிப்படையில் தீர்க்கவேண்டுமெனவும் ஜனாதிபதி ரணில் கூறியிருக்கிறார் என அரச வட்டாரங்களில் இருந்து அறியமுடிந்தது. (அ)

ஈழநாடு
Eelanadu

# டலஸ் அணியை வளைத்துப்போட மொட்டு கட்சி பகீரத பிரயத்தனம்!

கொழும்பு, ஜூலை. 31

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர்கள் சிலரை மீண்டும் கட்சியில் இணைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

பஸில் ராஜபக்ஷவின் வழிகாட்டலுடன் இதற்கான நகர்வுகள் இடம்பெறுகின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து சுயேச்சையாகச் செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடன் அடுத்த வாரமும் பல கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாக அந்தக் கட்சியின் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் கட்டளைச் சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரத்தில் மூன்றில் இரண்டு பங்கு கட்சிக்கு தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்பதற்காகவே இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

இந்த விடயம் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி சாகர காரியவசம் வினவிய போது, சதிகாரர்களிடம் சிக்கியுள்ள தமது கட்சியின் குழுவொன்று எதிர்காலத்தில் நிச்சயமாக பொதுஜன பெரமுனவில் இணையும் என தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலில் கட்சியின் பலத்தை காட்டுவதற்கு ஏற்கனவே பல வியூகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அத்தேர்தலில் தமது கட்சி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை நிச்சயமாக பெற்றுக்கொள்ளும் எனவும் பொதுஜன பெரமுனவின் செயலாளர் கூறினார். (அ)

## கடந்த வாரம் நடந்ததைப் போன்றே ஓக. 5 வரை பாடசாலைகள் நடக்கும்

கொழும்பு, ஜூலை. 31

கடந்த வாரம் பாடசாலைகள் நடத்தப்பட்டதைப் போலவே ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் 5ஆம் திகதி வரை பாடசாலைகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளது. அதன்படி, அரச மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளை திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் மாணவர்கள் வீட்டிலிருந்து கல்வி கற்க முடியும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் பாடசாலைகளை நடத்துவது தொடர்பில் கல்வி அமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. (அ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 28 - 10 - 1964

மறைவு 29 - 07 - 2022

### வைத்திலிங்கம் ரவீந்திரன் (ரவி)

*(உரிமையாளர் - சயன் உணவகம், மல்லாகம் சந்தி)*

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், மல்லாகம் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் ரவீந்திரன் அவர்கள் 29.07.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சோமசுந்தரம், நவமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், அருட்செல்வி அவர்களின் அன்புக் கணவரும், சியானி (ஜேர்மனி), நிஷானி, பிரசன்னா (வலிவடக்கு பிரதேச சபை), தனஞ்சயன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தஜநாதன் (ஜேர்மனி), கிறேஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும், யவின் (ஜேர்மனி), ரூதிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இந்திரா, சிறிதரன் மற்றும் மனோகரன் (மன்னார்), தயாபரன் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் வசந்தகுமாரி (லண்டன்), யோகேஸ்வரி (மன்னார்), புஸ்பராணி (நோர்வே), காலஞ்சென்ற அருந்தவநாயகி (ஆசிரியை) மற்றும் சிறிதரன், சுகிர்தன் (தவிசாளர் வலி வடக்கு பிரதேச சபை), பிரபாகரன்(மலேசியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 01.08.2022 திங்கட்கிழமை அன்று மு.ப 10.00 மணியளவில் மல்லாகம் சந்தியடியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**சுகிர்தன் - மச்சான்**
(தவிசாளர் வலி வடக்கு பிரதேச சபை)

தொடர்புகளுக்கு:
**தஜன் - மருமகன்** Mobile : +4917634165079
**தயா - சகோதரன்** Mobile : +4792287360
**சுகிர்தன் - மச்சான்** Mobile : +94770279676
**பிரசன்னா - மகன்** Mobile : +94774539812

## மகாவலி ஆற்றில் நீராடிய இரண்டு சிறுவர்கள் மாயம்!

கொழும்பு, ஜூலை 31

கண்டி, ஜனசவிகம பிரதேசத்தில் மகாவலி ஆற்றில் நீராடச் சென்ற இரண்டு சிறுவர்கள் நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளனர்.

நீராட வந்த நால்வரில் இருவர் இவ்வாறு நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பல்லேகல பிரதேசத்தில் வசிக்கும் 13 மற்றும் 14 வயதுடைய இரண்டு சிறுவர்களே காணாமல் போயுள்ளனர்.

அவர்களைக் தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பல்லேகல பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## முதலாம் தரத்துக்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி ஓகஸ்ட் 15 வரை நீடிப்பு

கொழும்பு, ஜூலை 31

2023 ஆம் ஆண்டில் தரம் 01 இற்கு மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியை நீடிக்குமாறு பெற்றோர்கள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க இது மேற்கொள்ளப்பட்டதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி ஒகஸ்ட் 15 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

## சிறு போகச் செய்கை உரம் பிரமந்தனாறில் விநியோகம்



கிளிநொச்சி, ஜூலை. 31

சிறு போக செய்கைக்கான உரம் அனைத்து கமநல சேவை நிலையத்தின் ஊடாக ஒரு ஏக்கருக்கு 20 கிலோ வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது.

நேற்று முன்தினம் புளியம்பொக்கணை கமநல சேவைத் திணைக்களத்தின் ஊடாக பிரமந்தனாறு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சிறு போகச் பயிர்ச் செய்கைக்கான யூரியா உரம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அத்துடன் ஒரு மூட்டை யூரியாவின் விலை 10 ஆயிரம் ரூபாய்க்கு கமநல சேவைத்ஷ திணைக்களத்தின் ஊடாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

நீண்ட நாட்களுக்குப் பின் தமக்கு யூரியா உரம் கிடைக்கப் பெற்றதை அடுத்து விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். (அ)

## மரண அறிவித்தல்



### திருமதி சின்னதம்பி நாகமுத்து

கிளிநொச்சி இயக்கச்சி சங்கத்தார்வயலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னதம்பி நாகமுத்து அவர்கள் 29.07.2022 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா, சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும்,காலஞ்சென்ற இராசகாரியர் சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகரத்தினம், கனகசிங்கம், செல்வமணி, செல்வராணி, காந்தரூபன், காந்தநிதி, செல்வநிதி (ஆசிரியை- இயக்கச்சி), கனகலிங்கம் (தளபதி மணியரசன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான செல்லையா, பொன்னம்மா, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்தினசிங்கம், சுந்தரலிங்கம், கமலேஸ்வரி, ஜெயக்குமாரி (ஆசிரியை- கோவில் வயல்), காலஞ்சென்ற சாந்தகுமார், சுகிர்தா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,கிருபாலினி, துஷியாழினி (அவுஸ்திரேலியா), இரத்தினராசா, செந்துஜா (பிரதேச செயலகம் - கிளிநொச்சி), செந்தீபா (லண்டன்), ரியாலினி, வதனராசா (சமூர்த்தி உத்தியோகத்தர்), கஜிபன் (கனடா), யுகிதன், கிரிசரன், பகோஜன், தமிழினி, அருணிகா, கிருஜன், மிதுசன், கிருசோபன், வித்தகன், கலையரசி, தேனன், தேநிலன், சதுரஷா ஆகியோரின் அன்புப் பேத்தியும், கோபினா, ஆரோன் (அவுஸ்திரேலியா), அகீனா, அபீனா, அமீனா(லண்டன்), சகீனா, அகீசன், அபீசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 31.07.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று பி.ப 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் ஆலங்கட்பள்ளம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**கிரி - பேரன்**

தொடர்புகளுக்கு:
**கிரி - பேரன்**
Mobile : +94773511665
**இரத்தினராசா - பேரன்**
Mobile : +447400404020
**சுகிர்தா - மருமகள்**
Mobile : +447511743346
**கிரிஷா - குடும்பத்தினர்**
Mobile : +61432527217

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

*6.00 மணி* : பக்திப்பாடல்கள்
*6.30 மணி* : வணக்கம் டான்
*6.35 மணி* : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
*6.55 மணி* : இன்றைய பலன்
*7.30 மணி* : இன்றைய பத்திரிகைகளில்
*8.30 மணி* : காலை செய்திகள்
*9.00 மணி* : கலாட்டா காலை (நேரலை)
*10.30 மணி* : அறிந்தும் அறியாமலும்
*11.00 மணி* : BEAT BOX
*11.30 மணி* : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**

*12.00 மணி* : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
*1.00 மணி* : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



*1.30 மணி* : வீக் என்ட் மூவி-திமிரு
*04.30 மணி* : உதவும் கரங்கள்
*5.00 மணி* : COFFE WITH பிரமுகர்
*6.00 மணி* : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்



**இரவு**

*07.00 மணி* : SPOTLIGHT- தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்



*08.00 மணி* : இரவுச் செய்திகள்
*09.00 மணி* : டான் பட்டிமன்றம்



*10.00 மணி*: -நேர்கொண்ட பார்வை

## DAN COMEDY HD

**காலை**

*6.00 மணி* : சிரி சிரி சிரி
*8.00 மணி* : சிரிப்பு சரடிவெடி
*10.00 மணி* : ஒரு பட கொமடி
*11.00 மணி* : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

*1.00 மணி* : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
*3.00 மணி* : குண்டக்க மண்டக்க
*5.00 மணி* : ஒரு பட கொமடி
*6.00 மணி* : கொமடி கலாட்டா

**இரவு**

*8.00 மணி* : ஒரு படக்கொமடி
*9.00 மணி* : சிரிப்போ சிரிப்பு
*10.00 மணி* : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

*6.00 மணி* : பனிப்பூக்கள்
*7.00 மணி* : திசை எட்டும் இசை எட்டும்
*8.00 மணி* : வணக்கம் டான் மியூசிக்
*9.00 மணி* : மெல்லிசை
*10.00 மணி* : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

*12.00 மணி* : ராஜா ராணி
*1.00 மணி* : விசை இசை
*3.00 மணி* : வட்ஸ் அப் (நேரலை)
*4.00 மணி* : டீ டைம் ராகங்கள் (நேரலை)
*5.00 மணி* : இனிது இனிது
*6.00 மணி* : என்றென்றும் இசை
*7.00 மணி* : ஓய்வெடு நிலவே

**இரவு**

*8.00 மணி* : காற்றில் வரும் கீதம்
*9.00 மணி* : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி TV CHANNEL-1

**காலை**

*5.15 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*6.00 மணி* : தரம் 07 - தமிழ்
*6.45 மணி* : தரம் 08 - தமிழ்
*7.30 மணி* : தரம் 09 - கணிதம்
*8.15 மணி* : தரம் 10 - கணிதம்
*9.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
*10.00 மணி* : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
*11.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

*12.00 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*1.00 மணி* : தரம் 07 - தமிழ்
*2.00 மணி* : தரம் 08 - தமிழ்
*3.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
*3.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
*4.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
*5.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
*5.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
*6.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

*7.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஐ ரிவி

**காலை**

*05.00 மணி* : சிவாய மந்திரம்
*06.00 மணி* : சுப்ரபாதம்
*06.30 மணி* : சுப்ரபாதம்
*07.00 மணி* : இன்றைய சிந்தனை
*07.05 மணி* : இன்றைய நாள்
*07.20 மணி* : திருமுறையும் பொருளும்
*07.30 மணி* : மங்கள இசை
*08.00 மணி* : அருளுரை
*08.30 மணி* : திருவாசகம்
*09.00 மணி* : திருவிழா-01
*10.00 மணி* : பஜனை
*10.30 மணி* : தமிழகசோவில் திருவிழா
*11.00 மணி* : பக்திமலர்

**பகல்**

*12.00 மணி* : திரையில் பக்தி
*12.30 மணி* : திருவிழா-02
*06.00 மணி* : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

*07.00 மணி* : செய்திகள்
*07.30 மணி* : அருளுரை
*08.00 மணி* : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

*7.00 மணி* : நாளொரு நற்சிந்தனை
*7.30 மணி* : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
*8.00 மணி* : ஜெபமாலை
*09.30 மணி* : மன்றாடு
*10.00 மணி*: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
*10.30மணி* : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

*12.00 மணி* : திருப்பலி (திருகோணமலை)
*01.00 மணி* : திருப்பலி (மட்டக்களப்பு)
*03.00 மணி* : திருப்பலி (யாழ்ப்பாணம்)
*04.00 மணி*: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
*05.00 மணி* : திருப்பலி (திருகோணமலை)
*06.00 மணி* :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
*7.00 மணி* : ஞானவழி
*7.30 மணி* : படம்

## Pirai Television

**காலை**

*6.00 மணி* : கிராத்
*7.00 மணி* : இறை சிந்தனை
*7.30 மணி* : இஸ்லாமிய பாடல்
*8.00 மணி* : கலந்துரையாடல்
*9.00 மணி* : இஸ்லாமிய சீரிஸ்
*10.00 மணி* : மனதோடு பேசலாம்
*10.30 மணி* : கண் வசண்ணம் கை வண்ணம்
*11.00 மணி* : சுவனப்பாதை
*11.30 மணி* : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

*12.00 மணி* : லுகர் அதான்
*12.30 மணி* : இஜ்லாமிய வரலாறு
*1.00 மணி* : இஸ்லாமிய திரைப்படம்
*2.00 மணி* : கஸீதா
*2.30 மணி* : இறை சிந்தனை
*3.00 மணி* : பாடல்கள்
*3.30 மணி* : பள்ளிவாசல் ஆவணப்படம்
*4.00 மணி* : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
*5.00 மணி* : இறை தென்றல்
*6.00 மணி* : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

*7.00 மணி* : பிறை பிரசங்கம்
*8.00 மணி* : இஸ்லாமிய வரலாறு